ISSN 2792-1050

# வெண்ணிலா

காலாண்டுச் சஞ்சிகை
Quarterly Magazine

වෙණ්ණිලා
VENNILA

இணைய தளம்
www.vennilamanjari.com

## கலாஜோதி பீ. ரீ. அஸீஸ்



ஐந்தாவது ஆண்டு 17

## 5 ஆவது ஆண்டு சிறப்பிதழ்

இதழ்: 17. ஏப்ரல் - ஜூன் 2025. ரூபா. 150/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



TYPESETTING
GRAPHIC DESIGNING
PHOTOCOPY
OFFSET PRINTING
DIGITAL PRINTING
LAMINATING
BINDING
&
MUCH MORE SERVICES
at Cheapest rates.

Jesa Grafix
FINEST CREATIVE & PRINTING SOLUTION
PHOTOCOPY | PRINT | SCAN
075 656 9393

No. 281, Main Street, Maruthamunai
**jesagrafix24@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாண்டுச் சஞ்சிகை **வெண்ணிலா** ISSN 2792-1050

**ஐந்தாவது ஆண்டு - இதழ்: 17 ஏப்ரல்-ஜூன் 2025.**

*இணைய தளம்:* www.vennilamanjari.com

வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.

**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்**
kavignarsagaffar@gmail.com

**முகவரி:**
378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை - 03 # 32314
இலங்கை.

**மின்னஞ்சல்:**
vennilakavithaimanjari@gmail.com

**தொடர்பு** : 077 6968 697
**வட்ஸ்அப்** : 077 6968 671

**தகவல் தொழிநுட்பம்:**
ஏ. ஜி. அப்ரான் முஹம்மத்
(றுகுணு பல்கலைக்கழகம்)

**அட்டை, பக்க வடிவமைப்பு:**
எஸ். ஏ. அப்துல் கப்பார் DICP, DIHF & DIEC
abdulgaffar9@gmail.com

**அச்சு:**
எஸ். ஏ. ஜெஸீம்
ஜெஸா கிரபிக்ஸ், மருதமுனை.

**வெளியீடு:**
டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம்
தொடர்பு: 07 5858 5656

**படங்கள்:**
நன்றி - கூகிள்.

வெண்ணிலா சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துகளுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை அறியத்தரல் வேண்டும். பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. படைப்புகள் கணினியில் அல்லது கைத்தொலைபேசியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சல் அல்லது வட்ஸ்அப் மூலமாக அனுப்பவேண்டும்.

வெண்ணிலா சந்தா விபரம்:
தனியிதழ் **150/=** தபாற்செலவு **100/=**
ஆண்டுச் சந்தா **1000/=**
(தபாற்செலவு உட்பட)

வங்கி மூலம் பணம் செலுத்துவோர்
S A ABDUL GAFFAR
Bank of Ceylon, Kalmunai
A/C - 6106068
என்ற இலக்கத்திற்கு பணத்தை
வரவிலிட்டு பற்றுச் சீட்டின் பிரதியை
ஆசிரியர் - வெண்ணிலா
378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை - 03 # 32314
என்ற முகவரிக்கு அல்லது
vennilakavithaimanjari@gmail.com
என்ற மின்னஞ்சலுக்கு அல்லது
0776968671 என்ற வட்ஸ்அப்
இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


**ஆசிரியரிடமிருந்து: (5)**
- 5ஆவது ஆண்டில்...

**அட்டைப்படக் கட்டுரை: (6-12)**
- கலாஜோதி பீ. ரீ. அஸீஸ்
- ஏ. எம். கஸ்புள்ளா

**தடம்பதித்த மூத்த கவிஞர்: (13)**
- அஷ்ரபா நூர்தீன்

**சிறப்புப் பார்வை: (14-16)**
- ஆகாய வீதியில்...
- கலாபூஷணம் எம். எம். மன்ஸூர்

**சிறப்புக் கவிதை: (18-19)**
- இதுதான் வெண்ணிலா!
- கவிஞர் அலியார் T.O.

**மருத்துவக் கட்டுரை: (20-25)**
- பித்தப்பைக்கற்களும் நிவாரணமும்
- Dr. ஜலீலா முஸம்மில்

**தேடல்: (26-33)**
- பிரமிள் ஏன் போற்றப்படுகிறார்...
- கவிப்பொய்கை ஜவ்ஸான்அஹமட்

**கட்டுரைகள்: (17, 34)**
- நகைச்சுவை
- ஒலுவில் நழீம் ஹனீபா,
- ஓய்வு நேரங்களைப் பயனுறக்...
- ஜெனீரா தௌபீக், கிண்ணியா.

**நூல் நயம் / வெளியீடு: (36-45 )**
- பிஞ்சு மனம்
- சுமைரா அன்வர்
- வண்டில் மாமா
- மூதூர் றிஸ்வின்
- மொழியின் சுவாசம்
- பேராசிரியர் அ. சுமதி மணி
- மஞ்சள் மாம்பூ
- Dr. ஜலீலா முஸம்மில்

**நாமும் அறிவோம்: (71)**
- பனிக்கரடி

**சிறுகதைகள்: (46-79)**
- கொட்டார்ர சந்தியின் கதை
- டீன் கபூர்
- ஆறாத நெஞ்சம்
- எம்மெஸ்ஸெம் ஜமீல்
- அஸ்தமிக்கின்ற ஆசைகள்
- முஸத்தீக் ஜே முஹம்மத்
- சிறகிழந்த பறவை
- கிண்ணியா சபீனா
- எனது அலமாரி
- ஏ. ஆர். ஏ. சத்தார்
- வாப்பாவின் துஆ
- ஏ. எம். கஸ்புள்ளா

**மொழிபெயர்ப்புக் கவிதை: (65)**
- விளக்கின் கீழ்
- மாவனல்லை எம். எம். மன்ஸூர்

**மஞ்சரி கவிதைகள்: (80-89)**
- வெலிகம ரிம்ஸா முஹம்மத்
- தியத்தலாவ எச். எப். ரிஸ்னா
- ஹஸீனா ஆதம்பாவா
- மாஹிரா ஹமீட் அஸ்ஹர்
- இமையி
- கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன்
- அலெக்ஸ் பரந்தாமன்
- கிண்ணியா சபீனா
- ஒலுவில் நழீம் ஹனீபா

**படித்தவற்றில் பிடித்தவை: (90-91)**
- கோபி கோபிகா (இந்தியா)
- எழுகவி

**உங்களிடமிருந்து: (92-93)**
- வாசகர் பதிவுகள்.
- காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
- கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன்
- கவிஞர் ஏ.எம். கஸ்புள்ளா

**சந்தா விபரம்: (94)**

**வெண்ணிலா இதழ்கள்: (95)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் வெண்ணிலா!

**வெண்ணிலா** கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து 16 இதழ்களை காலந்தப்பாது வெளியிட்டு, ஐந்தாவது ஆண்டின் முதற் காலாண்டிதழாக 17ஆவது இதழ் **5ஆவது ஆண்டு சிறப்பிதழாக** உங்கள் கரங்களிற் தவழ்கிறது. இதன் வெற்றிக்குத் துணை நின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அடுத்து க. பரணீதரன் அவர்களை பிரதம ஆசிரியராகக் கொண்டு மாதம் தோறும் சிறப்பிதழொன்றையும் இணைத்து வெளிவருகிறது, **ஜீவநதி.** ஜீவநதி வெளியீட்டகத்துக்கு சென்ற ஆண்டு (2024) சாதனை ஆண்டாக அமைந்துள்ளது. 12 மாத இதழ்கள், 10 ஆளுமைச் சிறப்பிதழ்கள், 3 ஆவணச் சிறப்பிதழ்கள் என 25 இதழ்களை வெளியீடு செய்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக 111 நூல்களை ஜீவநதி பதிப்பகம் வெளியீடு செய்துள்ளது. இது ஓர் இமாலய சாதனை. ஜீவநதியின் 250ஆவது சிறப்பிதழ் 44 ஈழத்துப் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைச் சிறப்பிதழாக பெரிய அளவில் 164 பக்கங்களில் ஜனவரி 2025இல் வெளிவந்துள்ளது. இது ஆசிரியர் க.பரணீதரன் அவர்களின் அயராத முயற்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றி. சாதனை தொடர **வெண்ணிலா** மனமாற வாழ்த்துகிறது.

மற்றையது **'ஞானம்'** மாத இதழ். கடந்த 25 ஆண்டுகளாக வெளிவந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கும் கலை இலக்கியச் சஞ்சிகை. அதன் 300ஆவது இதழ் எதிர்வரும் மே 2025இல் வெளிவர இருக்கிறது. இதன் ஆசிரியர் குழு - ஆசிரியர்: ஸ்தாபகர் தி. ஞானசேகரன், இணை ஆசிரியர்: ஞானம் ஞானசேகரன், நிர்வாக ஆசிரியர்: ஞானம் பாலச்சந்திரன் ஆகியோரின் பெரும் முயற்சிக்கு வெண்ணிலா வாழ்த்தி மகிழ்கிறது.

மேலும் வெண்ணிலாவின் தொடர்ச்சியான வளர்ச்சிக்குச் சந்தாத்தாரர்களாக இணைந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

தொடர்ந்தும் இவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என்ற பெரும் எதிர்பார்ப்புகளுடன்!

உங்கள் அன்பின் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டைப்படக் கட்டுரை**

## கிண்ணியா மண் தந்த பன்முக ஆளுமை

# கலாஜோதி பீ. ரீ. அஸீஸ்

தொகுப்பு:

**- எழுத்தாளர் ஏ. எம். கஸ்புள்ளா -**

*பல்வேறு வரலாற்று சிறப்பு மிக்க கிண்ணியா மண் இலக்கிய செழுமைமிக்க ஓர் ஊராகும். 19 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இப்பகுதி சிறப்புப் பெற்று விளங்குகிறது. இலக்கியத்திலும் ஏனைய இஸ்லாமிய கலை வடிவங்களின் வளர்ச்சியிலும் கிண்ணியாவின் முக்கியத்துவம் அளப்பரியது.*



கலாபூஷணம் பீ. ரீ. அஸீஸ்

*வாய்மூல நாட்டார் கவி, எழுத்துரு கிராமியக் கவிகள், பக்கீர் பைத், சீனடி, பொல்லடி, சிலம்படி, தெருக்கூத்து, ஹஸீதா மற்றும் இலக்கியப் படைப்புகள் என்பன இங்கு சிறப்புடன் விளங்கும் கலை வடிவங்களின் சிலவாகும்.*

*இக்கலை வடிவங்கள் தொடர்ந்தும் உயிர்ப்புடன் திகழ்வதற்கு கலாஜோதி பீ. ரீ. அஸீஸ் அரும்பணியாற்றி வருகின்றார். அவரது இலக்கிய செயற்பாட்டை கௌரவிக்கும் முகமாக 50 ஆண்டுகள் கடந்த பொன்விழா சிறப்புக் கொண்டாட்டம் ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

பெரியாற்றுமுனை, கிண்ணியா - 07 எனும் முகவரியினைச் சேர்ந்த எழுத்தாளர் பீ. ரீ. அஸீஸ் கலை இலக்கியத்தின் மூலம் சிறந்த சமுதாய கட்டமைப்பினை உருவாக்குவதில் பன்முக ஆளுமையுள்ள ஒருவராக விளங்குகின்றார்.

தமது தனித்துவமான கலாசார பண்பாடுகளை பேணுவதிலும் அவற்றினை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதிலும் இவரது பங்கு அளப்பரியது.

கவிதை, கட்டுரை, சிறுவர் இலக்கியப் படைப்புகள், ஆய்வுக்கட்டுரைகள் என விரிவடைந்து செல்கின்றன, இவரது இலக்கியப் பணிகள். மேலும் உச்சம் தொடும் படைப்புகளாக நாட்டாரியலும், நூல் திறன் நோக்கும் வளர்ச்சி கண்டுள்ளன.

தொடர்ந்தேர்ச்சியாக இலக்கியப் பணி செய்துவரும் இவர் 1974 - 2024 வரை சிறந்த ஓர் எழுத்தாளராக வலம்வந்து கொண்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐந்து தசாப்தங்களைக் கடந்து பொன் விழா காணும் இவர், இதுவரை 19 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளதுடன், மீள்மதிப்பு, கிராமியப் படைப்புகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் என பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

சிறந்த கலைஞருக்கான விருதினை 2023.12.03 ஆம் திகதி கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் திரு. எஸ். செந்தில் தொண்டமான் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இவரது இலக்கிய ஆற்றலையும் ஆளுமையையும் கருத்திற்கொண்டு 2016 நேத்ரா TV நேர்காணலுக்காக இவரை அழைத்து கௌரவித்தது. அத்தோடு 2022 ஊவா சமூக வானொலியும் இவரை நேர்காணல் செய்திருந்தது. 2022 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் பிரதி ஞாயிறு தோறும் 9.00 மணிக்கு வானலைகளில் தவழ்ந்து வந்து நேயர்களின் பாராட்டைப் பெற்ற 'எங்கள் ஊர்' எனும் நிகழ்ச்சிக்கு பலமுறை அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கலை இலக்கியவாதிகளை நூல் திறன் நோக்கு எனும் மகுடத்தின் கீழ் நாடறியச் செய்துள்ளதுடன், 50 எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புகளை உள்ளடக்கிய தொகுப்பாக 'முதுமையில் விளைந்த புதுமைகள்' எனும் நூல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்டது. இந்நூலினை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியீடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.




நபிகள் நாயகம் மற்றும் மாண்புறும் மாநபி எனும் மகுடங்களின் கீழ் ஆன்மீக நூலும் வெளியீடு செய்துள்ள இவர், கவிஞர் மர்ஹூம் அண்ணல் அவர்களின் 'அண்ணல் கவிதைகள்' நூலை காலத்தின் தேவை கருதி மீள்பதிப்பும் செய்துள்ளார். தனது காத்திரமான இலக்கியப் படைப்புகள் மூலம் கிண்ணியா மண்ணுக்கு கீர்த்தியினை பெற்றுத் தந்திருக்கும் இவரை வாழும்போது வாழ்த்துவோம் எனும் மகுடத்தின் கீழ் நாமும் வாழ்த்துவோம்.

## பீ. ரீ. அஸீஸ் சுய தகவல்கள்:

| | |
|---|---|
| பெயர் | : பீ.ரீ. அஸீஸ் |
| முகவரி | : 46/3, பெரியாற்றுமுனை, கிண்ணியா - 07. |
| தொ. இல. | : 077 290 2042 |
| தந்தையார் | : காதர் மொகைதீன் பிச்சைத் தம்பி |
| தாயார் | : அலியார் பனிக்கர் ஹாஜரா உம்மா |
| பிறந்த திகதி | : 1951.08.06 |
| பிறந்தகம் | : மாலிந்துறை, கிண்ணியா |
| வளர்ந்தகம் | : முள்ளிப் பொத்தானை |
| புகுந்தகம் | : பெரியாற்றுமுனை, கிண்ணியா |
| புகுந்தநாள் | : 1973.04.22 |
| பிள்ளைகள் | : 06 (04 ஆண்கள், 02 பெண்கள்) |

## எழுத்துத்துறை ஆரம்பம்:

*1974* ஆம் ஆண்டு சிறுவனாக இருக்கும் போதே 'பேசும் தெய்வம்' என்ற தலைப்பில் சிறுவர் பாடலாக எழுதிய ஆக்கம் தினகரன் பத்திரிகையில் வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அலையோசை** இரு மாத தட்டச்சிதழ் *(1980),* **முத்துக்கள்** கையெழுத்துப் பத்திரிகை *(1981)* ஆகிய இதழ்களுக்கு பொறுப்பாசிரியராகவும் **கவிதைச் சரம்** இரு மாத இதழுக்கு துணை ஆசிரியராகவும் பணி புரிந்துள்ளார்.



**புனைப் பெயர்: கிண்ணியாச் செல்வன்.**

## இதுவரை வெளிவந்துள்ள நூல்கள்:

| | | |
|---|---|---|
| ***01.*** | உணர்வூட்டும் முத்துக்கள் (கவிதை) | - ***2011*** |
| ***02.*** | சிறுவர் பாடல்கள் | - ***2011*** |
| ***03.*** | அஸீஸ் கவிதைகள் | - ***2011*** |
| ***04.*** | தாலாட்டுப் பாடல் | - ***2012*** |
| ***05.*** | நாட்டார் / கிராமிய பாடல்கள் | - ***2012*** |
| ***06.*** | உதயம் (சிறுவர் பாடல்) | - ***2012*** |
| ***07.*** | மாண்புறும் மாநபி (கவிதை) | - ***2012*** |
| ***08.*** | தென்றலே வீசி வா (சிறுவர் பாடல்) | - ***2014*** |
| ***09.*** | சுட்ட பழமே சுவை அமுதே (கிராமியத் தாலாட்டுப்பாடல்) | - ***2014*** |
| ***10.*** | மனசெல்லாம் மகிழ்கிறது (கிராமியக் கவிகள்) | - ***2015*** |
| ***11.*** | துணிந்து நில் (சிறுவர் பாடல்) | - ***2015*** |
| ***12.*** | சின்னப் பாப்பா (சிறுவர் பாடல்) | - ***2016*** |
| ***13.*** | நினைவொன்றே போதும் (கவிதை) | - ***2016*** |
| ***14.*** | செவ்வானச் சித்திரம் (சிறுவர் பாடல்) | - ***2017*** |
| ***15.*** | மஞ்சள் குருவி (சிறுவர் பாடல்) | - ***2019*** |
| ***16.*** | ஆர உட்டுத் தேடுவதோ (நாட்டார் பாடல் பற்றிய ஓர் அறிமுகம்) | - ***2019*** |
| ***17.*** | கிராமிய சுகந்தம் (கிராமிய எழுத்துரு கவிகளின் முக்கியத்துவம்) | - ***2021*** |
| ***18.*** | தாயன்பு (சிறுவர் கதை) | - ***2021*** |
| ***19.*** | முதுமையில் விளைந்த புதுமைகள் | - ***2023*** |
| ***20.*** | பொன்னொளி (பொன் விழா மலர்) | - ***2024*** |
| ***21.*** | நல்லவர்கள் நலமாக வாழனும் | - ***2024*** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்துள்ள தொகுப்பு நூல்:

*01.* நபிகள் நாயகம் (கவிதை) - *2017*

## மீள்பதிப்பு நூல்:

*01.* அண்ணல் கவிதைகள் - *2018*

## வெளிவரவுள்ள நூல்கள்:

*01.* புதிய விடியல் (சிறுவர் கதை)
*02.* விவசாய சமூகத்துடன் பிணைந்துள்ள கிராமியம் - ஓர் ஆய்வுக் கட்டுரை
*03.* நாட்டுபுற கலைகளில் ஒன்றான தாலாட்டுப் பாடல்கள் பற்றிய ஆய்வு
*04.* நல்ல படிப்பினை (சிறுவர் கதை)
*05.* புதிய பாதை (சிறுகதை)

## ஆக்கங்கள் வெளியான தொகுப்பு நூல்கள்:

இவர் செய்த ஆய்வுகள்: கிராமிய இலக்கியம், கிராமிய விவசாயம், கிராமிய தாலாட்டு.



பெற்ற பரிசுகள்:
*2012, 2016* சிறந்த நூற் பரிசுகள், *2016* சரத் சந்திர ஜயகொடி தேசிய விருது, *2023* தேசிய கலை இலக்கிய விருது, இன்னும் மாகாண, மாவட்ட, பிரதேச விருதுகள்.

## பெற்ற விருதுகள்:

- *2013* அரச கலாபூஷணம் விருது.
- *2021.12.18* இல் தேடல் கலை இலக்கிய அமைப்பின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது.
- *2022.12.* தேசிய இலக்கிய விருது வழங்கல்.
- *2023.02.25* இலக்கியத் துறையில் சிறந்த கலைஞருக்கான விருதாக தேசிய கலாபூஷண விருது.
- *2023.02.04* இல் இலக்கிய வாரிதி விருது.
- *2023.12.03* இல் முதியோர் தின நிகழ்வை முன்னிட்டு நடைபெற்ற இலக்கியவாதிகளுக்கான நிகழ்வில் சிறந்த கலைஞராக தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பங்கு பற்றிய கவியரங்குகளும் கவிதைப் பொழிவுகளும்:

*மீலாத்தின கவியரங்கு தலைமை, ஹஜ், நோன்பு கவியரங்கு தலைமை, பொதுவான கவியரங்குகள்.*

### தொலைக்காட்சி நிகழ்ச்சி பங்களிப்புகள்:

*2016.08.23 நேத்ரா டீவி நேர்காணல் (உதய தரிசனம் காலை - 9.30 இலிருந்து 10.30 வரை)*

### வானொலி நிகழ்ச்சிப் பங்களிப்புகள்:

- *2022 இல் ஊவா சமூக வானொலி நேர்காணல்.*
- *2022 இல் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் பிரதி ஞாயிறு காலை எங்களூர் நிகழ்ச்சியாக பலமுறை பங்குபற்றியது.*

## பொன்விழாக் காணும் எழுத்தாளர் பீ. ரீ. அஸீஸ் (1974- 2024 = 50 ஆண்டுகள்)

இலங்கையின் சிரேஷ்ட எழுத்தாளர்களில் ஒருவரான கிண்ணியாவைச் சேர்ந்த பீ. ரீ. அஸீஸ் இலக்கியத்துறையில் பொன்விழாக் கொண்டாடும் ஓர் அரிய வாய்ப்பினை தன் வாழ்நாளில் பெற்றுள்ளமை மகிழ்ச்சியளிக்கக்கூடிய விடயமாகும். 1974 இல் "பேசும் தெய்வம்" எனும் சிறுவர் பாடலை தினகரன் பத்திரிகையில் தனது முதலாவது கவிதையினை பதிவு செய்த இவர், அதனைத் தொடர்ந்து தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, ராதா, சுந்தரி, மித்திரன் போன்ற பத்திரிகைகளிலும் எழுதத் தொடங்கினார்.

தனிப்பட்ட சில காரணங்களின் நிமித்தமாக பல வருடங்கள் இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக செயற்பாடுகளிலிருந்து மௌனித்ததன் பின்னர் மீண்டும் **2011** ஆம் ஆண்டு எழுத்துலகில் பிரவேசம் செய்தார். இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் கவனம் செலுத்தி அவற்றின் மூலம் தனது ஆளுமைகளை வெளிப்படுத்திய எழுத்தாளர் பீ. ரீ. அஸீஸ் கிராமியம், நூல் திறன் நோக்கு, சிறுவர் இலக்கியம் என்பவற்றில் அதிக ஈடுபாட்டுடன் செயல்படத் தொடங்கினார்.

அதன் விளைவாக முதுமையில் விளைந்த புதுமைகள், சின்னப் பாப்பா, கிராமிய சுகந்தம் எனும் சிறப்பான நூல்கள் பலவற்றுக்கு சொந்தக்காரரானார். கிராமியம் சார்ந்த இவரது படைப்புகளில் எழுத்துரு கவிகளின் வளர்ச்சியும் அதன் முக்கியத்துவமும் என்ற பொருளினை உள்ளடக்கமாகக் கொண்ட "கிராமிய சுகந்தம்" எனும் கட்டுரை நூல் இப்பணியில் இவரால் ஆரம்பிக்கப்பட்ட தொடக்கப் புள்ளியாக அமைகிறது. எழுத்துரு கவிகள் பற்றி இந்நூல் தெளிவாக கூறுவதும் ஒரு சிறப்பம்சமாகும்.

*21* இற்கு மேற்பட்ட நூல்களையும் "அண்ணல் கவிதைகள்" என்ற கவிஞர் அண்ணலின் நூலினை மீள்பதிப்புச் செய்தும், தனது இலக்கியப் பணியினை தொடர்ந்து செல்லும் எழுத்தாளர் பீ. ரீ. அஸீஸ் இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் உள்ள சிரேஷ்ட எழுத்தாளர்களுள் முக்கியமான ஒருவராக கணிக்கப்படுகின்றார்.

சுமார் *92* நூல் திறன்நோக்குகளை எழுதியதன் மூலமாக திறன் நோக்குத் துறையில் தனியிடமும் சிறப்பும் பெறுகிறார். மேலும் இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி இதுவரை *50* முதலிடங்களை தனதாக்கிக் கொண்டுள்ளதோடு, *50* நூல்களின் திறன் நோக்கு நூல் வடிவில் வெளிவந்துள்ளது. இவரால் வெளியிடப்பட்ட பொன் விழா மலரில் மேலும் *50* முக்கியஸ்தர்களின் ஆக்கங்கள் இடம்பெறுவது விஷேடமாக குறிப்பிடக்கூடிய தொன்றாகும்.

இலக்கியத்துறையில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து பொன் விழாக் காணும் எழுத்தாளர் பீ. ரீ. அஸீஸ் அவர்கள் தேசகீர்த்தி, கலாபூஷணம், கலாவிபூஷண, இலக்கிய வாரிதி போன்ற சிறப்பான பல பட்டங்களையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். **03.12.2023** இல் மூத்த கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் சிறந்த கலைஞருக்கான விருதினை கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களிடமிருந்து இவர் பெற்றுக் கொண்டுள்ளமையும் விஷேட சிறப்பம்சமாகும். இவரை நாமும் வாழ்த்தி அவரது பணிகள் மேலும் தொடர பிரார்த்திப்போம்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்பதித்த ஈழத்து கவிஞர்கள்

## அஷ்ரபா நூர்தீன்

கேள்விகளால்
நிறைந்து வழிகிற உலகில்
பல விடைகள்
இருண்ட சுவர்களுக்குள்
சங்கிலிகளால்
பிணைக்கப்பட்டுள்ளன.

●

ஏழைக்கு
கால்வயிற்றுக் கஞ்சி கொடுக்க
மனதில் துளி இடமற்றவர்
நாளாந்தம் ஓடுகிறார்
கடவுளின் இல்லத்துக்கு.

●

மாடி வீடுகளால் அழகூட்டப்பட்டு
மனிதர்
கௌரவமாய் வாகனங்களில்
செல்லும் தெருக்களில்
ஒட்டிய வயிற்றுடன்
கேட்பாரற்றுக் கிடக்கின்றன
தெருநாய்கள்.

●

சமத்துவத்தை
சுதந்திரத்தை
அளவுக்கதிகமாய் பருகிய
ஆணும் பெண்ணும்
நிர்வாணப்படுத்துகின்றனர்
பொது இடங்களை.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்புப் பார்வை**

வெண்ணிலா 16வது இதழ்
மீதான சிறப்புப் பார்வை.

# ஆகாய வீதியில் அழகான வெண்ணிலா

கவிஞர் எஸ். ஏ. கப்பார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஐந்தாவது ஆண்டில் கால் பதித்திருக்கும் காலாண்டுச் சஞ்சிகையான வெண்ணிலா ஆகாய வீதியில் நீந்தி வந்து என் கரம் கிட்டியது.

ஈழத்தின் பிரபல எழுத்தாளர், கவிஞர், காப்பியக்கோ டாக்டர் ஜின்னா சரிபுதீன் அவர்களது அழகிய படத்தை முன்னட்டையில் தாங்கி 84 பக்கங்களில் வெளிவந்திருக்கிறது வெண்ணிலாவின் 16வது இதழ்.

## கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்.

டாக்டரைப் பற்றிய அறிமுகம் தேவையற்றது. அவரைப் பற்றி இலக்கிய உலகம் நிரம்பவே அறிந்திருக்கிறது. அவர் இலக்கியப் பாரம்பரியத்திலே வந்துதித்த கவிஞர் மாத்திரமல்லாது 34 நூல்களை இலக்கிய உலகுக்குத் தந்த காப்பியக்கோ அரசராவார். இவர் 15 காவியங்கள் உட்பட கவிதைத் தொகுதிகள், சிறுவர் இலக்கியங்கள், சிறுகதைத் தொகுப்புகள். மொழி பெயர்ப்புகள் என 34 நூல்களைத் தந்து இலக்கிய உலகை போசித்திருக்கிறார்கள் என்றால் மிகையாகாது. சுமார் 14,200 செய்யுள் களையும் 3,200 கவிதைகளையும் யாத்திருக்கிறார் என்றால் ஈழத்தைப் பொறுத்தவரை இமாலச் சாதனைதான்.

வெண்ணிலாவின் உள்ளே நுழையும் போது ஆசிரியர் பக்கத்திலிருந்து வெண்ணிலாவுக்குக் கிடைத்திருக்கும் சிறந்த சஞ்சிகைக்கான விருது பற்றிய மகிழ்ச்சியான செய்தியைத் தந்திருக்கிறார். ஐந்தாவது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கும் வெண்ணிலாவுக்கு 11.12.2024ல் திருகோணமலை இந்துக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற 2022-2024 வரைக்குமான இலக்கிய விழாவில் வைத்து 2022ம் ஆண்டின் சிறந்த சஞ்சிகைக்கான விருது வழங்கப்பட்டிருக்கிறது. வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்.

இவ்விழா கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. H.G.W.W.G. திஸாநாயக்காவின் தலைமையில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுனர் ஜயந்த ரத்ன சேகர அவர்கள் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. R.M.P.S. ரத்நாயக்க, பல்வேறு அமைச்சுச் செயலாளர்கள், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு. சரவணமுத்து நவநீதன், அனைத்து கலாச்சார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட பெருந்திரளான பார்வையாளர்கள் முன்னிலையில் விருதும், பாராட்டும், பணப் பரிசும் வழங்கி கௌரவித்தார்.

இதழின் உள்ளே நுழையும் போது நுழை வாயிலிலே மருதமுனை மண்ணுக்கு மகிமை சேர்க்கும் காப்பியக்கோ டாக்டர் ஜின்னா சரிபுதீன் என்ற தலைப்பில் காப்பியக்கோவைப் பற்றிய அட்டைப்படக் கட்டுரை அலங்கரிக்கிறது. அவரது பெற்றோர் துணைவியாருடன் திருமணத்தின் போது நின்று எடுத்துக்கொண்ட புகைப்படங்களும், மருதமுனை ஹஸன் அவர்களின் இல்லத்தில் வைத்து எடுக்கப்பட்ட படைப்பாளிகளுடனான சினேகபூர்வ புகைப்படமும் பக்கங்களை அழகுரச் செய்கின்றன. காப்பியக்கோவின் 34 நூல்களின் பெயர்களும், வெளிவந்த ஆண்டுகள் வரிசைக் கிரமமாகத் தரப்பட்டுள்ளதோடு இதுவரை அவர் பெற்ற பட்டங்கள், கௌரவங்கள், வகித்த வகிக்கும் பதவிகள் பற்றிய விபரங்கள் 40 இலக்க வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் டாக்டரின் சில நூல்களை கடந்த 2024ம் ஆண்டு மார்ச் மாதம் இலக்கியச் செயற்பாட்டாளரும், வருகைதரு விரிவுரையாளருமான கலாநிதி சத்தார் எம் பிர்தௌஸ் அவர்கள் வெண்ணிலா நூலகத்துக்கென அதன் ஆசிரியர் கவிஞர் எஸ். ஏ. கப்பார் அவர்களிடம் கையளிக்கும் புகைப்படமும் காணப்படுகிறது. 'சுவட்டெச்சம்' எனும் தலைப்பில் டாக்டரின் கவிதை ஒன்றும் காணப்படுகிறது. மரபுக் கவிஞர் மருதமுனை ஹஸன் அவர்கள் எழுதிய 'முத்தமிழ் வித்தே மூவா மருந்தே' என்ற தலைப்பில் அட்டைப்படக் கவிதை ஒன்றும் இதழைச் சிறப்பிக்கிறது.

இரங்கல் பகுதியில் எம்மை விட்டுப்பிரிந்த மூத்த எழுத்தாளர்கள் மூவரைப் பற்றிய குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. மூத்த எழுத்தாளர் கவிஞர் சட்டத்தரணி சேகு இஸ்ஸதீன், சாகித்திய ரத்தினா மு. பொன்னம்பலம், இலக்கிய ஆளுமை மௌலவி காத்தான்குடி பௌஸ் ஆகியோரைப் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நான் (மாவனல்லை எம். எம். மன்ஸூர் கலாபூக்ஷணம்) எழுதிய வெண்ணிலா இதழ் 15 பற்றிய குறிப்புக்கள் 'நீலவான ஓடையில் நீந்துகின்ற வெண்ணிலா' என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆசிரியருக்கு நன்றிகள். அத்தோடு பனியாறுகள் பற்றிய தகவல்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. முக்கியமாக பனியாறு வகைகள், பனிக்கவிகை, பனிபுகலிடம், பனிநீரோடை, மித வெப்பநிலப் பனியாறு என பனியாற்று வகைகள் பற்றிய குறிப்புக்கள் பயன்கொள்ளத்தக்கன.

நூல் நயம் பகுதியில் இரு நூல்கள் நயவுரைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஒன்று எம். ஏ. மாஹிராவின் 'மனதின் மாயம்' என்ற கவிதை நூல். கவிதாயினி முஜாமலா இந்நூலின் மீது தனது நயவுரையை, முன்வைத்திருக்கிறார். இந்நூல் 100 கவிதைகளை உள்ளடக்கியதாக 252 பக்கங்களுடன் வெளிவந்திருக்கிறது. அடுத்தது வெண்ணிலா ஆசிரியர் எஸ். ஏ. கப்பார் அவர்கள் எழுதிய 'அப்பாவின் டயரி' என்ற சிறுகதை நூலையும் தனது பார்வைக்குள் எடுத்துக்கொண்டிருக்கிறார். கவிஞர் கப்பார் அவர்கள் 1977ம் ஆண்டு முதல் எழுதிவரும் ஒரு படைப்பாளி. பல்வேறு கருப்பொருட்களை தனது கதைக்குள் கொண்டு வந்து 15 சிறுகதைகளை உள்ளடக்கியதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்பாவின் டயரி'யைப் படைத்திருக்கிறார்.

மேலும், இதழின் ஏனைய ஆக்கங்களைப் பார்க்கும் போது நான்கு சிறுகதைகள் இடம் பிடித்துள்ளன. கொழும்பு எச். டி. எச். பஹ்தா எழுதிய "வலியால் நனைந்த விழி", நயீமா சித்தீக் எழுதிய, "உம்மா சும்மா இல்லை" கிண்ணியா சபீனா எழுதிய "தடம் மாறாப் பயணம்", ஏ. எஸ். சித்தி மிஸ்ரியாவின் "மறு மணம்" என்ற சிறுகதைகளே அவை.

2025 ஆண்டை வரவேற்று இலக்கிய வித்தகர் தம்பிலுவில் ஜெகா கவிதை படைத்திருக்கிறார். அதே வேளை நான் (எம். எம். மன்ஸூர்) மொழி பெயர்த்த "மறக்க முடியுமா?" என்ற கவிதையை வெண்ணிலா சுமந்து வந்திருக்கிறது, மிக்க மகிழ்ச்சி. இதே வரிசையில் இன்னும் பதினைந்து இனிமையான கவிதைகள் மஞ்சரியை அலங்கரிக்கின்றன. அவற்றை கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன், ஏ. எம். கஸ்புள்ளா, Dr. ஜலீலா முஸம்மில், இலக்கிய வித்தகர் சம்மாந்துறை மஷூறா, எம். ஏ. மாஹிரா, எச். டி. எச். பஹ்தா, ஆஷிக் ஹுசைன், முல்லை அமுதன், செண்பகச் சோலையாள், ஆய்ஷ், மாஹிரா அஸ்ஹர், ஒலுவில் நழீம் ஹனிபா, ஆழிப் பேரலை நினைவாக முபீதா அமீன் ஆகியோர்களது படைப்புகள் மஞ்சரிக்கு சுவை சேர்க்கின்றன.

படித்தவற்றில் பிடித்தவையாக சோலைக்கிளி, தீரன், எழுதியுள்ள கவிதைகளோடு இந்தியாவிலிருந்து சினேகா மணிவேல், செ. இராமதனவந்தினி இருவரினதும் கவிதைகள் இரண்டும் சுவை சேர்க்கின்றன.

மற்றும் கருத்துச் சுதந்திரம் பற்றி ஒலுவில் நழீம் ஹனிபா அவர்களது கருத்துக்களும், வாசகர்களிடமிருந்து தத்தமது கருத்துக்களும் மஞ்சரியில் இடம் பெற்றிருப்பது சிறப்பு.

விஷேடமாக வெண்ணிலா கவிதை மஞ்சரியின் முன் அட்டையை காப்பியக்கோ ஜின்னா சரிபுத்தீனின் புகைப்படம் அலங்கரிக்க 2024 கிழக்கு மாகாண இலக்கிய விழாவின் இலக்கிய ஆளுமைகளின் படத்தை பின் அட்டை அலங்கரிக்கிறது.

மொத்தத்தில்,

**ஆகாய வீதியில்**
**அழகான வெண்ணிலா**
**தேயாத நிலையினில்**
**தேன் சிந்தும் வெண்ணிலா**
**பல் சுவை மஞ்சரியாய்**
**நல் கவிதைகள்**
**அள்ளித்தர அடியேனின்**
**வாழ்த்துக்கள்.**



**மாவனல்லை எம். எம். மன்ஸூர்.**

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# நகைச்சுவை



- ஒலுவில் நழீம் ஹனீபா.

நகைச்சுவை ஆண்கள், பெண்கள் அனைவரும் ரசிக்கக் கூடியது. அது இயல்பாக மனிதனிடம் ஒட்டியிருக்கும். அதை எல்லோரும் விரும்பினாலும் நகைச்சுவை அனைவருக்கும் வராது. குறிப்பிட்ட சிலரே அதில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். இதை ஒரு கலை என்றும் கூறலாம். கவலைகள் மறந்து மகிழ்ச்சி பெற நகைச்சுவை உதவுகிறது.

எனினும் ஒருசிலருக்கு நகைச்சுவை பிடிக்காது. என்றாலும் அதிகமானோர் அதை விரும்புவார்கள். பெண்கள் அடக்கமாகவும் அமைதியாகவும் இருக்க விரும்புவதால் நகைச்சுவையில் அவர்களுக்கு அதிகமாக நாட்டமில்லை. எனினும் ரசிப்பார்கள். பெண்களிடம் நகைச்சுவை உணர்வு இருந்தாலும் அதை வெளிக்காட்ட விரும்புவதில்லை. அதை வளர்த்துக் கொள்ளவும் முயற்சிப்பதுமில்லை. எனினும் நகைச்சுவையாகப் பேசும் ஆண்களைப் பெண்கள் விரும்புவார்கள்.

நகைச்சுவையை வெளிப்படுத்தி பிறரை இரசிக்கச் செய்து சிரிக்க வைப்பதோடு அதை மறைக்காமல் அதிகமாக சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வெளிக் காட்டுபவர்கள் ஆண்களே.

இவ்வாறான நபர்களை நடைமுறை வாழ்வில் நாம் அதிகம் காண்கிறோம்.

பொதுவாக நகைச்சுவைகள் அநாகரீகமாக அமையக்கூடாது. பலர் அநாகரீகமாக நகைச்சுவை உணர்வை வெளிக்காட்டி சிரிக்க வைப்பார்கள். மற்றும் சிலர் பொய்களைப் புனைந்து நகைச்சுவையாக மக்களுக்கு மத்தியில் அவிழ்த்து விடுவார்கள். சிலர் உண்மை யான விடயங்களை மையமாகக் கொண்டு நகைச்சுவை கூறி பிறரை மகிழ்விப்பார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையான விடையங்களை வைத்து நகைச்சுவை புரிவதைத் தடுக்கவில்லை. எனினும் பொய்யான விடயங்களை வைத்து நகைச்சுவை புரிவதையும், பிறரின் மனம் புண்படும் அடிப்படையில் நகைச்சுவை புரிவதையும், பிறரை அவமானப் படுத்தும் வகையில் நகைச்சுவை புரிவதையும் தவிர்ந்துக் கொள்வது அவசியமாகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் வெண்ணிலா!

வானத்தில் வராத வெண்ணிலவு
வஞ்சியர் கைகளால் தொடும்நிலவு
ஆணவம் கொண்ட மாந்தரை திருத்தி
அறிவுக்கண் திறக்கும் வெண்ணிலவு .

புதுப்புதுக் கதைகள் சுமந்து வரும்
பிள்ளைகள் கல்விக்கு கைகொடுக்கும்
மதுச்சுவையான கருத்துகள் தந்து
மங்கையர் உயர்வுக்கு வழிகாட்டும்.

காலாண்டுக் கொருமுறை மலருமிது
காதல் கதையெல்லாம் சொல்லுமிது
பாவலர் நாவலர் ஆக்கங்கள் சுமந்து
பகுத்தறி வென்பதைத் திறக்குமிது.



மானங்காக்க துணிகள் நெய்யும்
மருதமுனை ஊரின் குழந்தையிது
தேனின் சுவையில் கவிதைகள் தந்து
திரும்பத் திரும்ப நம்மை படிக்கவைக்கும்.

புலவர்கள் கவிஞரை வானுயர்த்தும்
புத்தாக்கம் பலதும் சுமந்து வரும்
அழகிய முன்னட்டைப் படத்துடனே
ஆக்கங்கள் தருமிந்த வெண்ணிலவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெண்ணிலா ஐந்தாவது ஆண்டு சிறப்பிதழுக்காக வடித்தது.*

சேர சோழ பாண்டியனின்
தியாகத்தால் வளர்ந்த செந்தமிழின்
பாரிய சரிதை நாமறிய
படித்திட உதவும் வெண்ணிலவு.

அம்பிகாபதியின் காதல் கதை
அமராபதியின் சோகக் கதை
தம்பியால் அரசிழந்த குமணன்கதை
சகலதும் தருமிந்த வெண்ணிலவு.

முன்நாள் வங்கி ஊழியரின்
முயற்சியால் கிடைத்த முத்திதுவாம்
அன்னை தமிழின் அழகுகண்டு
அகிலம் வியக்க வைத்திடுமாம்.

வெண்ணிலா மங்கை விரிவடைய
விதம் விதமாக வளர்ச்சி பெற
பொன்னான வாசகர் ஒன்றிணைந்து
புதுவழி காட்டிக் கைகொடுப்போம்.

ஆக்கத்திற்கு ஊக்கம் அளித்திடுவோம்
அனைவரும் விரும்பி படித்திடுவோம்
காக்கும் கரமாய் நாமிருந்து – நண்பன்
கவிஞரின் வெண்ணிலவுக்கு கைகொடுப்போம்.

●●●

- கவிஞர் அலியார் T.O. -
சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவக் கட்டுரை

# பித்தப்பைக் கற்களும் நிவாரணமும்

Dr. ஜலீலா முஸம்மில்
(MBBS SL)

வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை
ஏறாவூர்.



பிணியற்ற வாழ்வே போற்றுதற் குரியது. உலகில் எப்போதும் மனிதர்கள் விரும்புவது நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கைதான். அன்றாட வேலைகளில் நாம் ஓடிக்கொண்டே இருக்கிறோம். ஆனால் நமது ஆரோக்கியத்தைப் பற்றி சிந்திக்கிறோமா என்றால், பெரும் பாலான வேளைகளில் இல்லை என்றே கூறலாம். தேக ஆரோக்கியத்துடனும் திடகாத் திரத்துடனும் இருப்பதே நீண்ட ஆயுளுக்கு வழிவகுக்கும்.

பித்தப்பை கற்கள் பித்தப்பையில் உருவாகின்றன. பித்தப்பையின் உள்ளே உருவாகும் கடினமான படிவுகளே இவை. சாதாரணமாக எல்லோருக்கும் தற்காலத்தில் காணப்படக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அதன் பாதிப்புகள் பல்வேறு காரணங்களினால் விரைவுபடுத்தப் படுகின்றன. இந்தக் கற்கள் ஒரு மணல் / தானிய அளவில் இருந்து சிறுபந்து அளவில் பெருத்துக் காணப்படலாம்.

பித்தப்பைக் கற்கள் உள்ள சிலருக்கு எந்த அறி குறியும் ஏற்படா விட்டாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி, குமட்டல் மற்றும் பிற விரும்பத்தகாத அறி குறிகளும் தோன்று வதற்கு வாய்ப்புண்டு.



## பித்தச் சுரப்பும் கொழுப்புச் சமிபாடும்

நாம் உண்ணும் உணவில் கொழுப்பு, கார்போவைத ரேட்டுகள், புரதங்கள் போன்ற பல்வேறு போசணைக் கூறுகள் உள்ளன. சமிபாட்டுத் தொகுதியில் சுரக்கப்படும் சாறுகள் இப் போசணைக் கூறுகளை சிறிய மூலக்கூறுகளாக உடைக்கச் செயல் படுகின்றன. உணவில் உள்ள கொழுப்பைச் சிதைப்பது கல்லீரலில் சுரக்கும் பித்தத்தின் கடமையாகும். இருப்பினும், சுரக்கும் பித்தம் அந்த நொடியில் முழுமையாகப் பயன்படுத்தப் படுவதில்லை. மாறாக பித்தப்பையில் சேமித்து உடலின் தேவைக்கேற்ப உணவுக் கால்வாயில் சுரக்கப்படுகிறது.

நம் உடலில் உள்ள பல்வேறு சுரப்பிகளில் மிகப் பெரியது கல்லீரல். இதில் தினமும் *1 - 1.5* லீற்றர் வரை பித்தம் சுரக்கிறது. பித்தத் திரவக் கலவையில் 97% நீரும், 1% பித்த நிறப்பொருட்களும், 1 - 2% வரை பித்த உப்புகளும் இதில் உள்ளன.

கல்லீரலில் சுரக்கும் பித்தம், வலது மற்றும் இடது பித்தநீர்க் குழாய்கள் வழியாக முன்சிறுகுடலுக்கு வந்து சேரும். அதற்கு முன்பாக ஒரு கிளைக் குழாய் வழியாகக் கல்லீரலுக்கு வெளியில் தொங்கிக் கொண்டிருக்கும் (Gall bladder) பித்தப்பையினுள் அது செல்லும். அப்போது பித்தப்பையானது பித்தத்தைப் பெற்றுக்கொண்டு, அதன் அடர்த்தியை அதிகரித்து, உணவு செரிமானத்துக்குத் தயாராக வைத்திருக்கும்.

நாம் சாப்பிட்ட உணவு இரைப்பையை விட்டுப் புறப் பட்டதும், 'பித்தம் தேவை' என்று நரம்புகள் வழியாக ஒரு சமிக்ஞை பித்தப் பைக்கு வந்து சேரும். உடனே பித்தப்பையானது, தன்னைத்தானே சுருக்கி, பித்தத்தைப் பித்தக் குழாய்க்குள் அனுப்பிவைக்கும். அது நேராக முன்சிறுகுடலுக்கு வந்து, உணவுக் கூழில் உள்ள கொழுப்பைச் சரியாகச் சமிபாடடைய வைக்கும்.

## பித்தக் கற்கள்

சாதாரணமாகத் திரவ நிலையில் உள்ள பித்தத்தில் சிலருக்கு மட்டும்தான் கற்கள் உருவாகின்றன. பித்தப்பையானது பித்தத்தின் அடர்த்தியை அதிகமாக்கும் போது, அதில் உள்ள பித்த உப்புகள் (Bile


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

salts) அதன் அடியில் படியும். பித்த உப்புகள் என்பவை கொழுப்புத்தன்மை வாய்ந்தவை. அவை கொழுப்பால் ஆனவை. பார்ப்பதற்குப் படிகம் போலவே இருக்கும்.

பித்தப்பைக் கற்கள் காலப் போக்கில் பெரிதாகின்றன. இது மெதுவாக நிகழ்கிறது, பித்தம் மீண்டும் மீண்டும் பாய்வதால் பித்தப்பைக் கற்கள் விரிவடைந்து, அதிக படிவு அடுக்குகளை விட்டுச் செல்கின்றன. சிறிது சிறிதாக வளர்ந்து, கடினமான ஒரு பொருளாக மாறி, கல்லாக உருமாறும். இந்தக் கற்கள் பார்ப்பதற்குச் சாதாரணக் கற்கள் போன்றுதான் தோற்றமளிக்கும். மென்மையாக இருக்கும்.

ஒரு சிறிய தானியமாகத் தொடங்குவது பித்த ஓட்டத்தைத் தடுக்கும்



அளவுக்கு பெரியதாக வளரும், குறிப்பாக பித்தப்பை அல்லது பித்தப்பையின் கழுத்து போன்ற குறுகிய பகுதியில் பித்தப்பைக்கல் சிக்கிக் கொண்டால், முழுவதும் தடையை ஏற்படுத்தும் வரை அளவு அதிகரிக்கும். கல்லின் அளவும் எண்ணிக்கையும் ஆளுக்கு ஆள் வேறுபடும். ஆண்களைவிட பெண்களுக்கு அதிகம் என்கிறது ஓர் ஆய்வு.

## பித்தப்பைக்கல் உருவாவதற்கான காரணங்கள்

1. உடல் பருமன்
2. அசாதாரணமான உணவு வளர்சிதை மாற்றங்கள்.
3. பித்தம் அளவுக்கு அதிகமாகச் சுரப்பது.
4. பரம்பரைக் கோளாறு.
5. கொழுப்புள்ள உணவை அதிகம் உண்பது.
6. நார்ச்சத்து குறைந்த உணவு வகைகளை அதிகமாக உண்பது.
7. மாவுச்சத்து நிறைந்த உணவு வகைகளை அதிகமாக உண்பது.
8. குறுகிய காலத்தில் உடல் எடை திடீரென அதிகமாவது.
9. ஓமோன் மாற்றங்கள். குறிப்பாக, பெண்களுக்கு ஈஸ்ட்ரஜன் ஓமோன் அதிகமாகச் சுரப்பது.
10. பாக்டீரியா கிருமிகளின் தாக்குதல் காரணமாகப் பித்தப்பை அழற்சியும், அதைத் தொடர்ந்து பித்தத் தேக்கம் அடைவது மற்றும் பித்தப்பையில் அடைப்பு ஏற்படுவது.
11. கருத்தடை மாத்திரைகளை நீண்ட காலம் சாப்பிடுவது.
12. அடிக்கடி விரதம் இருப்பது.
13. கர்ப்பம்.
14. முறையான உடற்பயிற்சி இல்லாதது.
15. 'சிக்கில் செல்' ரத்தசோகை.

## வகைகள்

பொதுவாகப் பித்தப்பைக் கற்களில் காணப்படும் இரசாயனப் பொருளை வைத்து இக்கற்கள் மூன்று வகையாகும்

1. பித்தநீரில் கொலஸ்ட்ரால் அளவு மிகுவதால் உண்டாகும் கற்களுக்குக் 'கொழுப்புக் கற்கள்' / 'கொலஸ்ட்ரோல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கள்' என்று பெயர். இது பெரும்பாலும் ஒரே ஒரு கல்லாகவே இருக்கும். வெண்மை கலந்த மஞ்சள் நிறம் கொண்டதாக இது காணப்படும்.

2. நிறப்பொருள் கற்கள். இவ்வகைக் கற்கள் கறுத்த நிறமுடையவை. கல்சியம் கார்பைற்றால் உருவாகின்றன.

3. கலப்படக் கற்கள் பெரும் பாலான பித்தப்பைக் கற்கள் கலவைக் கற்களால் ஆனவையே. கொலஸ்ட்ரோல், கல்சியம் கார்பனேற்று, கல்சியம் பிலிருபினேட் போன்றவற்றால் உருவானவை. இவை எண்ணிக்கையிலும் அதிகமாக இருக்கும், பித்தக்குழாயை விரைவில் அடைத்துப் பாதிப்புகளை உருவாக்கும். இவ்வகை கற்களே மனிதர்களிடையே அதிகம் காணப்படுகின்றன. பித்தப்பைக் கற்களின் வகைகள் பற்றி அறிந்து கொள்வது அனுகூலம் மிக்கது. ஏனெனில், குறிப்பிட்ட நபருக்கு எந்த வகைக் கல் இருக்கிறது என்று தெரிந்து கொண்டால், அந்தக் கல்லுக்குரிய இரசாயனப்பொருள் அதிகமுள்ள உணவுப்பொருட்களைத் தவிர்ப்பதன் மூலம் பித்தப்பைக் கற்களை மீண்டும் வராது காத்துக் கொள்ளலாம். இன்னும் ஏற்கெனவே உள்ள கற்களை, இன்னும் அதிகம் வளர விடாமலும் தடுத்துக்கொள்ள முடியும்.

## அறிகுறிகள்

மூன்று விதமான அறிகுறிகள் காணப்படும்.

1. உணவு உண்ட பின்பு சிறிது நேரம் செரிமானம் ஆகாமல் இருப்பது போன்ற உணர்வுடன் ஒரு வலி, வயிற்றின் மேல் பாகத்தில் அதாவது தொப்புளுக்கு மேலே தோன்றும்.

2. இந்த வலியானது கடுமையாகிப் பல மணி நேரம் நீடித்து, குமட்டல், வாந்தி, ஏப்பம் போன்ற துணை அறிகுறிகளுடன் சிரமப்படுத்தும்.

3. வலது புற விலா எலும்புகளைச் சுற்றி வந்து, முதுகுப்புறம் வரைக்கும் சென்று, தோள்பட்டைவரை வலி பரவும். இது மாரடைப்புக்கான வலி போல காணப்படும்.

முக்கியமாகக் கொழுப்பு அதிகமுள்ள எண்ணெய் உணவுகளைச் சாப்பிட்டதும் இந்த வலி ஏற்படும், பித்தப்பைக் கற்கள் பித்தப்பையில் அழற்சியை ஏற்படுத்துமானால் பாதிக்கப்பட்ட நபருக்கு முதுகுப்புறம் மிகவும் பாரதூரமான வலி ஏற்படும்.

பித்தக்கற்கள் பித்தப்பையை அடைத்துவிடுமென்றால் நோயாளிக்கு மஞ்சள் காமாலை வரும். இதற்கு 'அடைப்புக் காமாலை' என்று பெயர். சில பேருக்கு அறிகுறிகள் எதுவும் தெரியாது. வேறு பாதிப்புகளுக்கு ஸ்கேன் பரிசோதனை செய்யும்போது, பித்தப்பையில் கற்கள் இருப்பது தெரியவரும்.

## கண்டுபிடிக்கும் பரிசோதனைகள்

1) வயிற்றை 'அல்ட்ரா சவுண்ட்' அல்லது சி.டி.ஸ்கேன் பரிசோதனை செய்து பித்தக் கற்களின் எண்ணிக்கை, அளவு, பித்தப்பையில் வீக்கம் உள்ளதா, கற்கள் பித்தப்பையை அடைத்துள்ளதா, கல்லீரலைப் பாதித்துள்ளதா என்பது போன்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2)* சாதாரணமாக வயிற்றை எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்தால் பித்தப்பைக் கற்களில் 10 சதவீதம் மட்டுமே தெரியும். அதேநேரத்தில், பித்தநீரில் கரைகிற ஒரு சாயக் கரைசலை மாத்திரை வடிவில் வாய்வழியாக உட்கொள்ள வைத்து, வயிற்றை எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்தால் இந்தக் கற்கள் இருப்பது தெளிவாகத் தெரியும். இது பெரும்பாலும் தற்போது நடைமுறையில் இல்லை.

*3)* எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் 'கோலாஞ்சியோகிராபி' (Cholangiography) எனும் பரிசோதனைகள்.

*4)* இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டு பித்தப்பைக் கற்களால் கல்லீரலின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

## நிவாரணம்

*1)* சிறிய பித்தப்பைக் கற்களை ஊசி மற்றும் மருந்துகள் மூலம் கரைக்கலாம்.

*2)* சற்றுப்பெரிய அளவில் உள்ள கற்களை உடைத்து (Lithotripsy) வெளியேற்றலாம்.

*3)* 'பித்தப்பை நீக்கம்' (Cholecystectomy) எனப்படும் அறுவை சிகிச்சையே பித்தப்பைக் கற்களைத் தடுப்பதற்குச் சிறந்த வழி. பித்தப்பையை நீக்குவதற்கான அறுவை சிகிச்சைகளில் 'லேப்ராஸ் கோப்பி' அறுவை சிகிச்சை முக்கியமானது. இந்த அறுவை சிகிச்சை செய்துகொண்ட அடுத்த நாளில் வீட்டுக்குத் திரும்பி விடலாம். அடுத்த ஒரு வாரத்தில் இயல்பான வேலைகளைச் செய்துகொள்ள முடியும்.

*4)* என்டோஸ்கோப்பி மூலம் அறுவை சிகிச்சை செய்யும் நவீன முறையும் தற்போது அறிமுகமாகியுள்ளது. 'ஸ்பைகிளாஸ் கொலாஞ்சியோஸ்கோப்பி' (SpyGlass cholangioscopy) என்று அழைக்கப்படும் இம்முறையில் பித்தப்பையை நீக்காமல், பித்தப்பைக் கற்களை மட்டுமே அகற்றுகிறார்கள்.

இது அடைப்பினால் வரும் மஞ்சள் காமாலை உள்ளவர்களுக்கு உடனடி நிவாரணம் தருகிறது. வாய்வழியாக இந்தக் குழாயை உள்ளே அனுப்பி உணவுக்குழாய், இரைப்பை, முன்சிறுகுடல் வழியாக, பித்தக்குழாய் சென்று பின்னர் கற்கள் உள்ள பித்தப்பையை அடைந்ததும், மின்நீர்க் கதிர்களை (Electrohydraulic lithotripsy) செலுத்தி, அந்தக் கற்களை நொறுக்கி, அவற்றின் துகள்களை உறிஞ்சி வெளியில் எடுத்துவிடுகிறார்கள். இதனால் பித்தப் பாதை அடைப்பு சரிசெய்யப்படுகிறது. மஞ்சள் காமாலை முற்றிலும் குணமாகிவிடுகிறது.

பித்தப்பை அழுகிய நிலையில் சிறுகுடல், பெருங்குடல், கல்லீரல் போன்ற உறுப்புகளோடு அது ஒட்டிக்கொள்ளும் நிலைமையில் நோயாளி சிகிச்சைக்கு வந்தார் என்றால், அவருக்கு அன்டிப் பயோட்டிக் சிகிச்சை அளித்தபின்னர் திறந்த அறுவை சிகிச்சை மூலம் பித்தப்பைக் கற்களோடு பித்தப்பையும் நீக்கப்படுவதுதான் நல்லது.

## பித்தப்பையை நீக்கத்தினால் ஏற்படும் விளைவுகள்.

"பித்தப்பையை நீக்கினால் பித்தம் சுரக்காது. உணவு சரியாகச் சமீபாடு அடையாது" என்று பல பேர் தவறாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நினைத்துப் பித்தப்பையை நீக்குவதற்கு அஞ்சுகின்றனர். எமது உடலில் கல்லீரலே பித்தத்தைச் சுரக்கிறது. அது பித்தக் குழாய் மூலமாக முன்சிறுகுடலை வந்தடைகிறது. அதற்கு முன்பு அது பித்தப்பையில் தங்கிச் செல்கிறது, அவ்வளவுதான். பித்தப்பையை நீக்கியவர்களுக்குப் பித்தநீரானது நேரடியாக முன்சிறுகுடலுக்கு வந்து சேர்ந்துவிடும். இவர்களுக்கு உணவுச் சமிபாடு எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. பித்தப்பை இல்லாவிட்டாலும் ஆரோக்கியமாக வாழலாம். ஆனால் இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு கொழுப்புள்ள உணவு வகைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

**(நன்றி)**



Dr. ஜலீலா முஸம்மில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடல்

கவிப்பொய்கை
ஜவ்ஸான் அஹமட்

(துணிந்தெழு சஞ்சிகை
ஆசிரியர் குழு உறுப்பினர்.)

# பிரமிள் ஏன் போற்றப்படுகிறார்...

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் வருடாந்த பிரமிள் விருதுகள் பல நூலாசிரியர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டிருந்தன. இணையத்தில் இதைப் பார்த்த எனக்குள் பிரமிள் என்பவர் யார்? அவர் பற்றிய சமூக கருத்தாடல்கள் என்ன? தமிழ் கூறும் நல் உலகிற்கு அவர் செய்த தொண்டுகள் என்ன? என்பது பற்றியெல்லாம் பல கேள்விகள் எழுந்தன. அதன் விளைவாக பல்வேறுபட்ட தேடலின் பின்னர் இக்கட்டுரையை எழுத விளைகிறேன்.

"சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது"
- பிரமிள்.



கவிஞர் பிரமிள்

படிமக் கவிஞர் என்று எல்லோராலும் போற்றப்படும் பிரமிள் இலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் 20-04-1939இல் பிறந்து இந்தியாவின் தமிழகத்தில் 1959 முதல் வாழ்ந்து 06-01-1997இல் தனது 57வது வயதில் மரணித்த ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர் ஆவார்.

கணபதிப்பிள்ளை விருட்சலிங்கம் மற்றும் அன்னலட்சுமி தம்பதி யினருக்கு மகனாகப் பிறந்த இவரது இயற்பெயர் சிவராமலிங்கம். தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை இராமகிருஷ்ணா மிஷன் பள்ளியில் கற்றுக்கொண்டார்.

இக்காலகட்டத்தில் அதிகம் பேசப்படும் இவர் தமிழ் கூறும் நல் உலகுக்கு பல்வேறுபட்ட முறையில் பங்காற்றி இருப்பது பல தேடல்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கண்டுகொள்ள முடிகிறது.

**1959**இல் தமிழகம் சென்று மீண்டும் இலங்கைக்கு வராமல் அங்கேயே தங்கிவிட்ட இவர் அஞ்சல் வழியில் சித்திரக்கலையை கற்று நன்கு அதில் தேர்ச்சி பெற்றார். மேலும் கவிதையிலும் விமர்சனத்திலும் தமிழில் முதன்மை திறனாளியாக மதிக்கப்பட்டு எல்லோராலும் அதிகம் போற்றப்பட்டார். தனித்தன்மை உள்ள ஓசை நயம் மிக்க கவிதைகளையும் சிறுகதைகள் கட்டுரைகள் முதலியவற்றையும் தன்னுடைய தனிப் போக்கில் அதிகமாக எழுதி வந்த இவர் கவிதைகளில் நுண்ணிய பார்வையிலான ஒரு சூழலை உருவாக்கி அதற்கு மிக மிக குறைந்த அளவிலான கனமான சொற்களைக் கொண்டு கோர்த்து மொத்த வடிவத்தை உருவாக்குகின்ற வித்தையை தன்னகம் கொண்டிருந்தார்.

படிம முறையில் கவிதை எழுதுவதில் மட்டும் வித்தகராக இருந்த பிரமிள் தன் கலை பயணத்தை அத்தோடு மட்டும் முடித்துக் கொள்ளாமல் ஓவியம் வரைதல், கதை எழுதுதல், சித்திரம் வரைதல், நாடகம் இயற்றுதல் போன்ற பல்வேறு கலைத் துறையிலும் தன்னை ஈடுபடுத்தி இன்று வரைக்கும் அவருடைய இடத்தை நிரப்ப முடியாத ஓர் எழுத்தாளராக கலைஞராக இந்த உலகத்தை வலம் வருகிறார்.

நவீன எழுத்தாளர்களாக, கவிஞர்களாக நாம் அடையாளப் படுத்தும் ஔவை, பாரதி, பசுவய்யா, சி. மணி, நாரனோ, ஜெயராமன், கால சுப்பிரமணியம், தேவதேவன், விக்ரமாதித்யன், சமயவேல், ரமேஷ் பிரேம் போன்றவர்களோடு ஒப்பாகி அவர்கள் அளவிற்குத் தமிழுக்குத் தொண்டு செய்தவர் என்பதும் இங்கு குறிப்பிட்டு சொல்ல வேண்டிய ஓர் அம்சமாகும்.

பாரதியை மதிப்பீடு செய்து வெளிவந்தவைகளில் "கவிதை கோட்பாடுகளும் பாரதி கலையும்" என்ற தலைப்பிலான இவரது கட்டுரை மிக முக்கிய இடத்தைப் பிடித்திருப்பது இன்று வரையில் நீங்காது இருப்பதும் ஒரு சான்றாகவே திகழ்கிறது.

பிரமிள் எழுதிய நாடகங்களும் போற்றப்பட வேண்டியவை என்றால் அது மிகையாகாது. அதில் குறிப்பாக "நட்சத்திரவாசி" என்ற நாடகம் இவருக்கு பேரையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தது எனலாம்.

இந்த நாடகம் முதல் முதலில் பேராதனை பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றப்பட்டது. அதன் பின்னர் அதன் வரவேற்பின் அடுத்தபடியாக கொழும்பில் இயங்கிய பாலேந்திராவின் அவைக் காற்று கழகத்தினால் அங்கும் மேடை ஏற்றப்பட்டு அதன் வெற்றிக் கொண்டாட்டத்தை அவைக் காற்று கழகம் மூலம் லண்டனில் சுவாசித்தது அந்த நாடகம்.

பல்வேறு ரீதியிலும் தமிழுக்குத் தொண்டு செய்த இவரின் இலக்கியப் பயணம் என் தேடலில் பல்வேறு பட்ட அடைவு மட்டங்களை தொகுத்து வரையறை செய்ய ஏதுவாக இருந்தது எனலாம்.

● பள்ளி காலத்திலேயே தனது இலக்கியத்துடனான உறவை பலப்படுத்திக் கொள்ளும் இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை, மரபுக் கவிதை, ஓவியம் வரைதல், கதைகள் எழுதுதல், சித்திரம் வரைதல் என பல்வேறு துறைகளிலும் நாட்டம் கொண்டிருந்தார். அவற்றை கையெழுத்துப் பிரதியாக பள்ளி காலத்திலேயே "யாழ்" எனும் படைப்பு மூலம் வெளியிட்டிருந்தார்.

● *1997* ஆம் ஆண்டு வரை எழுத்து பத்திரிகையின் தீவிர எழுத்தாளராக எழுதி வந்தவர்.

● தமிழ் புதுக்கவிதைகளின் முன்னோடியான பிரமிள் படிம முறையில் அதிகம் கவிதைகளை எழுதக்கூடியவராக இருந்தார். இவரின் கவிதைகளின் அழகியலை கண்டு இவரை எல்லோரும் "படிமக் கவிஞர்" என்று போற்றினார்கள்.

● தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் உடன் இணைந்து செயல்பட்ட தன் விளைவாக "தமிழீழத்தின் ரணங்கள்" எனும் புகைப்படத் தொகுப்பை நூலாக வெளியிட்டு இருந்தார்.

● புலிகள் அமைப்பின் வெளியீட்டு பிரிவில் சில காலம் பணிபுரிந்தார்.

● இவரின் ஓவியங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. இதனால் 1971 ஆம் ஆண்டு கண்டி பிரான்சு நட்புறவு கழகத்தினரால் அவை மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டன.

(இவை என்னால் தொகுக்கப் பட்டவை. ஆனால் இவற்றைத் தாண்டியும் இன்னும் பல அடைவுகளும் இருக்கலாம்.)

பிரமிள் வாழ்ந்த காலத்தில் அவருடைய படைப்புகள் அதிகம் கோர்வை செய்யப்படாவிட்டாலும் பின்னராக அவருடைய தொகுப்புகள் பெரும் முக்கிய இடம் வகித்தன. இவரது படைப்புகளை அறிஞர்கள் ஆறு தொகுதிகளாக பிரிக்கிறார்கள்.

அவை...

தொகுதி 01 கவிதைகள்.
தொகுதி 02 கவிதைகள், நாடகங்கள்.
தொகுதி 03 விமர்சனக் கட்டுரைகள்.
தொகுதி 04 விமர்சனக் கட்டுரைகள்.
தொகுதி 05 போட்டிகளும் உரையாடல்களும்.
தொகுதி 06 மொழிபெயர்ப்பு, அறிவியல், ஆன்மீகம்.

பிரம்மிள் தன் கவிதைகள் ஒவ்வொன்றிலும் மிகப்பெரும் வார்த்தை ஜாலத்தை நிகழ்த்தி காட்டிக் கொண்டிருக்கிறார். வார்த்தைகளின் கூட்டுக்குள் தன் சுயம் மறைந்தபடி மிகப்பெரும் பிரளயமாய் வெடித்து கிளப்புகின்றது.

தன் படைப்புகள் தனித்துவம் வாய்ந்தவையாக இருக்கும் படியாக பல்வேறு ஆக்கபூர்வமான படைப்புகளை கொடுத்த இவர் லக்ஷ்மி ஜோதி, இலக்குமி, இளங்கோ, கௌரி, பூம் பொற்கொடி இளங்கோ, பிருமிள், பிரமிள் பானு, அரூப் சிவராம் போன்ற புனைபெயர்கள் கொண்டு அவ்வப்போது தன் ஆக்கங்களை எழுதியமை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் கவன ஈர்ப்பையும் பெற்றிருந்தன.

பொதுவாகவே பிரமிளின் படைப்புகள் இயற்கைக்கு நிகரானவையாகவும் முழுமையானதாகவும் கலைஞனின் மனோநிலையை வெளிப்படுத்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவியாகவும் அழகியல் உடையதாகவும் காணப் படுகிறன.

பிரமிள் எழுதிய படைப்புகளை அடையாளப்படுத்தும் போது அவை:

**கவிதைத் தொகுதிகள்:**

- கண்ணாடியுள்ளிருந்து
- கைப்பிடியளவு கடல்
- மேல்நோக்கிய பயணம்
- பிரமிள் கவிதைகள்

**சிறுகதைத் தொகுப்புகள்:**

- லங்காபுரி ராஜா: இந்த குறுநாவல் ஈழத்தின் விடுதலைப் போராட்டங்கள் பற்றி பேசுகிறது. அதுமட்டுமல்லாது இது தினமணி கதிர் இதழில் தொடர்ச்சியாக வெளி வந்திருந்தது.
- பிரமிள் படைப்புகள்

**ஏனைய நூல்கள்:**

- தியானதாரா
- மார்க்சும் மார்க்சியமும் - பீட்டர் வோர்ஸ்லி (தமிழ் மொழிபெயர்ப்பு),
- வானமற்ற வெளி: கவிதை பற்றிய
- பாதையில்லாப் பயணம்: (ஆன்மிக மறைமுகஞானப் படைப்புகள்),
- விடுதலையும் கலாச்சாரமும்: (மொழி பெயர்ப்பு படைப்புகள்),
- ஶ்ரீலங்காவின் தேசியத் தற்கொலை,
- காலவெளிக் கதைகள் (அறிவியல் கட்டுரைகள்),
- வெயிலும் நிழலும் (இலக்கிய விமர்சனக் கட்டுரைகள்),
- வரலாற்றுச் சலனங்கள் (சமுதாயவியல் கட்டுரைகள்),
- எதிர்ப்புச் சுவடுகள் (பேட்டிகள், உரையாடல்கள்),
- அறைகூவல் (இலக்கிய அரசியல் எழுத்துக்கள்),
- தமிழின் நவீனத்துவம் (எழுத்து இதழில் வெளிவந்த கட்டுரைகள்),
- சூரியன் தகித்த நிறம் (மொழி பெயர்ப்புக் கவிதைகள்),
- ஆயி: இந்த குறுநாவல் கன்னியாகுமரி சேலம் மாவட்டங்களில் வழங்கும் அம்மன் பற்றிய உண்மைச் சம்பவங்களைக் கொண்டது.
- பிரசன்னம் (குறும் நாவல்கள்),
- நட்சத்திரவாஷி (நாடகம்),
- விமர்சன ஊழல்கள் (நேர் காணல்கள்),
- விமர்சணாஸ்ரமம் (கட்டுரைத் தொகுப்பு),
- விமர்சன மீட்சிகள்.

துறவற வாழ்க்கை போன்ற வாழ்க்கையை வாழ்ந்து வந்த பிரமிள் பட்டம் பதவிகள் மற்றும் விருதுகளுக்கு என்றும் ஆசை கொண்டதாக எங்கும் இல்லை. இருந்த போதிலும் இவருக்கான அங்கீகாரத்தைக் கொடுக்கும் விதத்தில் முதலில் நியூயார்க் விளக்கு அமைப்பு "புதுமைப்பித்தன் விருதையும்" அதை அடுத்து கும்பகோணம் சிலிக்குயில் அமைப்பு "புதுமைப்பித்தன் வீறு" விருதும் கொடுத்துக் கௌரவித்தது.

பிரமிள் தனது விமர்சன கட்டுரைகளை பல இதழ்களில் எழுதி இருந்தார். இவை எழுத்து, கொல்லிப்பாவை, மீறல், லயம், அஃக், சதங்கை, யாத்ரா, படிமம், கற்குதிரை, திசைநான்கு, கனவு, நவீன விருட்சம், அரும்பு, பசுமை என்பனவாகும்.

இவை தாண்டி பிரமிள் கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம், சிற்பம், களிமண் சிற்பம், நாடகம், மொழிபெயர்ப்பு, விமர்சனம், ஆன்மீகம், ஜோதிடம், எண் கணிதம் என பல்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களிலும் ஆளுமை விருத்தியைப் பெற்றிருந்தார்.

எழுத்தாளர்கள், இலக்கிய விமர்சகர்கள், ஆய்வாளர்கள், இதழ் ஆசிரியர்கள், கட்டுரையாளர்கள் பிரமிள் பற்றி தங்களின் அனுபவ பகிர்வுகளை பல்வேறுபட்ட புத்தகங்கள் மற்றும் ஆய்வு கட்டுரைகள் உரையாடல்களில் பதிவு செய்கிறார்கள். சிலவற்றை வாசகர்களின் பார்வைக்காக தருகிறேன்.

- **'எழுத்து' இதழ் ஆசிரியர் சி. சு. செல்லப்பா -**

*"பிரமிளின் படிமவியல் 2000 வருட தமிழ்க் கவிதைச் சரித்திரத்தில் புதுமையானது. உரைநடையின் அதிகபட்ச சத்தியத்தை நிறை வேற்றியவர்."*

- **தி. ஜானகிராமன் -**

*"நவீன தமிழ் இலக்கியத்தின் மாமேதை"* என புகழ்ந்துரைத் துள்ளார்.

- **எஸ். ராமகிருஷ்ணன் -**

*"பிரமிள் தமிழ்க் கவிதையின் தனிப்பெரும் ஆளுமை"*

- **விமர்சகர் சங்கர ராம சுப்ரமணியன் -**

*"புதுக் கவிதை தொடர்பான அதிகபட்ச பிரக்ஞையும், மரபின் செழுமையும், சமத்காரப் பண்பும், தனித்துவமான படிம வெளியீட்டு முறையையும் பெற்றவர் பிரமிள்."*

- **கவிஞர் நகுலன் -**

*"இன்றைய தமிழ் இலக்கிய நிலையைப் பற்றி விமர்சன பூர்வமாக நிர்ணயிக்கும் முதல் கட்டுரை மௌனியின் கதைக்கு பிரமிள் எழுதிய முன்னுரை, 'எழுத்து' சஞ்சிகை மூலம் நமக்குக் கிடைத்த விமர்சகர். அவரது நடை சிந்தனைத்துடிப்பு மிக்கது. நுணுக்கமும், ஆழமும் உடையது. அவர் எழுத்து மேல்நாட்டு இலக்கிப் பரிச்சயத்தால் வளம் பெற்றது."* என்கிறார்.

- **ஆய்வாளர் கோவை ஞானி -**

*"தற்காலத் தமிழ்க் கவிதையில், படைப்பாற்றலில் முன்னணியில் உள்ளவர் பிரமிள் என்பதில் ஐயமில்லை. இவரது படிமங்கள், வைரப்படிமங்கள் தமிழ்க் கவிதைக்கு ஒரு சொத்து. இவரது கவிதைக்குள் மெய்யியல் பெற்றிருக்கும் ஆற்றலில்தான் இவரது உயர்நெறி தென்படுகிறது"*

- **விமர்சகர் பேராசிரியர் அ. மார்க்ஸ்**

*"தமிழின் முக்கிய எழுத்தாளர்களில் ஒருவரான பிரமிள், இங்குள்ள இலக்கிய மைய நீரோட்டத்தால் முழுமையாக வரவேற்கப்பட்டவர் அல்ல. அவர் வாழும் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தமிழ்ச் சிறுகதைத் தொகுப்புகளில் அவரது கதைகள் தவிர்க்கப்பட்டன. பரிசுகள், நிறுவனங்கள் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்படாத ஒரு விளிம்பு நிலை எழுத்தாளராக வாழ்ந்து மடிந்தவர் அவர்."*

- **பேராசிரியர் கால சுப்ரமணியம் -**

*"கவிதையிலும் விமர்சனத்திலும் தமிழின் முதன்மைத் திறனாளியாக மதிக்கப்படுகிறவர் அவர். அவருடைய கதைப்பிரபஞ்சம், அவருடைய வாழ் நாளில் முழுமையாகப் புத்தக ரூபத்தில் வாசகர்களுக்குக் கிடைக்காதது பெரும் குறையே. அப்படி வெளிவந்திருந்தால் சிறுகதையில் பிரமிளின் சாதனை முன்பே நிறுவப்பட்டிருக்கும்."*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கால சுப்ரமணியம் பிரமிள் கவிதைகளை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். பிரமிளின் அனைத்துப் படைப்புகளையும் தொகுத்து பதிப்பித்து ஆறு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

● 'இந்து தமிழ்' நாளிதழ் தனது இலக்கிய விழாவில் 'பிரமிள் விருது' என்ற பெயரில் படைப்பாளிகளுக்கு விருது வழங்கி சிறப்பித்து வருகிறது.

● 'இலங்கையில் தமிழ்க் கவிதைகள் ஒரு பார்வை' என்னும் கட்டுரையில் எழுத்தாளர், விமர்சகர் பூங்குழலி வீரன் பதிவு செய்துள்ளாதாவது:

"பிரமிளின் ஒவ்வொரு வார்த்தையும் எதையோ சொல்ல விரும்புகின்றது. அதையும் தாண்டி மிக ஆழமாக எதையோ உணர்த்தி நிற்கின்றது. உண்மை நிலையிலிருந்து விலகி ஓர் இலட்சிய கோபுரத்தின் ஆணியடித்தது மாதிரி உட்கார்ந்திராமல் இயல்பு வாழ்வை தன் கவிதைகளில் மையப்படுத்தி இருக்கிறார் பிரமிள். எப்போதும் முடிவற்ற வெளியை நோக்கியபடி இருக்கும் இவரது பார்வை. அன்றாட வாழ்வின் ஒவ்வொரு சிறு அசைவையும் மிக உன்னிப்பாகப் பார்க்க வல்லது. நான் எல்லோருக்குமாகத்தான் எழுதியிருக்கிறேன் என்று சொல்லா விட்டாலும் அவரது கவிதைகள் நம் அனைவருக்குமானது. தமிழ் விமர்சனப் போக்கிலிருந்து தனித் தொலித்த குரல் இவருடையது. வெவ்வேறு வகைப்பட்ட விமர்னப் போக்குடைய க.நா.சு. போலவோ, சி.சு. செல்லப்பா போலவோ இல்லாமல் இலக்கியக் கருத்தாக்க அடிப்படையில் படைப்பினை அணுகித் தர நிர்ணயம் செய்தவர் பிரமிள். இவருடைய வருகைக்குப் பின், நவீன தமிழ்ப் படைப்புகள் பற்றிய மதிப்பீடுகளில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன."

● **எழுத்தாளர் சி. மோகன் -**

"பிரமிள் தீவிரமான மனோ பாவத்துடன் நிகழ்வுகளை எதிர் கொள்பவர். எந்த ஒரு கால கட்டத்திலும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கலை இலக்கிய நிறுவனங்களின் அதிகாரப் பிரதிநிதிகளுடன் மருந்துக்குக்கூட உறவு வைத்துக் கொள்ளதவர். அவருடைய கலை இலக்கிய மனோபாவம் மதிக்கப்பட வேண்டியது. போற்றப்பட்ட வேண்டியது. தமிழின் மகத்தான படைப்புக்குரல் இவருடையது.

● **எழுத்தாளர் சி. மோகன்** பதிவு செய்துள்ளது:

"தமிழ்ச் சமூகம் கொண்டாடிப் பெருமிதம் கொள்ள வேண்டிய நவீன தமிழ்க்கவி பிரமிள். 2000 ஆம் ஆண்டு வளமான தமிழ்க் கவிதை மரபு செறிவும் -குறிப்பாக சங்கக் கவிதை மரபு- தனதான கவித்துவ மேதமையும் முயங்கியதில் வெளிப்பட்ட கவி. நவீன தமிழ்க் கவிதை இத்தகையதோர் படைப்பு ஆளுமையைக் கொண்டிருந்தும் அறிந்து கொண்டாட முடியாத நம் பேதமை இன்றைய சமூக அவலங்களில் ஒன்று."

மேற்கூறிய அறிஞர்களின் கூற்றுக்கள் தவிர்த்து இன்னும் பல பிரமிள் பற்றிய கூற்றுக்களும் நல்ல பல அபிப்பிராயங்களும் இலக்கிய வாதிகள் மற்றும் மக்களிடையே காணப்படுகிறன என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

அதுமட்டுமல்லாது ஈழத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் இன்றளவும் முழு உலகமும் போற்றப்படுகின்ற அளவுக்கு தமிழுக்கும் தமிழ் சார்ந்த அத்தனை கலை இலக்கிய நகர்வுகளுக்கும் தன்னையே தியாகம் செய்து பணியாற்றி இருப்பது எம்மை எல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

இவர் மட்டுமல்ல இவர் போன்ற எத்தனையோ எழுத்தாளர்கள் கவிஞர்கள் இன்றளவிலும் ஈழத்து எழுத்தாளர்களாக போற்றப்பட்டு தான் வருகிறார்கள். அதை யாரும் மறுத்து விட முடியாது. அந்த எழுத்தாளர்களுக்கு அங்கீகாரம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இன்று இல்லை என்றோ ஒரு நாள் அந்த அங்கீகாரம் கிடைத்தே தீரும். இதுதான் இலக்கிய நகர்வின் மறைவான புகழ் என்பது நிஜம்.

உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் பிரமிளின் சில கவிதை வரிகளை உங்களின் ஆழ்ந்த வாசிப்புக்காக தருகிறேன். அதன் படிமங்களை சுவைத்து பாருங்கள்.

## ரஸவாதம்

இதயத்தில் உன் மறுப்பின்
வேல் புதைந்து
வாய் பிளந்து
பசி என்ற குரல் எடுத்தது
வடு
குரல் மேட்டு
தாய் மன நிலவு
முலை சுரந்தாள்
சொரிந்ததுவோ
துக்கத்தின்
விஷ நீலம்
ஆனால்
பருகிய வடுவின்
இதய வயிற்றுள்
துக்கம் செரித்துப்
பிறந்தது
வேதனை அமிர்தம்.
(கொல்லிப்பாவை - 4, 1978)

## குமிழிகள்

இன்னும்
உடையாத ஒரு
நீர்க்குமிழி
நதியில் ஜீவிக்க
நழுவுகிறது.
கைப்பிடியளவு
கடலாய் இதழ்விரிய
உடைகிறது
மலர்மொக்கு.

## இடம்

மீனுக்குத் தண்ணீர்
மிருகத்துக்கு
பிராண வாயு
மனிதாத்மாவுக்கோ
மனம் தான் வெளி.
(லயம். ஏப்ரல் 1995.)

## புகைகள்

உயர்ஜாதிக் காரி
ஒருத்தி நகத்தோடு
என்பறை நகம்மோதி
ஊர் அதிர்ந்தது
ஐயாயிர வருஷத்து
இரவு சிவந்து
எரிந்தது என்சேரி...
புகைகள் கலந்து
இருண்டது இன்றென்
உதய நெருப்பு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உலகம் போற்றும் மகா கவிஞராகவும் எழுத்தாளராகவும் வாழ்ந்த பிரமிள் உயிர் கொல்லி நோயான புற்று நோயால் பாதிக்கப்பட்டு வேலூர் அருகில் உள்ள காரைக்குடி எனும் கிராமத்தில் **06.01.1997**ல் இறையடி எய்தினார்.

இப்படியாக தமிழ் கூறும் நல் உலகுக்கு தொண்டாற்றிய மாமனிதர் பிரமிள் போன்ற பல நூறு பிரமிள்கள் ஈழத்தில் இன்னும் உருவாக வேண்டும். அவர்களின் புகழ் முழு உலகிலும் பரவிடும் அளவு தமிழுக்கு அவர்கள் தொண்டாற்ற வேண்டும் என்று அவாக் கொண்டவனாய் நிறைவு செய்கிறேன்.

**(முற்றும்)**



கவிப்பொய்கை
ஜவ்ஸான் அஹமட்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

ஜெனீரா தௌபீக்
ஹைறுல் அமான்
கிண்ணியா.

# ஓய்வு நேரங்களைப் பயனுறக் கழித்து இன்புறுவோமாக!



இரவும் பகலும் இயற்கை அன்னை ஈன்றெடுத்த இரட்டைக் குழந்தைகள். இதன் அருமை தெரியாத மனிதன் இரவு, பகலாய் ஓய்வு ஒளிச்சலின்றி நாயாய் பேயாய் அலைகிறான். இதனால் நிம்மதியின்றித் தவிக்கிறான். இறைவன் மனிதருக்கு இரவை ஓய்வாக்கியுள்ளான்.

எந்த ஒரு செயலில் ஈடுபட்ட பின்பும் களைப்பைப் போக்கச் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்வது அவசியமாகும். இயந்திரமாய் ஓய்வின்றி வேலை செய்வது ஆரோக்கியத்தைப் பாதிப்படையச் செய்யும். சற்று ஓய்வெடுத்த பின், மீண்டும் தத்தம் வேலைகளைத் தொடர்வதால் மகிழ்சியுடனும், புத்துணர்ச்சியோடும் கருமமாற்ற முடியும். இதனால்தான் பாடசாலைகள், அலுவலகங்கள், நிறுவனங்களில் "இடைவேளை" கொடுக்கப்படுகின்றன. ஓய்வெடுத்தன் பின் கடமைகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவதற்காகும்.

பாடசாலைகளில் சனி, ஞாயிறு, அரசாங்க விடுமுறைகள், போயா விடுமுறைகள் வழங்கப்படுவதன் நோக்கம் "ஓய்வை" பெற்றுக் கொள்வதற்காகும். அதனை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அதிகமான சிறுவர்கள் தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களை வீணாகக் கழிக்கின்றனர். வீதிகளில் கிரிகட் விளையாடுவதும், மற்றவர்களின் பொருட்களைச் சேதப்படுத்துவதும் வாகனங்களுக்குத் தீங்கு விளைவிப்பதும் சர்வசாதாரணமாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இளைஞர்-யுவதிகள் போனுக்கு அடிமையாகிவிட்டனர். நல்லது-கெட்டது தெரியாது. அதில் வரும் ஆபாசக் காட்சிகளைக் கண்டு களிப்புறுகின்றனர். வீட்டிலுள்ளவர்களோ, மற்றவர்களோ அழைத்தால் காதில் விழுவதில்லை. முழுக் கவனமும் போனிலேயே கழிகின்றது. குழந்தை அழுதால் தாய்மார் போனைக் கையில் கொடுத்துவிடுகின்றனர். உடனே குழந்தை அழுகையை நிறுத்தி போனில் லயித்துவிடுகிறது. ஆசிரியர்களும் ஒன்லைன் மூலம் பாடங்களைக் கற்பிக்கின்றனர். இது மாணவர்களுக்கு மேலும் தூண்டுதலாக அமைகிறது. கிரகிக்கும் ஆற்றலோ, கற்பனைத் திறனோ வளர்வதில்லை. நாளடைவில் கண் பார்வை குறைந்து, காது கேளாமல் மூளைப் புற்று, மூளையில் கட்டி போன்ற நோய்கள் ஏற்பட வழிவகுக்கின்றன.

எனவே ஓய்வு நேரத்தை வீணாகக் கழிக்காமல் பயனுள்ள பொழுதாக மாற்றியமைத்தால் வாழ்க்கை சிறப்புற அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நேரம் உயிரைப் போன்றது. போனால் திரும்பி வராது. பொன்னான நேரத்தை மண்ணாக்காது பயன்படுத்துங்கள்.

ஓய்வு நேரங்களில் பூந்தோட்டம் அமைத்தல், காய்கறித் தோட்டம் செய்தல். இது மனதுக்கு நிம்மதியையும், சந்தோசத்தையும், கண்களுக்குக் குளிர்ச்சியையும் தரும். உடனுக்குடன் காய்கறிகளையும், மரக்கறிகளையும் பெறலாம். மேலதிகமானவற்றை விற்பனை செய்யலாம். மீன் தொட்டியில் மீன்களை வளர்க்கலாம், லவ் பேட்ஸ் வளர்க்கலாம். இதனால் கவலைகள் மறந்து மனநிம்மதி ஏற்படும். பொழுது போவதும் தெரியாது. கழிவுத் துணிகளால் மேசைவிரிப்பு, கட்டில்விரிப்பு, திரைச் சீலை என்பவற்றைத் தைக்கலாம். வெவ்வேறு நிறத்தினலான துணிகளைக் கலந்து தைப்பதால் எடுப்பாகவும், அலங்காரமாகவுமிருக்கும். மனதுக்குப் பிடித்த ரம்மியமான பாடல்களைக் கேட்டு மகிழலாம். தொலைக் காட்சி நாடகங்களைப் பார்த்து இரசிக்கலாம்.

மேலும் பிள்ளைகளை அருகிலுள்ள நூலகங்களுக்கு அழைத்துச் செல்லலாம். படிப்பினையூட்டும் சிந்தனை தரும் கதைகள், அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகள், நகைச்சுவைக் கதைகள், பொன்மொழிகள் போன்றவற்றை வாசிக்கத் தூண்டலாம். எழுதவும் பழக்கலாம்.

நல்லதையே பார்த்து, நல்லதையே கேட்டு வளர்வதனால் வீட்டுக்கும், நாட்டுக்கும் பிரச்சினை இல்லாமல் வாழலாம். ஒவ்வொருவரும் ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வழியில் செலவு செய்வார்களாயின், சிறப்பானதொரு எதிர்காலம் அமையும் என்பது திண்ணம்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் நயம்

# பிஞ்சு மனம்

## வெலிகம ரிம்ஸா முஹம்மத் அவர்களின் சிறுகதைத் தொகுதி பற்றிய ஒரு பார்வை

நூல் கண்ணோட்டம்:
**- சுமைரா அன்வர் -**

சகோதரி வெலிகம ரிம்ஸா முஹம்மதின் 15 ஆவது நூலாக அண்மையில் வெளியிட்ட "பிஞ்சு மனம்" (சிறுகதைகள்) நூலை வாசிக்கும் வாய்ப்பெனக்குக் கிடைத்தது. "பிஞ்சு மனம்" தொடங்கி "வீடு" வரை 152 பக்கங்களில் பதினெட்டு சிறுகதைகளை உள்ளடக்கியிருக்கும் இந்த நூல் அழகான அட்டைப் படத்துடன் கருத்தைக் கவர்ந்துவிடுகிறது. இந்தக் கதைகளை வாசித்து நான் பெற்ற அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நாம் வாழும் சூழலிலுள்ள சமகால நிகழ்வுகளை மையமாகக் கொண்ட நம்மோடு உலவும் சக மாந்தர்களையே காத்திரமான கதாபாத்திரங்களாக்கி, உயிரோட்டமும் உணர்வும் மிக்க சிறந்த கதைகளைப் படைத்துள்ளார் சகோதரி ரிம்ஸா முஹம்மத். இந்த நூலில் இடம் பெற்றுள்ள அனைத்துச் சிறுகதைகளுமே நிறைய செய்திகளைச் சொல்லுகின்றன. மனதில் பதிந்து நிற்கின்றன. சமூகத்துள் இலைமறை காயாக இருக்கும் பல பிரச்சினைகளை சகோதரி ரிம்ஸா முஹம்மத் துணிவுடன் முன்வைத்துள்ளமை மிகவும் பாராட்டத் தக்க விடயமாகும்.

நூலில் முதல் சிறுகதையாக பக்கம் 17 இல் இடம் பெற்றுள்ள "பிஞ்சு மனம்" என்ற அருமையான சிறுகதை மனதை மிகவும் கனக்கச் செய்கிறது. உரிய அன்பு கிடைக்காது அநியாயமாக நிராகரிக்கப்பட்ட பிஞ்சு மனம் படும் அவஸ்தையை யதார்த்தமாக வெளிப்படுத்தும் கதாசிரியை எம்மையும் அழ வைக்கிறார். அதேவேளை கதையின் நிறைவு எம் மனதையும் சற்று ஆறுதல் படுத்துகிறது. இக்கதையில் பிரச்சினையையும் எடுத்துக் காட்டி அதற்கான தீர்வையும் வெளிப்படுத்தியுள்ளமை சிறப்பாக உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் 24 இல் அமைந்துள்ள "பணம் பந்தியிலே", "நன்றிக்கடன்" (பக்கம் 138) ஆகிய இரு கதைகளின் மூலம் "கடன்" படுத்தும் பாட்டையும் உறவுகளின் முறிவுக்கு எப்படியெல்லாம் கடன் காரணமாகின்றது என்பதையும் அச்சொட்டாக கதாசிரியர் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

"மனிதம் வாழும்" (பக்கம் 34), "வீடு" (பக்கம் 146) ஆகிய சிறுகதைகள் மூலம் மனித நேயம் மிக்க மனிதர்களும் எங்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை, மனதை ஆகர்ஷிக்கும் வகையில் கதாசிரியர் சகோதரி ரிம்ஸா முஹம்மத் எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

"சப்பாத்து" (பக்கம் 70) என்ற தலைப்பிலான சிறுகதையும் பிஞ்சு மனமொன்றின் 'வலிகளை' மிக ஆழமாகப் பதித்துள்ளது. புறக்கணிப்பும் அடுத்தவர் நிலையைப் புரிந்துகொள்ளாமையும் திறமைக்கு வாய்ப்பளிக்காமையும் எமது சமூகத்தில் சாதாரணமாக நிகழும் சம்பவங்களாகி வருவதைக் கண்கூடாகவே காண்கிறோம். இந்த சிறுகதை மூலம் அவ்வாறான ஒரு சம்பவத்தை நேரில் பார்ப்பது போன்ற உணர்வே எனக்குள் ஏற்பட்டு நிற்கின்றது.

"வாழ்க்கை வளைவு" (பக்கம் 100) அருமையான 'பேசுபொருளை' உள்ளடக்கிய சிறுகதையாகும். வாழ்க்கைத் துணையை இழந்த ஒருவரின் (கணவனின்) மனத் துயரங்களை, சகோதரி ரிம்ஸா மிக யதார்த்தமாக வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறான கருப்பொருளை தேர்ந்தெடுத்த சகோதரியை பாராட்டியேயாக வேண்டும்.



வெலிகம ரிம்ஸா முஹம்மத்

இந்நூலிலிருந்த 18 சிறுகதைகளில் சில கதைகளையே எனது பார்வையில் நானிங்கு பதிவேற்றியுள்ளேன். எளிமையான மொழிநடையில், எதுவித அலட்டலுமில்லாமல், மிக யதார்த்தமான முறையில், ஆனால், கனதியான 'கருப்பொருளாக்கி', சமூகத்துள் தன் சிறுகதைகளைப் பேசுபொருளாக்கி தன் திறமையைப் புடம்போட்டிருக்கும் இலக்கிய ஆளுமை, பன்னூலாசிரியர் சகோதரி ரிம்ஸா முஹம்மத் அவர்களின் திறமைக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள். அத்தோடு, இனிவரும் காலங்களில் மேலும் பல சிறுகதை நூல்களை வெளியிட வேண்டுமென்பதென் அன்பான வேண்டுகோள்.

நூல் – பிஞ்சு மனம்
நூல் வகை – சிறுகதை
நூலாசிரியர் – வெலிகம ரிம்ஸா முஹம்மத்
தொலைபேசி – 0775009222
வெளியீடு – பூங்காவனம் இலக்கிய வட்டம்
விலை – 1,000 ரூபாய்

நூல் கண்ணோட்டம்:– சுமைரா அன்வர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் நயம்

### மூதூர் முகைதீன் அவர்களின்

# வண்டில் மாமா

**வி**ருதுகள் பல பெற்ற "வண்டில் மாமா" சிறுவர் பாடல்கள் ஒரு பார்வை.

2023 ஆம் ஆண்டில், சிறந்த சிறுவர் இலக்கிய நூலுக்கான "இலங்கை அரச சாகித்ய விருதையும்", கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் "சிறந்த சிறுவர் இலக்கிய நூலுக்கான விருதையும்" "வண்டில் மாமா" சிறுவர் பாடல்கள் நூல் பெற்றுள்ளது.

இந்நூலை, நாடறிந்த பொன்விழா கண்ட எழுத்தாளரும், கவிஞருமான மூதூர் முகைதீன் எழுதியுள்ளார். உலகில் அநியாயமாக பலியாகும் அப்பாவிக் குழந்தைகளுக்கு அர்ப்பணம் செய்துள்ளார். இந்த அர்ப்பணமானது, குழந்தைகள் அனாதைகளாக்கப்படுவதும், துஷ்பிரயோகம் மற்றும் கொலை செய்யப்படும் உலக நடைமுறைக் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுவதற்கும், ஆணித்தரமான வரலாற்று சான்றாக உள்ளதைப் பாராட்டுகிறேன்.

பாடல் ஒன்றில்,




**மூதூர் றிஸ்வின்**

கட கட சத்தம்
கட கட சத்தம்
வண்டில் மாமா வருகின்றார்
வண்டில் மாமா வருகின்றார்.

இரட்டை மாட்டு வண்டி ஓட்டி
வண்டில் மாமா வருகின்றார்.
(கட கட சத்தம்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சக்கரம் இரண்டும் உருண்டு ஓட**
**கலகல என்று சலங்கை ஒலிக்க**
**சந்தோசமாய் சவாரி செய்து**
**வண்டில் மாமா வருகின்றார்.**
**(கட கட சத்தம்...)**

இப்பாடலில் வண்டிச் சத்தம் கேட்டு, சிறுவர்கள் ஓடோடி வருகிறார்கள். வண்டில் மாமாவை நிறுத்தச் சொல்லி, வாகனம் எதுவும் வரவில்லை. சந்தையில் சாமான் வாங்கனும், சந்தோசமாய் ஆடிப் பாடி, அங்குமிங்கும் பார்த்து, ரசித்து, மகிழ்வாய் பயணிக்கப் போகிறோம். எங்களையும் ஏற்றுங்கள் என சிறுவர்கள் கேட்க, வண்டில் மாமாவும், ஏற்றிக் கொண்டு சந்தை சந்தியடியில், இறக்கி விடுவதாக பாடல் துள்ளிக் குதிக்கையில், நூலாசிரியர்

**மாசுகள் இல்லா வாகனம் இதுவே**
**மதித்து நன்றி சொல்வோமே.**

என்ற வரிகளில் உலக சுகாதாரத்தை முன்னிலைப் படுத்துவது சிறப்பு. இப் பாடலில் வரும் "வண்டில் மாமா" வே நூலின் தலைப்பு.

**ஊர்குருவி ஊர்குருவி**
**உருவத்திலே சிறுகுருவி**
**ஊரெங்கும் பறந்துபறந்து**
**உணவு தேடும் ஊர்குருவி.**

இந்த பாடலில் குருவியின் துடிதுடிப்பு, அழகு, ஒற்றுமை பற்றி மனந் திறந்து பாடும் போது,



**அடித்து விரட்டும் வீட்டினிலே**
**அடையாதே ஊர்குருவி**
**குடிசை வீட்டில் நானும் உள்ளேன்**
**குடியிருப்போம் வா குருவி.**

இங்கே,
சிறுவர்களாகவே கவிஞர் மனம், அடைக்கலம் கொடுத்து, அன்பு காட்டுவது, ஜீவகாருண்ணியத்தை போதிக்கும் போதி மரமாகவும், பாடல் பணியாற்றுகிறது.

இருபத்தாறு பாடல்களும், உலகச் சிறுவர்களுக்கு கிடைத்த, செயற்கை அறிவு மருத்துவ அமேசன் காடு என்று சொல்வதே சாலப் பொருத்தம்.

இந்தியாவில் இறந்து போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகவி பாரதியார், இலங்கையில் திடீரென வந்து,

**பாலர் நாம் விளையாட**
**பால் நிலவு பொழியுதே**
**பாதையிலே நடந்து போனால்**
**பக்க துணையாய் நகருதே**

என்று பாடியுள்ளார் என்பதை நாலடிகள் நிரூபிக்கிறதல்லவா!

எழுத்துப் பிழைகளின்றி, பாடல்களுக்குப் பொருத்தமான படங்களுடன், ரம்மியமான முன்னட்டையோடு வெளியிடப்பட்டுள்ள நூலை, ஆண்டு தோறும் மீள்பிரசுரம் செய்து சிறுவர்களிடம் கையளிப்பதற்கு பெற்றோர்களும், ஆசிரியர்களும் மற்றும் சம்மந்தப்பட்ட அனைவரும் முயற்சிக்க வேண்டும் என்பது எனது பணிவான கருத்து.

"மழைக் காலம்", "எனக்கு சிறகு முளைத்தால்", "தாலாட்டு", ஊஞ்சல் எனப் பற்பல பாடல்கள் அருமையாக உள்ளன. சில வேளை பெரியவர்களுக்கும், நன்மை பயக்கும் தரத்திலேயே உள்ளதாக எழுதவும் தோன்றுகிறது.

**பழங்கள் பச்சை காய்கறிகள்**
**பறித்து நாளும் புசித்திடு**
**நலமாய் நீயும் வாழ்ந்திட**
**நச்சு உணவைத் தவிர்த்திடு.**

இப்பாடல் கூறும் கருத்து, இளமையில் உட்கொள்ளவேண்டிய உணவுகளைப் பிஞ்சு மனதில் குடியேற்றி, அவர்கள் முதுமையடையும் காலத்தில், இளமையான தோற்றத்திற்கும், நோயின்றிய வாழ்க்கைக்கும் பேருதவியாக அமையும் என்பதைப் பறைசாற்றுகிறது.

நூல் முற்றாக முத்தாகவும், சத்தாகவும் காணப்படுவதற்கு இரண்டு விருதுகள் வழங்கப்பட்டமை, சிறுவர் இலக்கிய உலகுக்கு கிடைத்த கௌரவம். ஏற்கெனவே பல விருதுகளையும், பரிசுகளையும் பெற்ற கலாபூஷணம் மூதூர் முகைதீன் அவர்கள் கவிதை, கட்டுரை, சிறுகதை, பாடல்கள், உருவகக் கதைகள் எனப் பத்து நூல்களை எழுதியவர்.

இலக்கிய உலகில், எழுத்தாளருக்கும் அவரது நூலுக்கும், இருதளத்தில் விருது கிடைப்பது, வாசிப்பு அனுபவத்தையும், எழுத்தாற்றலின் பக்குவ முதிர்ச்சியையும், இனங்காட்டும் குறியீடாகவே அவதானிக்க முடிகிறது.

ஒட்டு மொத்தமாக சுருங்கக் கூறினால், "ஓசை" இதழாசிரியரான மூதூர் முகைதீன் அவர்களுடைய இந்த **வண்டில் மாமா** சிறுவர் பாடல் நூலானது, நாளையத் தலைவர்களான, இன்றைய சிறுவர்களின், இரவு பகல் இரு விளக்குகளாகும். இதில் காணப்படும் பல பாடல்கள், எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் பாடப் புத்தகத்தில் இடம்பெறும் தரங்கொண்டவையாகக் காணப்படுகின்றன என்பது வீரியமுள்ள கருத்தாகும்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் நயம்

# மொழியின் சுவாசம்

## 'மொழியின் சுவாசம்' என்னும் கவிக் கூடலில் மலீஸ் அமீன் கவிதைகள்.

கவிதை என்பது மனிதன் தன்னை தானே விசாரணைக்கு உட்படுத்தும் சமூகத்தை விசாரணைக்குட்படுத்தும் ஒரு விடுதலைக் கருவி. அனுபவங்கள் கலையாகி கவிதைகளாகி சமூக மனங்களிடையே தூவப்படுகின்றன. எழுத்து ஒருவரின் ஆத்மாந்த வினை. அவரின் மனதோடு கதை பேச கிடைக்கும் வாய்ப்பு. அந்த வகையில் இலங்கை மருதமுனையைச் சேர்ந்த கவிஞர் மலீஸ் அமீன் அவர்கள் தனது நான்காவது **மொழியின் சுவாசம்** கவிதை தொகுதியோடு இலக்கிய உலகில் வலம் வருகிறார்.

**– பேராசிரியர் அ. சுமதி மணி –**




எழுத்தாளப்படுகின்ற விஷயம் எதைப் பற்றியதாக இருந்தாலும் அந்த எழுத்து இயல்பானதாக இலயிப்பைத் தருவதாக வேறு பயன் கருத்தாக இருக்க வேண்டும். இதைப்பற்றி சொல்லலாம், இதைப்பற்றி சொல்லக்கூடாது என்பது போன்ற கொள்கை சார்பு நிலைகள் கடந்து அவைகள் நிற்க வேண்டும் என்பது நவீன கவிதைகள் பற்றிய கொள்கைகளுக்குப் பொதுவானதாகும். மலீஸ் அமீன் இந்த **மொழியின் சுவாசம்** மற்றும் அவருடைய ஏனைய கவிதை நூல்களுடன் இக்கருத்து கூடுதலாகவே ஒத்துப் போகின்றது. இந்த வகையில் **மொழியின் சுவாசம்** தொகுப்பினூடாக எழுத்தாளர் தன்னுணர்வு சமூகத்து வாழ்வு குறித்து கவனம் செலுத்தியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி வாழ்வின் அனுபவங்கள், எண்ணங்கள், உணர்வு நிலைகள் என்பவற்றை வார்த்திருக்கும் அதே வேளை சில கவிதைகளில் ஏதோ ஒரு சோகம் இளையோடிச் செல்வதைக் காணலாம். இவரின் மனத்திரையில் எல்லா மனிதர்களும் மதிக்கப்பட வேண்டியவர்கள். சமநிலை, புரிந்துணர்வு, மனிதநேயம் ஏழைகளுக்கும் இருக்க வேண்டும் என்பதில் கவிஞர் மலீஸ் அமீன் முனைப்புடையவராக இருக்கின்றார்.

மேலும் **மொழியின் சுவாசம்** கவிதை தொகுதியில் சில வரிகளை பகிர்ந்து கொள்ள விளைகையில்,

**அற்புதம் என்பது**
**பெரும் செல்வத்தை**
**நேசிப்பதில்**
**காண முடியாது**
**ஆடம்பர வாழ்க்கையில்**
**இதை காண முடியாது.**

**அதை ஓர் ஏழ்மையின்**
**சிரிப்பில் தான் காணமுடியும்.**
**உணர்வதற்கு**
**உங்களுக்கு நீண்ட**
**நாட்கள் ஆகலாம்.**

இதேபோல்,

**பூக்கும் காலத்திற்கும்**
**காய்க்கும் காலத்திற்கும்**
**இடையில்தான்**
**அழகான ஒரு காதல் பிறக்கின்றது.**

அவரது அழகான வரிகள்.



அதேபோன்று **அம்மாவின் முதல் முத்தம்.** இந்தக் கவிதையில்

**அளவிடைகள் உண்மையான**
**சித்தாந்த காலத்தில்**
**பண்பாடுகளை**
**இணைக்கும்**
**அன்பான காதல் வாழ்க்கை**

வரிகளும் தாய்மைக்கு அவர் கொடுக்கும் உயர்ந்த முக்கிய நிலையான பண்பை இங்கு காட்டுகின்றது.

செடி கொடி தாவரங்களைக் கூட ஒரு சக உயிராக மதிக்கும் உயர்குணம், மரத்துடன் உட்கார்ந்து பேசி அதையும் பேச வைக்கும் பண்பு மலீஸ் அமீன் அவர்களையும் எழுத்துக் கலைஞனாக உயர்த்தி வைக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









விசேடமாக கவிஞர் மலீஸ் அமீன், அவருடைய "பூகோள பசுமையை" நோக்கி மரம் நடுகை திட்டம் சிறப்பாக நடைபெற இந்நேரத்தில் வாழ்த்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு படைப்புக்கான குறித்த அக்கறை பெரும்பாலான நம் எழுத்தாளர்கள் கொண்டிருப்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. எழுத்தை செப்பனிட்டு ஒரு பொறுப்புடன் கையாளும் கவிஞர்களில் **மலீஸ் அமீன்** குறிப்பிடத்தக்கவர்.

எனவே, ஒரு படைப்பில் மொழி நடையும் பிரதான பங்கு வகிக்கின்றது. படைப்புக் கவிதைகளில் மொழிக் கருத்தை மட்டுமல்லாமல் அனுபவத்தை வெளிக் கொண்டுவரும் சக்தி கொண்டதாக இருக்க வேண்டும். மலீஸ் அமீன் படைப்புகளில் மொழி அந்த சக்தி கொண்டதாகவே இருக்கிறது.

Ameen (BA) Foundation பதிப்பகம் வெளியிடும் இந்த **மொழியின் சுவாசம்** கவிதை தொகுதியில் மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டும் கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தக் கவிதை தொகுதி ஈழத்து கவிதை உலகின் ஓர் ஆரோக்கியமான வரவு என்பது மறுக்க முடியாதது.

**வாழ்த்துக்கள்.**


## அ. சுமதி மணி
**பேராசிரியர்**
**அண்ணா பல்கலைக்கழகம்**
**சென்னை,**
**தமிழ்நாடு,**
**இந்தியா.**


2025/02/23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடு மஞ்சள் மாம்பூ




எழுத்தாளர் கவிஞர் நூலாசிரியை டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் மூன்றாவது நூலான **மஞ்சள் மாம்பூ** ஹைக்கூ நூல் ஏறாவூர் நகரில் வெளியீடு.

ஏறாவூர் நகர சபை பொது நூலகங்கள் இணைந்து நடாத்திய தேசிய வாசிப்பு மாதம் - 2024 இறுதி நாள் விழாவும் டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் எழுதிய **மஞ்சள் மாம்பூ** ஹைக்கூ கவிதை நூல் வெளியீடும் கடந்த 21-02-2025 வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 4 மணிக்கு ஏறாவூர் வாவிக்கரைப் பூங்காவில் மிகவும் சிறப்பாகவும் கோலாகலமாகவும் நடைபெற்றது. ஏறாவூர் பொது நூலக ஏற்பாட்டில் இவ்விழா பலவிதமான நிகழ்வுகளோடு ஜனரஞ்சகமாக அமையப் பெற்றிருந்தது. இவ்விழாவில் ஏறாவூர் நகரசபையின் செயலாளர் எம்.எச்.எம் ஹமீம் தலைமை தாங்க ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். செங்கலடி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எச். எம். மௌஜுத், வைத்திய அதிகாரி டாக்டர் ஜலீலா முஸம் மில், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இப்பெரு விழாவில் பங்கு கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










நூல் பெற தொடர்பு கொள்ளுங்கள்:

+94771308495

jaleelamuzammil@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# கொட்டார்ர சந்தியின் கதை

## – டீன் கபூர் –

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் திண்ணையில், வாசல் மணல் வெளியில் மண்ணெண்ணெய் விளக்கின் மிதந்த ஒளியில் மூத்தம்மாவின் பேய்க் கதைகளை நாங்கள் கேட்டு உறைந்திருப்போம். கொட்டார்ர சந்தியில் ஊளையிடும் நாயின் குரல் கேட்டு பயந்து ஓடியவர், வம்மியடியில் காத்திருக்கும் பேய், வேம்பின் உச்சியில் நின்று ஆடும் வெள்ளைச் சேலை, ஓடாவியார் மாமி என நாங்கள் அழைக்கும் ஓடாவியாரின் மனைவி சிறு பிள்ளையாக இருக்கும் போது ஒரு தடவை பேய் ஆல மரத்தில் ஏற்றி வைத்திருந்த கதை என்று சொல்லும் ஒவ்வொரு கதையும் நம் மனதில் நிழல்களைப் போல பதிந்து போனவை.

ஆனால்; இப்போது என் கிராமம் மறைந்தது போலே அந்தக் கதைகளும் தொலைந்து விட்டன. மஸ்தார்ர ஆலமரத்தின் அடியில் விளையாடிய பிள்ளைகள் இப்போது நகரத்தின் இருளற்ற இரவுகளில் கண்ணாடித் திரை முன்னால் நேரத்தைச் செலவழிக்கின்றனர். எங்கோ தொலைந்து போன பச்சையம். வெறிச்சோடிக் கிடக்கும் வயல்கள், வளர்ந்து போன கட்டிடங்கள்... கதைகளில் பேசப்பட்ட புளிய மரம் காத்திருக்கும் பேய்களோடு அழிந்துவிட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாலையில் பழைய வீடுகளுக்கு எதிரே புதியதாய் எழுந்த ஒரு மல்ட்டி-ஸ்டோரி குடியிருப்பின் அடியில் நின்றபோது எங்களது பேய் கதைகளில் இருந்து எதாவது எஞ்சியிருக்கிறதா என சிந்தித்தேன். மூத்தம்மா இல்லாத இரவுகளில் குப்பி விளக்குகளும் மின் விளக்குகளால் மாற்றப்பட்டுவிட்டன. மகிழ்ச்சியும், பயமும் எதுவுமின்றி அதே விளக்குகளுக்குக் கீழே, கம்ப்யூட்டர் திரைகள் சிறுவர்களின் கதைகளை மாற்றி எழுதுகின்றன.

அந்த திண்ணைக்கும் வாசல் வெளிக்கும் மீண்டும் ஒரு முறை நடந்துவந்தேன். போன இடமெல்லாம் பழைய செய்திகள் அழிந்திருந்தன. கொட்டார்ர சந்தி, வம்மியடி, புளிய மரம். இவை யாருக்கும் இப்போது பொருளற்ற பெயர்களாய் மாறியிருந்தன. வீடுகள், பாதைகள், மரங்கள் எல்லாம் நகர வாழ்க்கையின் அடையாளங்களில் தொலைந்து போய்விட்டன. எங்கள் குழந்தைப் பருவம் இப்போது வெறும் நினைவுகளின் தூரமாக மட்டுமே இருந்தது.

இரண்டு நிமிடங்கள் வரை நில்லாமல் நகரும் வாழ்க்கை என்னை விடாமல் இழுத்துக்கொண்டிருந்தது. “கொட்டார்ர சந்தியில் யாரும் இல்லை” என்று சொல்லிக்கொண்டே, மறைந்த கதைகள் முழுதும் ஒரு மூச்சாக மாறின. என் முன்னே பெரிய வீடுகளும், பைத்தியம் பிடித்த நகரமும் வெறும் மனோபாவங்களாக மாறி, குழந்தைப் பருவம் நான்கு சுவர்கள் இடையில் சிக்கியிருந்தது.

மெதுவாக நகர்ந்து செல்லும் ஒரு நிழல்... அது யாருடைய நிழல்? வம்மியடியின் நிழல்? அல்லது புளிய மரத்தின் குரல்?

அந்த நிழல் என் கண் முன் மிதந்தது. அது மாறி மாறி பல வடிவங்கள் எடுத்தது. முதலில் புலியின் குரல் போலக் கேட்டது, பின்னர் வம்மியடியில் மூத்தம்மா சொல்லிய பேய் போலவும் தெரிந்தது. என் மூச்சு வேகமாகியது. இங்கே இப்போதும் அந்தக் கதைகளின் நிழல்கள் சிதறி இருக்கின்றனவோ?

குப்பி விளக்குகள், தெருக்களில் ஓடிய காற்று, பழங்களின் கொடி எங்கோ மறைந்து போன காலத்தின் சுவடுகள். ஆனால், அதனுடன் வந்த பயங்கள் மட்டும் இப்போது ஒரு வினாடியில் எனக்குள் திரும்பி வந்தது போல உணர்ந்தேன். அந்த புளிய மரத்தின் அடியில் நிற்பது யார்? நான் உண்மையில் கேட்கிறேன், அந்த நிழல் என்னைப் பார்த்தது. அந்த மரத்தின் பேய் இப்போது நகரத்தின் அடியில் மிதந்துகொண்டிருக்கிறதா?

மார்பு பிடுங்கிக் கொண்டு இருந்த சுவாசத்தை சமாளிக்க என்னால் முடியவில்லை. நகரத்தின் ஒவ்வொரு வழிகளிலும் இருந்த கதைகள் இப்போது புதிதாய் எழுதப்பட்டன. மூத்தம்மாவின் குரல் மனதில் நின்றது: “பேருந்து போன இடம் எல்லாம், பேய்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் செல்கின்றன. அந்த மரம் எப்போதும் காத்திருக்கும்."

அந்த நிழல் நகர்ந்து, நகரத்துக்குள் புகுந்து போனது. மரங்கள் அழிந்தாலும், குவிந்த கட்டிடங்களில் கூட, பேய்களின் குரல் இன்னும் காத்திருக்கிறது. இப்போதும் புளிய மரம் போல் சற்று வெறிச்சோடிக் கிடக்கும் இடம் எங்காவது மறைந்திருக்கும், ஆனால் நம் நினைவுகள் அதை தாங்கும் அளவுக்கு மட்டுமே காத்திருக்கின்றன. நகரத்தில் மிதக்கும் அந்த நிழல் எப்போதும் கண்ணுக்குள் விளையாடும்.

நான் நகரின் இருள்மிக்க ஓரத்தில் நடந்தபடி நினைவுகளின் இருள் எனக்கு தொட்டுத் தொட்டு விழுந்தது. அந்த நிழல் நகரத்தின் கட்டிடங்களுக்குள் பதுங்கிப் பார்த்தது போலத்தான் இருந்தது. ஒவ்வொரு இடத்திலும் வெறிச்சோடிக் கிடக்கும் இடங்களிலும் அந்த காலத்து கதைகள் மிதந்து கொண்டிருந்தன. நிழலின் விரல்கள் மெல்ல நகரத்தின் கண்ணாடித் தடுப்புகளைத் தாண்டிப் போனது.

நான் நின்று பார்த்த இடம் முந்தைய காலத்தின் மாயம் போலவே இருந்தது கொட்டாரச் சந்தி. ஒருகாலத்தில் அங்கு மகிழ்ச்சியுடன் கட்டைப் பந்து விளையாடிய இடம். இப்போது நகரத்தின் சத்தங்களில் மறைந்து போய் வெறும் புவியில் காணாமற்போன இடமாக மாறிவிட்டது. ஆனால் அந்த நிழல் அதில் இருந்த பேய்கள் மறைந்திருக்கவில்லை. அவை நகரத்தின் உட்சுவரையிலேயே ஒலிக்கின்றன.

"வம்மியடி!" எனக்குள் சத்தம் எழுந்தது. என் மனம் துள்ளியது. மூத்தம்மாவின் குரல் "அங்கே பேய்கள் இருக்கிறதா?" என்று கேட்கும் போது, என் காலடியில் சற்றே பூமி அதிர்ந்தது போலக் கற்பனை வந்தது. வம்மியடியின் அடியில் காத்திருக்கும் அந்தக் கதை இன்னும் என்னுடன் கூடவே பயணித்தது.

நான் அங்கே ஒரு நொடியில் காலத்தைத் தொட்டது போல உணர்ந்தேன். ஆனால் பச்சைப் பசுந்தான மரங்கள் ஏதுமில்லை. அழிவின் இருட்டில் மூடப்பட்டிருந்த அந்தப் பழைய மரங்களும் கதைகளும். இப்போது ஒரு தூரத்தில் காத்திருந்தது போல உணர்ந்தேன். மஸ்தாரர ஆலமரத்தின் நிழல், அந்த மரத்தின் மீது ஒரு பேய்ப் பார்வையாய் நகரத்துக்கு எங்கோ பரவிக் கொண்டிருந்தது.

இப்போது நிழல்களும் நான் மட்டும் தான். மூத்தம்மாவின் கதைகளும் நகரத்தில் எங்கும் மறைந்து கிடக்கின்றன.

நகரத்தின் இருள் ஒரு புதிய கதை எழுதிக் கொண்டு இருந்தது. கல்லறைகளும், கம்பியூட்டர் திரைகளும், குடியிருப்புகளும். அனைத்தும் ஒன்றாகக் கூட்டப்பட்டு, பழைய கதைகளின் உருவங்களைப் புதிதாக உருவாக்கியிருந்தது. அந்த நிழல்களைப் பார்த்த நான், பழைய மற்றும் புதிய இடங்களை ஒப்பிட்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாலை நகரத்தின் மேலிருந்து எதுவும் குறிக்காத ஒரு காட்சி. எனக்கு அழகு தெரிகிறது. அந்த பழைய மரங்கள், வெறிச்சோடிக் கிடக்கும் நகரத்தின் மையத்தில் எங்கோ மறைந்து கிடக்கின்றன. புளிய மரத்தின் நிழல். சமீபத்தில் கட்டிடங்களுக்கு இடையே மிதந்து செல்கிறது.



கவிஞர் டீன் கபூர்

எப்படி அந்த மரங்கள் எங்கும் இல்லாத நிலையில் அவற்றின் பிளவு, பொருள்கள் என் மனதை கடத்திக் கொண்டு செல்கின்றன? இப்போது யாரும் அந்தக் கதைகளைச் சொல்வதில்லை. பெரிய மரங்களின் நிழல்கள் பிழைவிழியாய் உருகி விட்டன.

அந்த நாளில் அன்று நிணைவுகளில் இருந்த புளிய மரம் இப்போது நிணைவுகளுக்குள் மட்டும் மிதந்துக்கொண்டு இருந்தது. நிழல்கள் நகரத்தின் சத்தங்களோடு ஒன்று சேர்ந்து நமக்கு மறைந்த கதைகளைத் திரும்பக் கொண்டு வந்து நமக்கு பழைய காலங்களைத் தேடிச் சென்றதைப் போல தோன்றியது.

முடிவில் அந்த நகரத்தின் இருள் பழைய கதைநிலைமைகள், மறைந்த நிழல்கள் அனைத்தும் ஒன்றாக நின்றன. என்னைப் போலவே, மற்றவர்கள் எவ்வளவு முயன்றாலும் இந்த நிழல்கள் நகரத்தின் மேல் ஒட்டிக்கொண்டு இருந்தன. புளிய மரங்கள், வம்மியடி, கொட்டார்ர சந்தி எனும் கதைகள், கடந்த காலம் ஒரு கரைந்த நினைவாகவே காட்சியளிக்கின்றன.

அந்த நாளில் நகரத்தில் முன்னணி வாழ்க்கையின் நட்பு அண்மையில் பழைய கதைகள் எப்படியோ மறைந்து போனவையாகவே இருந்தன. நானும் அந்தப் பழைய மரங்களின் அடியில் தந்த பழைய கதைகளைப் பறிகொடுக்க நினைத்தேன். அது எங்கும் மறைந்து காணாத அந்தக் கதைகளை திரும்பப் பெற முடியுமா என்பதில் ஒரு நம்பிக்கையுடன் இருந்தது.

மகிழ்ச்சி, பயங்கள், பழைய காலங்கள் அனைத்தும் இப்போது நமக்கு மறைவாகவே நிழல்களைப் பின் தொடர்கின்றன. மரங்கள், கதைகள், அந்தப் பழைய காலம் எல்லாம், நாம் வாழும் நிழல் வாழ்க்கையின் மறைந்த அடிப்படைகளாகவே வாழ்ந்து போகின்றன.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஆறாத நெஞ்சம்



**- எம்மெஸ்ஸெம் ஜமீல் -**

அன்று அவள் தனது மகளின் பராமரிப்புச் செலவினைப் பெற்றுக் கொள்வதற்காக அந்த நீதிமன்றத்திற்கு வந்திருந்தாள். கடந்த பல தவணைகளில் அவள் நீதிமன்றம் வந்திருந்தும் பணம் கட்டும் அவளின் முன்னாள் கணவன் நீதிமன்றம் வராமையால் ஏமாற்றத்துடனும் மனவலியுடனும் திரும்பிச் சென்றதை நினைந்தவாறு இன்று என்ன நடக்குமோ என்ற ஒருவகை சஞ்சலத்துடன் தன் வழக்கு அழைக்கப்படும் வரை மன்றில் அமர்ந்திருந்தாள். அவனால் செலுத்தப்படும் அந்தச் சிறு தொகை அவளின் மகளின் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லாவிட்டாலும் அதனைப் புறக்கணிக்கும் நிலையில் அவள் இல்லை. அவளது வறுமையும், அதற்கு மேல் அவன் நீதிமன்றம் வரும்போது அவனைக் காணும் சந்தர்ப்பமும் அவளைத் தவறாமல் நீதிமன்றம் வரச் செய்து விட்டன. அவள் இருந்த அந்தப் பகுதியில் அவளைப் போல் பல பெண்கள் உட்காந்திருந்தாலும் அவர்கள் எல்லோரும் ஒரே மன நிலையில் இருப்பார்கள் என்பதில் அவளுக்கு உடன்பாடு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் அவளது எண்ணமும் மனநிலையும் முற்றிலும் வேறானது.

அப்போது நீதிமன்ற சூழல் பரபரப்பாகவும் சற்று சத்தமாகவும் இருந்தது. பொதுமக்கள், பொலிஸார், சட்டத்தரணிகள் என எல்லோரும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள் எனக் கூறலாம். நீதவானின் இருக்கை காலியாக இருந்தது. அதன் வெளிப்பாடுதான் இந்த சத்தமும் அமைதியின்மையும் என்பதை அவளால் உணரக் கூடியதாக இருந்தது. திடீரென "நீதிமன்றம் அமைதி" என்ற உரத்த தொனியில் பொலிஸ்காரனின் சத்தம் வந்ததும் எல்லோரும் எழுந்து நிற்க நீதவான் அவரது இருக்கைக்கு வந்தமர்ந்தார்.

அன்றைய தினத்தில் அந் நீதிமன்றில் பெண்கள் அதிகமாக இருக்கைகளிலும் வராந்தாவிலும் நெருக்கிக் கொண்டு அவதியுடன் நின்றிருந்தார்கள். அன்றைய தினம் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், அவர்களது பிள்ளைகளுக்கான தாபரிப்பு, பராமரிப்புச் செலவுகள் அறவாக்கிக் கொடுக்கப்படும் தினம். கட்டப்படும் பணத்தொகைகள் ஒருவரின் சமகால வாழ்க்கைச் செலவின் ஐந்திலொரு பங்கையாவது சமாளிக்கப் போதாது. அதனைக்கூட அந்த ஆண் சிங்கங்கள் ஒழுங்காகக் கட்டுவதில்லை. சிலர் பணமில்லாமல் கட்டுவதில்லை. பலர் வேண்டுமென்று வன்மமாகக் கட்டுவதில்லை. சற்று நேரத்தில் அவளது வழக்கு அழைக்கப்பட்டபோது அவளின் கணவன் மன்றில் பிரசன்னமாகி அவனால் கட்டப்பட வேண்டிய பணத் தொகையைக் கட்டினான். நீண்ட நாட்களின் பின் அவள் அவனை நேரில் காண்கின்றாள். கண்ட அக் கணத்திலேயே அவள் கண்கள் தாமாக கண்ணீரைச் சொரிகின்றன. சற்று நேரம் மௌனித்துப் போகின்றாள். அவளை அவன் விட்டுப் பிரிந்து போவதற்கு அவள் தரப்பில் சட்டம் தேடும் மணமுறிவுக்கான காரணங்கள் எதுவுமில்லை என்பது அவள் தரப்பு வாதம். அது உண்மையும் கூட. அவனைக் காதலித்துத் திருமணம் புரிந்ததிலிருந்து அவனுக்கும் அவளுக்குமிடையில் எதுவித பிணக்கும் எழுந்திருக்கவில்லை. நேர்மையான அந்நியோன்ய அன்பு அவர்களிடையே ஆழமாயிருந்தது. அவன் அயல் கிராமத்துக்கு வேலைக்காகச் சென்று வந்தான். காலையில் சென்றால் மாலையில் வீடு திரும்பி விடுவான். மறுநாள் காலை வரை வீட்டில் அவளுடனும் பிள்ளையுடனும் சந்தோசமாகவே பொழுதுகள் கழிந்திருந்தன.

காலவோட்டத்தில் அவனது நாளாந்த நடவடிக்கைகளில் சில மாற்றங்கள். மத அனுஸ்டானங்களிலும் அவள் அறிந்திராத நடவடிக்கைகளை அவனில் கண்ணுற்றாள். அடிக்கடி ஏதேதோ உரைகள், பிரச்சாரங்கள் கையடக்கத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியூடாக வீட்டில் ஒலிக்கத் தொடங்கின. அவைகளால் அவளோ அவளது குடும்பமோ அப்போது பாதிக்கப்படவில்லை என்பதால் அதுபற்றி அவனிடம் எதனையும் அவள் விசாரிக்கவில்லை. பெரிதாக அலட்டிக் கொள்ளவுமில்லை. அவ்வப்போது சில இரவுகளில் அவன் வீடு வராமல் நின்றிருந்தான். அவளால் காரணம் கேட்கப்பட்ட போது வேலை அதிகம் என்பதால் இரவிலும் சில வேளை இவ்வாறு ஏற்படும் என அவன் கூற அதை அவ்வாறே அவள் நம்பியிருந்தாள். அவனை நம்புவதில் எப்போதும் அவள் உச்சத்திலேயே இருந்து வந்தாள். அதனால் பிரச்சினைகளும் சந்தேகங்களும் அவளைத் தொடவில்லை.

ஒரு நாள் திடீரென தான் மதம் மாறப்போவதாகவும் அவளையும் பிள்ளையையும் தன்னுடன் சேர்ந்து வருமாறும் அவன் அழைத்த போது அவள் அதிர்ந்து போனாள். அவனது வேண்டுகோள் சமரசத்துக்கு அப்பாலானதாக இருந்ததை அவனது குரலிலிருந்த அழுத்தம் அவளுக்கு உணர்த்தியது. அவள் தான் கொண்ட மதத்தில் மிகுந்த பற்றுடன் இருப்பதால் தனக்கு மதம் மாறவேண்டிய அவசியம் இல்லையெனக் கூறி தன்னை வற்புறுத்த வேண்டாம் என்றும் வேண்டிக் கொண்டாள். அது அவளது உரிமையுந்தானே.

அதன் பின்னர் ஓரிரு நாட்களில் அவன் அவளது வீட்டிற்கு வருவதை நிறுத்திக் கொண்டதுடன் அவளுடன் கதைப்பதையும் குறைத்துக் கொண்டான். தொலைபேசி உரையாடலும் தொலைதூரமாகி மௌனித்து விட்டது.

ஒரு நாள் திடீரென நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது அவளுக்கு. அதை வாசித்த போது அவள் நிலை குலைந்துதான் போனாள். அவள் தனது கணவனை வன்மமாகப் பிரிந்து வாழ்வதாகவும், சேர்ந்து வாழும் எண்ணமின்றி அவனது வேண்டுகோள்களைப் புறத்தொதுக்கி வாழ்ந்து வருவதாகவும் அதனால் அவனுக்கு விவாகரத்துப் பெறுவதற்குக் காரணம் உருவாகியுள்ளதாகவும் அதில் உரைக்கப்பட்டிருந்தது. அந்த அழுத்தமான வரிகளைத் தாங்கி வந்த அழைப்பாணை அவளது கண்ணீரால் கழுவப்பட்டுக் கசிந்து அவள் மனம்போல் உருக்குலைந்து விட்டது. அவனால் மணமுறிப்புக் காரணங்களாகக் கூறப்பட்டிருந்த எதனையும் அவள் செய்திருக்கவில்லை. அத்தனையும் சோடிக்கப்பட்டவைகள். அவை யாவும் அப்பட்டமான உண்மைக்குப் புறம்பான கூற்றுக்கள் என்று அவளுக்குத் தெரிவது போல் அவனுக்குந் தெரிந்திருந்தும் ஏன் அவ்வாறு அதில் கூறியிருந்தான் என்பதை அவள் புரிந்துகொண்டாள். அவன் வேறொன்றுக்கு மாறிவிட்டதால் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே கூற முடியாது என்பதால் சட்டத்திற்காகக் கூறப்பட்ட காரணங்கள் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். அதை வாசித்த அவள் இதயம் ரணமாகி வலித்துக் கொண்டேயிருந்தது.



எழுத்தாளர் எம்மெஸ்ஸெம் ஜமீல்

அழைப்பாணையில் குறித்துரைக் கப்பட்ட தினத்தில் நீதிமன்று சென்று அவன் முகம் பார்த்தாள். அழுதாள். அவளை அறியாமல் கண்ணீர் மட்டும் அருவியாய் பெருக்கெடுத்தது. ஆனால் அவன் முற்றிலும் மாறியிருந்தான். ஏதோ மந்திரிக்கப்பட்ட ஒன்று போல் உணர்வுகளுக்கு அப்பால் உள்ள ஒன்று போல் மரம் போல் நின்றிருந்தான். ஆனால் அவளது அழுகை ஒவ்வொரு தவணையிலும் தொடர்ந்திருந்தது. ஆனால் அவனது நிலைப்பாட்டில் மாற்றம் எதனையும் அவளால் காண முடிந்திருக்கவில்லை. ஆனால் அவன் மீது கொண்ட அன்பில் அவள் மாறவில்லை. இப்போதும் ஒரு கணவனுடன் வாழ்வதற்குத் தேவையான அனைத்தும் அவளிடம் இருப்பது மன்றுக்கும் மற்றவர்க்கும் தெரிந்திருந்தது. ஆனால் ஒரே கூரையின் கீழ் வாழ்வதற்கான இணக்கம் அவனது மாற்றத்தினால் சாத்தியமற்றுப் போய்விட்டதாகக் கூறப்பட்டு அவளது அன்பும் எதிர்பார்ப்பும் பெறுமதியற்றுப் போயிற்று அம்மன்றில். முடிவில் உத்தமமான உறவொன்று சட்டத்தால் வெட்டிப் பிரிக்கப்பட்டது.

நீதிமன்றின் சேவகன் அவளிடம் கட்டப்பட்ட பணத்தைப் பெற்றுக் கொண்டு கையொப்பம் வைக்கச் சொன்ன போதுதான் அவள் சுயத்துக்கு வந்தாள். பணத்தைப் பெற்றுக் கொண்டு நீதிமன்றின் வெளியே வந்த போது அவன் தனது புதிய துணையுடன் அவளைக் கடந்து செல்கின்றான். அவளோ அவனால் தரப்பட்ட தன் மகளென்ற துணையுடன் கலங்கி நிற்கின்றாள் அதே அழுகையுடன். யாரெல்லாம் நம்மோடு இருப்பார்கள் விலகுவார்கள் என்பதைக் காலம் முடிவு செய்வதில்லை. அவரவர்களின் நடத்தையும் வார்த்தையும்தான் முடிவு செய்கின்றது.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**

# அஸ்தமிக்கின்ற ஆசைகள்

- முஸத்தீக் ஜே முஹம்மத் -

மருதமுனை.



நெஞ்சு நோகுவதாகச் சொல்லி பக்கத்தில் கிடந்த கதிரையில் தொப்பென அமர்ந்த அப்பாவைக் கண்டபோது நிமலேசுக்கு கொஞ்சம் பயம் தொற்றிக் கொண்டது. சர்வானந்தா பெரியப்பாவின் வீட்டிலிருந்து வரும்போதே அப்பாவின் முகம் மிகவும் வாடிப்போய் சோர்வாய் இருந்ததை நிமலேஸ் அவதானித்துத்தான் இருந்தான். அப்பா நெஞ்சுப் பகுதியை ஒரு கையினால் பொத்திக்கொண்டு வலியால் முனகுவது தொடர்ந்தது. அவசர அவசரமாக நண்பர்களை அழைத்த நிமலேஸ், தனது மோட்டார் சைக்கிலில் அப்பாவை ஏற்றி, பின் இருக்கையில் நண்பனையும் அமரும்படி வைத்து மூவருமாக வைத்தியசாலைக்கு விரைந்தார்கள்.

வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அப்பாவை அனுமதிப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தங்கள் உடன் செய்தான். தாதி ஒருவர் உருட்டிக் கொண்டு வந்த கட்டில் வண்டிக்கு அப்பாவை மாற்றி விட்டு நோயாளர் பதிவு செய்யும் இடம் நோக்கி ஓடினான் நிமலேஸ். அப்பா பெயரைக் கேட்ட விபரம் பதிந்து அட்மிசன் போடும் பெண்ணிடம்,

"ஏ. முகுந்தன்... வலயக்கல்விப் பணிப்பாளர்" என சுதி விலகிய குரலில் சொன்னான் நிமலேஸ். இரண்டு தாதியர் அப்பாவை கிடத்திய கட்டிலை தள்ளிக்கொண்டு அவசர சிகிச்சைப் பிரிவுப் பகுதிக்கு விரைந்து கொண்டிருந்தார்கள். நிமலேஸ் நெருங்கிய உறவினர்களுக்கு தகவல் சொல்ல கைப்பேசியை அழுத்திக் கொண்டிருந்தான்.

அவசர சிக்கிச்சை அறைக்குள் இருந்த ஏ.சி.க் காற்று பட்டதும் முகுந்தனுக்கு சில்லென இருந்திருக்க வேண்டும். யாரோ தனக்கு செயற்கை சுவாசம் கொடுக்கும் கருவியை மூக்கின் மேல் பொருத்துவது நினைவில் நிழலாடுவது போல் தோன்றியது. கை விரல்களை யாரோ கழுவுவது போலும் விரல்களில் ஊசி ஏற்றுவதுபோலும் இருந்தது, முகுந்தனுக்கு. எண்ணற்ற நினைவுகள் வேகவேகமாய் அவரின் உள்ளுக்குள் ஓடிக் கொண்டே இருந்தன.

சோலையூர்! முகுந்தனின் அழகிய பூர்வீகக் கிராமம். மேற்கே வயல்வெளிகள் தென்னஞ் சோலைகளாலும், கிழக்கே கடலும் கடல்சார் நிலங்களாலும், வடக்கே சில குக்கிராமங்களாலும், தெற்கே பிராந்திய நகரத்தினையும் முகவெற்றிலையாகக் கொண்ட அழகிய கிராமம்.

முகுந்தன்,
ஊர் ஆலயத்தின் பிரதம தர்மகர்த்தாவும் அதிகமான நிலபுலன்களுக்கு சொந்தக்காரருமான ஆறுமுகம்பிள்ளையின் மூன்றாவது புதல்வன். இரண்டு மூத்த அக்காக்களும் இரண்டு இளைய தங்கைகளையும் உடன்பிறப்பாகக் கொண்ட ஏழு பேர்கள் சேர்ந்த பேர் சொல்லும் குடும்பமாக ஊரில் வசிப்பவர்கள். நகரத்துப் பெரிய பாடசாலை ஒன்றிலே முகுந்தன் கல்வி கற்று வந்தான்.

கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளிலும் முகுந்தன் பங்குபற்றி பாடசாலைக்கு வெளியிலும் பலராலும் அறியப்பட்ட ஒரு மாணவனாகவே இருந்தான். ஆனாலும் இயல்பிலேயே அவனது சுபாவம் அமைதியும் பக்குவமும் நிறைந்த ஒன்றாகவே இருந்தது. ஆனாலும் தோற்றத்தில் ஆஜானபாகுவாகவே தோன்றினான். பெரிதாக இவைகளை அவன் அலட்டிக் கொள்வதே இல்லை. அண்மையில் மாகாண மட்டத்தில் நடந்த நீளம் பாய்தல், ஓட்டப்பந்தயம் இரண்டிலும் முதலாமவனாக வந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை சேர்த்திருந்தான், முகுந்தன். மாணவத் தலைவன் எனும் அந்தஸ்த்தோடு உயர் தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான்.

பவித்ரா,
நேர்த்தியான அழகும் நேர்கொண்ட பார்வையும் கொண்ட கெட்டிக்கார மாணவி. நகரத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியரான சிவராஜா மாஸ்டரின் இரண்டாவது புதல்வி. ஓங்கி உயர்ந்த சிவராஜா மாஸ்டருக்கு இரு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் மகனும் உண்டு. மூத்தவள் விசேஷட தேவையுடையவள். பவித்ராவை ஒரு வைத்தியராக ஆக்கி விட வேண்டும் எனும் கனவில் நகரத்தில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்த்து விட்டிருந்தார். ஆதலால் அவளின் மேல் விசேஷட ஈடுபாடும் கண்காணிப்பும் ஒருங்கே வைத்திருந்தார் சிவராஜா மாஸ்டர்.

சோலையூரிலிருந்து நாளாந்தம் நகரத்துக்குச் செல்லும் பேருந்தினையே பெரும்பாலான மாணவர்கள் பாடசாலை செல்வதற்கும் பயன்படுத்தி வந்தனர். பவித்ரா பரத நாட்டியம் கற்பதற்காகவும் இடைக்கிடை பேருந்தில் நகரம் நோக்கிச் செல்வாள். க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் அவள் பாடசாலை பேச்சுப் போட்டியிலும் முதலிடம் பிடிப்பாள். அப்படி ஒரு விழாவில்தான் பவித்ராவின் பேச்சைக் கேட்டு முகுந்தன் அவள் பக்கம் ஈர்க்கப்பட்டிருந்தான். போக்குவரத்து சூழ்நிலைகள் காரணமாக வலிந்த மற்றும் எதிர்பாராத சந்திப்புக்கள் இருவருக்கும் கைகூடி வரவே நாளாவட்டத்தில் இருவருக்குள்ளும் காதலும் பூக்க ஆரம்பித்திருந்தது.

இருவருக்குமான காதல் அரும்புகாலப் பொழுதுகள் வேகவேகமாக நாட்களாகி மாதங்களாகி வருடங்களாகி ஓடி மறைந்தன.

அன்று ஏ.எல் பெறுபேறுகள் வெளியாகி இருந்தன. சோலையூரும் நகரமும் சந்தோசமும் துக்கமும் சேர்ந்த கலவையாக காட்சி தந்தது. முகுந்தனின் பெறுபேறினை தெரிந்து கொள்ள பவித்ரா தவியாய்த் தவித்தாள். முன்புபோல் அவர்களால் இப்போது போக்குவரத்தின் போது சந்திக்க முடியாமலே இருந்தது. ஒருவழியாக முகுந்தன் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகாமல் கல்விக் கல்லூரிக்கு தெரிவாகி இருப்பதையும் தெரிந்து கொண்டாள். பின்னர் சந்திக்க கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றில் முகுந்தனை மனதார பாராட்டினாள். அவளை நன்றாகப் படிக்கும்படி முகுந்தன் வேண்டிக் கொண்டான். ஒரு நாள் பவித்ராவின் பெறுபேறும் வந்தது. அவளும் அப்பா சிவராஜா மாஸ்டர் விரும்பியிருந்ததைப் போல் வைத்தியத் துறைக்குத் தெரிவாகி இருக்கவில்லை. அப்போது முகுந்தன் கல்விக் கால்லூரியில் உடற்கல்வி ஆசிரியப் பயிற்சியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருந்தான். கடிதங்கள் ஊடாக காதலையும் கல்வி அடைவுகளையும் இருவரும் பரிமாறிக் கொண்டனர்.

ஒரு நாள் தூரப் பிரதேச பாடசாலை ஒன்றிற்கு உடற்கல்வி ஆசிரியராக தனக்கு நியமனம் கிடைத்திருப்பதாக பவித்ராவிற்கு தெரிவித்தான் முகுந்தன். சில மாதங்களின் பின் தான் கல்வி கற்ற பாடசாலைக்கே தனக்கு ஆசிரிய நியமனம் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் தான் மிகவும் சந்தோசமாக இருப்பதாகவும் பவித்ரா முகுந்தனுக்கு தெரிவித்தாள். காலம் கடிதப் போக்குவரத்துடன் காற்றைப் போல் கடந்து கொண்டே போனது. ஒரு நாள் அந்தி நேரம் சோலையூரின் அயல் கிராமம் ஒன்றின் பாடசாலைக்கு பிரதி அதிபராகும் நியமனக் கடிதத்துடன் பவித்ராவைச் சந்திக்க பேரவாவுடன் சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருந்தான் முகுந்தன். சேதி கிடைத்தும் சந்திக்க வராமல் போன பவித்ராவை எண்ணி மனது கலங்கினான் முகுந்தன். தமது காதல் விவகாரம் பவியின் அப்பா சிவராஜா மாஸ்டருக்கு தெரிந்ததும் கண்டிப்புகளும் கட்டுப்பாடுகளும் பவித்ராவிற்கு அதிகரிக்கப்பட்டிருப்பதை பின்னர் தான் தெரிந்து கொண்டான் முகுந்தன். இப்போது முகுந்தனால் பாடசாலை நடவடிக்கைகளில் முன்புபோல் முனைப்புக் காட்ட முடியாமலே இருந்தது. இருவரும் இருதலைக் கொள்ளி எறும்பாகி ஊர்ந்தார்கள்.

“மகன் முகுந்தனின் காதல் விவகாரம் அப்பா ஆறுமுகம் பிள்ளைப் போடியாருக்கும் தெரிய வந்திருந்தது. உரிய வயதில் மகனுக்கு திருமணம் முடித்து விட வேண்டும் என்பதில் அவரும் மிக ஆவலாக இருந்தார். அதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவியின் அப்பாவிடம் இந்த விவகாரம் சம்பந்தமாக பேசி முடிவொன்றினை எடுக்கலாம் எனத் தீர்மானித்தார். மகனுக்காக எவ்வளவு பரிந்தும் விட்டுக் கொடுத்தும் பேசியும் சிவராஜா மாஸ்டர் மசியவில்லை. விடாப்பிடியாக மறுத்து விடவே மனமுடைந்து போனார் ஆறுமுகம்பிள்ளை. தன் மகனின் காதல் கல்யாணத்தில் இனி முடியாது என்பதை மகன் முகுந்தனுக்கு தெளிவு படுத்தினார். அதனால் இனிமேல் தந்தையின் முடிவுக்கு கட்டுப்படுவதாக முகுந்தன் வாக்குறுதி வழங்கினான். ஆனாலும் பவித்ராவிற்கு திருமணம் நடக்கும் வரைக்கும் தன்னை திருமணம் முடிக்கும்படி வற்புறுத்தக் கூடாது என அப்பாவைக் கேட்டுக் கொண்டான். அப்பாவின் அடிமனசில் தன் தங்கையின் மகள் அபிராமியை முகுந்தனுக்குக் கட்டி வைக்க வேண்டும் எனும் ஆசை ஆரம்பத்தில் இருந்தே இருந்து வருவதை முகுந்தன் அறியாமலும் இல்லை. எது எப்படி இருந்தாலும் பவித்ராவை அவனால் மறக்க முடியாமலேயே இருந்தது.

பின்பு ஒரு நாளில் சிவராஜா மாஸ்டரின் அக்காவின் மகன் டொக்டர் ரவிசங்கருக்கும் பவித்ராவிற்கும் நகரமண்டபத்தில் கோலாகலமாக திருமணம் நடைபெற்று முடிந்திருந்ததை தன் நண்பன் ஒருவனூடாக தெரிந்துகொண்ட முகுந்தன் உடைந்து போனான். நிச்சயமாக இது பவித்ராவின் சம்மதத்துடன் நடந்திருக்காது என திடமாக நம்பினான்.

அடுத்த வாரமே அப்பாவிடம் இருந்து உடனே ஊர் வரும்படி அழைப்பு வந்தது முகுந்தனுக்கு. அப்பா தனது திருமணத்தை இனி விரைவு படுத்துவார் எனத் தெரிந்து வேலைப்பழு இருப்பதாகச் சொல்லி ஊர் போவதில் தாமதப்படுத்தி வந்தான் முகுந்தன். ஆனால் அவை எதுவும் தன் அப்பாவின் அன்பிற்கு முன்னால் அதிகம் தாக்குப்பிடிக்கவில்லை. அடுத்த வாரமே முகுந்தன் ஊர் திரும்பினான்.

முகுந்தன் அபிராமி திருமணத்திற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தையும் அப்பாவும் குடும்பத்தினரும் நிறைவு செய்து வைத்திருந்தனர்.

அருந்ததி பார்த்த பின் அந்தி நாளொன்றில் கிராமிய மரபுகள் அரங்கேறி இருக்கத்தக்கதாக சுற்றம்சூழ நின்ற சுபவேளை ஒன்றில் கருப்பழகியும் தமிழ்பாட ஆசிரியையுமான அபிராமியின் கழுத்தில் தாலி கட்டினான் முகுந்தன்.

மாரியும் கோடையும் மாறி மாறி வந்து போயின. போரும் சமாதானமும் சகவாழ்வும் அவ்வப்போது தோன்றி மறைந்தன. ஊரின் வீதிகள் விசாலமாகின. இடம்பெயர்ந்து வெளி இடங்களிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்து வந்த அனேகமானோர் சொந்த ஊர் திரும்பி இருந்தனர். ஒருசில கள்ளுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறணைகள் மின்னொளி பிரகாசிக்க நவீன மதுக்கடைகளாய் உருமாற்றம் பெற்றிருந்தன. பாடசாலைகள், கோயில்கள் எல்லாம் புனருத்தானம் செய்யப்பட்டு மக்கள் நடமாட்டம் அதிகமாகி இருந்தது.

சோலையூர் பெண்கள் மகா வித்தியாலயத்திற்கு மூன்று பிள்ளைகளின் தாயான பவித்ரா பிரதி அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார். மூத்த இரண்டு பேரும் ஆண் மகன்கள். மூன்றாவது பெண் பிள்ளை. பவித்ராவின் கணவர் டாக்டர் ரவிசங்கர் சிறுபிள்ளை நோயியல் வைத்திய நிபுணராக தலைநகரத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். மாதமொரு முறை அல்லது தேவைக்கேற்றாற்போல் ஊர் வந்து போய்க் கொண்டிருந்தார். இப்படி பவித்ராவின் வாழ்வு குறைவில்லாத மகிழ்ச்சியுடன் போய்க் கொண்டிருந்தது. பயிற்றப்பட்ட தமிழ்பாட ஆசிரியையும் ஒழுக்காற்றுக்குழு மற்றும் கலை கலாச்சாரக்குழு உறுப்பினரும் ஆசிரிய பகுதித் தலைவருமான முகுந்தனின் மனைவி அபிராமியும் பவித்ரா பிரதி அதிபராக இருக்கும் அதே பாடசாலையில் நியமனம் பெற்றிருந்தார். அவர்கள் இருவருக்கிடையிலும் உத்தியோகபூர்வ நட்பு மிகவும் ஆழமாகவும் ஆக்கபூர்வமானதாகவும் பரஸ்பரம் வேரூன்றி இருந்தது.

இக்காலப் பகுதியில் கல்வி நிருவாக சேவைக்கு நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தேறி, மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு நியமனம் பெற்றிருந்தார் முகுந்தன். மூன்று ஆண் குழந்தைகள் அவருக்கு இருந்தனர். கடமை நிமித்தம் காரணமாக முகுந்தனுக்கு அதிக நாட்கள் ஊரில் நிற்கின்ற வாய்ப்புகள் இல்லாமலேயே காலங்கள் உருண்டோடிக் கொண்டிருந்தன. இருந்தாலும் அபிராமியுடன் மகிழ்ச்சிகளுக்கு குறைவில்லாத இல்லற வாழ்வும் குடும்பமுமாய் நகர்ந்து கொண்டே இருந்தது, அவரின் வாழ்க்கை.

ஓர் அடைமழை நாள். சோலையூருக்கும் ஏனைய ஊர்களுக்கும் ஆணி அடித்தாற்போல் அந்த அதிர்ச்சிச் செய்தி காற்றோடு கசிந்து கண்ணீரோடு பவித்ராவிடமும் வந்து சேர்ந்தது. கணவர் டாக்டர் ரவிசங்கர் தலைநகரில் இருந்து ஊர்திரும்பும் வழியில் வாகன விபத்தில் சிக்குண்டு அகால மரணமெய்தி இருந்தார். இந்த திடீர் இழப்பினை ஜீரணிக்க முடியாத பவித்ராவும் குடும்பத்தினரும் நிர்க்கதி நிலையினை உணர்ந்தனர். மரணச் சடங்குகள் அனைத்தும் முடிந்த நாளிலிருந்து அபிராமி அடிக்கடி பவித்ராவின் வீட்டிற்கு சென்று ஆறுதல் கொடுத்து வந்தார்.

சிலமாதங்களின் பின்னர் ஊரின் பாடசாலை அதிபர் ஓய்வு பெற்றுச் சென்றதனால் பாடசாலை அதிபர் பதவியினை ஏற்கின்ற நிர்ப்பந்தம் பவித்ராவிற்கு ஏற்பட்டது. அபிராமியின் ஒத்தாசையினையும் பிள்ளைகளின் நலனினையும் கருத்தில் கொண்டு பவித்ரா சோலையூர் மகா வித்தியாலயத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் நியமனத்தினைப் பொறுப்பேற்றார். இக்காலப் பகுதியில் மாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்து பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று சொந்தப் பிரதேசத்திற்கு இடமாற்றம் பெற்று கடமை ஏற்றிருந்தார், முகுந்தன்.

கடமைகளின் நிமித்தம் முகுந்தனும் பவித்ராவும் சந்திக்க வேண்டியும் உரையாட வேண்டியதுமான தருணங்களை கல்வி நிருவாக சேவை ஏற்படுத்தி இருந்தது. எப்போது வலயக் கல்வி அலுவலகம் போனாலும் அபிராமியையும் கூடவே அழைத்துப் போவதை பவித்ரா வழக்கமாக்கிக் கொண்டார். அவ்வாறு செல்லும் போதெல்லாம் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் அறைக்குள் அபிராமி செல்லாமல் வெளியிலேயே இருந்து விடுவாள்.

இவ்வாறு கல்விச் சூழல் சுழலும் தொழில்முறை நடவடிக்கைகளுடன் அவரவர் வாழ்வும் பொழுதுகளும் வேகமாக ஓடி மறைந்து கொண்டே இருந்தன.

பவித்ராவின் மூத்த மகன் ரூபன் வைத்தியத் துறையிலும், இரண்டாவது மகன் துவாரகன் வணிகத் துறையிலும், மகள் தனுஜா உயர்தரத்திலும் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர்.

முகுந்தனின் மூத்தமகன் நகுலேஸ் கணக்காளராகி இருந்தான். இரண்டாவது மகன் அகிலேஸ் பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகி இருந்தான். மூன்றாவது மகன் நிமலேஸ் உயர்தரத்தில் படித்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு இரண்டு குடும்பத்தினரும் கல்விசார் செயற்பாடுகளிலே அதிக கவனம் செலுத்துவதும் அவை பற்றியெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பவித்ராவும் அபிரா்மியும் ஆவலாய் அளவளாவிக் கொள்வதும் வழக்கமான ஒன்றாகவே இருந்து வந்தது.

ஒரு நாள் பாடசாலையில் இருந்தபோது திடீரென மயக்கமாகி விழுந்த அபிராமியை அவசரமாக வைத்தியசாலை சேர்த்துவிட்டு தகவலை உடனே முகுந்தனுக்கு அறிவித்தாள் பவித்ரா. தனது அலுவலக வேலைகளை இடைநிறுத்தி விட்டு வைத்தியசாலைக்கு விரைந்த முகுந்தனுக்கு வைத்தியர்கள் கொடுத்த ரிப்போர்ட் பேரதிர்ச்சியினைக் கொடுத்தது. அபிராமிக்கு வந்திருக்கும் வியாதி இரத்தப் புற்று நோய் என்பதை எப்படி அபிராமியிடம் தெரிவிப்பது என தயங்கினான், முகுந்தன். எதுவுமே சொல்லாமல் அபிராமியை தலைநகரில் இருக்கும் வைத்தியசாலை ஒன்றில் அட்மிட் பண்ணிவிட்டு விடையத்தையும் சொன்னான். அபிராமி பீறிட்டு அழுதாள். அவளைப் பார்க்க பாவமாய் இருந்தது, முகுந்தனுக்கு. பிள்ளைகளுக்கு விபரம் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாமென முகுந்தனைக் கெஞ்சிக் கேட்டாள், அபிராமி. வேறுவழி இல்லாமல் முகுந்தனும் சம்மதித்து அபிராமியை தேற்றினான்.

தலைநகரும் ஊரும் வேலையும் என இரண்டு மாதங்கள் அலைந்து திரிந்த முகுந்தன் பெரிதும் வாடிப்போய் இருந்தான். அவ்வப்போது அபிராமியின் உடல்நிலை பற்றி பவித்ராவும் விசாரித்துக் கொண்டே இருந்தாள். ஒரு நாள் வைத்தியசாலையில் அபிராமியுடன் முகுந்தன் பேசிக் கொண்டிருக்கும் போது அபிராமி மூச்சுத் திணறினாள். அவசரமாக வைத்தியர்களை சத்தமாக அழைத்தான், முகுந்தன். வைத்தியர்கள் வருவதற்கிடையில் அபிராமி மூர்ச்சையாகி விட்டாள். செயற்கை சுவாசம் கொடுக்க முயற்சித்த வைத்தியர் ஈற்றில் முகுந்தனைப் பார்த்து "சீ பாஸ்ட் எவே." எனச் சொல்லி முகுந்தனின் தோள் தொட்டு விட்டு வெளியேறிப் போனார். முகுந்தன் அபிராமியை வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். அனைவருக்கும் மரணச் சேதியை எத்தி வைத்தான், முகுந்தன். சேதி கேட்டதும் பவித்ராவும் பரிதவித்துப் போனாள். பாடசாலை நிருவாகச் செயற்பாடுகளிலும் ஏனைய தனிப்பட்ட விடையங்களிலும் உற்ற துணையாக இருந்த அபிராமியை நினைத்து தேம்பி அழுதாள்.

முன்பனிக்காலம், கார்காலம், இலையுதிர்காலமென மாறிமாறி வருடங்கள் விடைபெற்றன. முகுந்தனின் மூத்த மகன் நகுலேஸ் தான் கடமைபார்த்த அதே அலுவலகத்தில் நிதியுதவியாளராக இருந்த ராஜினியை மணம் முடித்துக் கொண்டான். இரண்டாவது மகன் அகிலேஸ் மேற்படிப்பிற்காக அவுஸ்திரேலியாவிற்கு குடி பெயர்ந்திருந்தான். மூன்றாவது மகன் நிமலேஸ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்று கொண்டிருந்தான்.

பவித்ராவின் மூத்த மகன் டொக்டர் ரூபன் மலையகத்தைச் சேர்ந்த தனது நண்பனின் தங்கையை கரம்பிடித்திருந்தான். வங்கி முகாமையாளரான இரண்டாவது மகன் துவாரகனுக்கு பெண் பார்க்கும் படலமும் சடங்குகளும் அரங்கேறிக் கொண்டிருந்தன. மகள் துவாரகா கல்விக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தாள்.

கல்வி நிருவாக சேவையில் இரண்டாம் நிலையிலிருந்த முகுந்தன் முதலாம் நிலைக்கு பதவி உயர்வு பெற்று வலயக்கல்விப் பணிப்பாளருக்கான வெற்றிடத்திற்காக காத்திருந்தார். தற்போது பணிப்பாளராக இருக்கும் திரு விவேகானந்தன் இன்னும் ஓரிரு மாதங்களில் ஓய்வில் செல்லவிருப்பதால் அந்த இடம் பெரும்பாலும் முகுந்தனுக்கே கிடைக்க வாய்ப்பிருப்பதாக அனைவரும் பேசிக் கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எதிர்பார்த்தபடி அதிபர் தரம் ஒன்றிற்கான நேர்முகப் பரீட்சைக்காய் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் அழைக்கப்பட்டிருந்தாள், பவித்ரா. பின்னர் நகரத்தில் தான் கல்வி கற்ற பிரபல பெண்கள் பாடசாலைக்கு தரம் ஒன்று அதிபருக்கான நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்றதும் பெரிதும் பூரித்துப் போனாள்.

எதிர்பார்த்தபடியே வலயக் கல்விப் பணிப்பாளராக (ZDE) முகுந்தனுக்கும் நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்றிருந்தது. சோலையூர் கிராமமே வாழ்த்துச் சொல்லி ஆசிர்வதிக்க குறித்த தேதியில் முகுந்தன் வலயக்கல்விப் பணிப்பாளர் பதவியினை பொறுப்பேற்றுக் கொண்டார். வாழ்வும் அவரவர்க்கு காலமும் என்னவெல்லாம் விதித்து வைத்திருந்ததோ அத்தனையும் அரங்கேறிக் கொண்டிருந்தன. வயதும் அனுபவ முதிர்ச்சியும் தனிநபர் முயற்சிகளும் கல்விசார் அடைவுகளும் என இவைகளுக்காய் கட்டியம் கூறிக்கொண்டிருந்தன. சில முடிச்சுக்களை அவிழ்த்து விடுவதும், புதியதாய் பல முடிச்சுக்களை முடிந்து விடுவதும் காலத்திற்கு எப்போதுமே கைவந்த கலையாகத்தான் இருந்து வருகின்றது.

ஒரு பிரபல பெண்கள் பாடசாலையின் அதிபருக்கும் அப்பகுதியின் கல்விப் பணிப்பாளருக்கும் பேசிக்கொள்ள பரிமாறிக் கொள்ள நிறையவே அலுவல்கள் இருந்தன. அந்தவகையில் முகுந்தனுக்கும் பவித்ராவிற்குமான தொடர்பாடலும் உறவும் வயதுக்கேற்ற அன்னியொன்னியத்துடன் ஆரம்பமாகி போய்க் கொண்டிருந்தது.

இந்த நிலையில் தனது மகளான ஆசிரியை தனுஜாவிற்கு அவுஸ்திரேலியாவில் பொறியியலாளராக இருக்கும் முகுந்தனின் இரண்டாவது மகனான அகிலேஸை மணம் முடித்து வைக்க வேண்டும் என பவித்ரா பெரிதும் விரும்பினாள். தனது இந்த விருப்பத்தை எப்படி யார் மூலமாக முகுந்தனை அணுகி அதற்கான சாத்தியப்பாடுகளை அறிவது என ஒவ்வொரு நாளும் யோசித்தாள். இறுதியில் எவரும் தேவையில்லை தானே நேரடியாக இந்த விடையத்தை முகுந்தனுக்கு தெரியப்படுத்தி அவரின் விருப்பத்தை அறிந்து கொள்வதே சமயோசிதம் என உறுதியாக நம்பினாள். சரிவந்தால் பார்ப்போம் இல்லாவிட்டால் இருவருடனுமே இந்த விடையத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவது எனத் தீர்மானித்து, ஒரு நாள் முகுந்தனின் பணிமனைக்கு சென்ற நேரம் இருவரும் மட்டுமே ஆலோசனையில் இருந்த ஒரு சமையம் பார்த்து முகுந்தனிடம் தன்னுடைய விருப்பத்தை வெளிப்படையாக வெளிப்படுத்தினாள், பவித்ரா. இதனை சற்றும் எதிர்பார்த்திராத முகுந்தன் அப்படியே தன் இருக்கையில் பின்னோக்கி சாய்ந்து வலக்கையால் பல தடவைகள் தன் தலை தடவினார். அலுவலகம் கொஞ்ச நேரம் நிசப்தமாய் இருந்தது. பதட்டமாய் இருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவித்ராவின் கண்கள் முகுந்தனையே பார்த்துக் கொண்டிருந்தன. சிறிது நேரத்தின் பின் மெல்லிய புன்னகை யினை படரவிட்டபடி முகுந்தன் நிசப்தம் கலைத்தார்.



நாம் தான் வாழ்வில் இணைய முடியாமல் போய்விட்டது. நம் பிள்ளைகளாவது இணைந்து வாழட்டுமே. இறைவனின் நாட்ட மிருந்தால் இது நிச்சயமாக நடைபெறும். நான் எனது மகனுடனும் குடும்பத்தவர்களுடனும் ஆலோசித்து விட்டு நல்லதோர் முடிவினை சொல்வதாக பவித்ரா விடம் கூறினார். பவித்ராவும் புன்னகைத்தபடி கைக்குட்டையால் தன் முகத்தினை ஒரு தடவை துடைத்து புன்னகை மாறாமல் அலுவலகத்திலிருந்து விடைபெற்று வெளியேறினாள். ஆயிரம் பிரார்த்தனைகள் பவித்ராவின் ஆழ்மனசினுள் புதிதாய் கேட்க ஆரம்பித்திருந்தன.

அன்றிரவே அவுஸ்திரேலியாவில் இருக்கும் மகனுடன் தொடர்புகொண்டு விடையத்தைச் சொல்லி தனது விருப்பத்தினையும் அகிலேசுடன் பகிர்ந்து கொண்டார் முகுந்தன். துவாரகாவைப் பற்றி ஏற்கனவே அகிலேஸ் அறிந்திருந்தான். ஆர்ப்பரிப்பில்லாத அழகானவள் என்பதனால் அகிலேசும் தனது சம்மதத்தினை தெரிவித்ததோடு பெரியப்பா, பெரியம்மா, அண்ணா மற்றும் குடும்பத்திலுள்ளவர்களிடமும் விடையத்தை தெரியப்படுத்துமாறு அப்பாவைக் கேட்டுக் கொண்டான், அகிலேஸ்.

அடுத்து வந்த விடுமுறை நாளில் தனது சகலனான ஓய்வு நிலை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரான சர்வானந்தாவைக் காண அவரின் வீடு நோக்கிச் சென்றார். அவரிடமும் அவரின் மனைவியிடமும் விடையத்தை தெரிவித்து விட்டே பவித்ராவிற்கு சந்தோசமாய் சொல்ல வேண்டும் என நேற்றிரவே தீர்மானித்திருந்தார், முகுந்தன்.

முகுந்தனின் பேச்சை கொஞ்சம் ஆச்சர்யத்துடனே கேட்டுக் கொண்டிருந்த சர்வானந்தா தன் மனைவியை பார்த்து புன்னகைத்தபடி... தம் இருவரினரதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனரும் அகிலேசின் மாமாவுமான கிராம அலுவலர் சுதனின் மூத்தமகளுக்கு அகிலேசை திருமணம் முடித்து வைக்க அவர் மிகவும் விரும்புவதாயும் அதனை முகுந்தனுக்கு தெரிவித்து சம்மதம் பெறும் பொறுப்பினை ஏற்கனவே என்னிடம் ஒப்படைத்து இருப்பதால் சுதனிடமும் இதனை தெரியப்படுத்தி பேசிவிட்டு எல்லோருமாகச் சேர்ந்து நல்லதோர் முடிவினை எடுப்போம் என சர்வானந்தா சொல்லி முடிக்க அவரது மனைவியும் அதற்கு உடனே ஆமாசாமி போட்டுப் பேசினார். முகுந்தனின் உற்சாகம் அந்த இடத்திலேயே இழந்து போக முகம் வாடிக் கொண்டு போனது.



முஸத்தீக் ஜே முஹம்மத்

இதனைக் கவனித்த சர்வானந்தா முகுந்தனை அப்போதைக்கு கவலைப்பட வேண்டாம், சுதனிடம் நாங்கள் தன்மையாக பேசிவிட்டு உங்களுக்கு சொல்கிறோம் என்றார்.

சகலனின் வீட்டில் பரிமாறப்பட்ட சிற்றுண்டிகளையும் தேனீரையும் மகிழ்ச்சி இல்லாமலே அருந்தி விட்டு அங்கிருந்து விடைபெற்றார், முகுந்தன். வீடு நோக்கிய பயணத்தின் பாதை நெடுகிலும் பவித்ராவின் முகமும் அவளின் வேண்டுகோளுமே அவருக்கு வந்து வந்து போயின. முகுந்தனின் ஆழ்மனசு இதனை இனி நடாத்த விடமாட்டார்களோ என அச்சுறுத்திக் கொண்டே இருந்தது. பவித்ராவிற்கு நாளை என்ன சொல்வது என ஆயிரத்தெட்டு நினைவுகள் சீரழிக்க வீடு வந்தடைந்தார், முகுந்தன்.

அன்றிரவு சாப்பிடாமலே தூங்கச் சென்ற முகுந்தனுக்கு தூக்கம் வராமல் நெஞ்சு வலியே வந்து விட்டது.

அவசர சிகிச்சைப் பிரிவின் அறையின் குளிர்ச்சியிலும் தனக்கு வேர்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தார், முகுந்தன். சோலையூர் கிராமமும் அலுவலகங்களும் பவித்ராவும் அபிராமியும் அவரின் நினைவுகளில் இருந்து மெல்லமாய் நழுவிக்கொண்டு போய் ஒரு புள்ளியில் வெறுமையாகினார்கள். இரண்டுமுறை முகுந்தனின் நெஞ்சாங்கூடு மேலெழும்பி மேலெழும்பி பின் கட்டிலில் விழுந்து அடங்கியது. அசைவற்றுப் போய்க் கிடந்தார் முகுந்தன். அந்த அறை முழுக்க அவரின் உடலில் பொருத்தி இருந்த அந்த இயந்திரத்தின் பீப் (beep) ஒலி மட்டும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந்தது!

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழி பெயர்ப்புக் கவிதை

### நாராயன் சூர்வே




உன் சட்டை ஒன்று என் வசம்
நீயும் நானும் தொழிலின்றி இருந்த காலம்
ஒரே சட்டை இருவருக்குமாய்

பழைய விளக்கு இன்னும் என்னிடத்தில்
அதன் ஒளிர்வில் வார்த்தைகள்
வெள்ளமாய் பிரவாகிக்க
எமது உள்ளம் உவகையின் நட்பில்
அவ்விளக்கின் ஒளியில்
உன் கையெழுத்தில்
குறிப்புகள் - பிரதிகள்
கதையாய் கவிதையாய்
எனக்கு சமர்ப்பணமானவையும்

இந்திய கரைகளுக்கு அப்பால்
நீ எனக்கு எழுதிய மடல்
எப்படியோ ஐரோப்பாவுக்குள் நுழைவு
மட்ரிட் செல்ல உத்தேசம்
இதனிடையே இந்தியாவும் சந்திக்கும்

அப்படி இருந்தும் நான் உணர்கிறேன்
நான் இருக்கும் இடத்தை உணர்கிறேன்
நம்மிடம் ஒரு வித்தியாசம்
சந்திப்பு இல்லை
வாழ்க்கை என்னும் விளக்கின் கீழ்
இன்னும் ஓரிரு கவிதைகள்.
மாத்திரமே மிச்சம்.

●

சிங்கள மொழியில்
**பராக்கிரம**
**கொடித்துவக்கு.**

தமிழில்
**கலாபூஷணம்**
**மாவனல்லை**
**எம் எம். மன்சூர்.**

(நாராயன் சூர்வே -
மராட்டிய மொழியில்
எழுதிய
இந்திய பிரபல கவிஞர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை



# சிறகிழந்த பறவை

- கிண்ணியா சபீனா -

"உம்மா எழும்புங்கம்மா! இப்ப எப்படிம்மா இருக்கு" என்றார் அலிமா டீச்சரின் மகள். "எழும்பி இந்த மருந்தக் குடியுங்களேன்! இங்கே ஒங்களுக்குக் கஞ்சியும் வெச்சிருக்கேன்" என்றாள் நசீமா.

"சரி மகள், இண்டைக்கு நீங்க வேலைக்கு போகலையா?" -இது தாயின் குரல். "இன்னும் வேலைக்காரியக் காணலையேம்மா!"

"புள்ளையல ஸ்கூலுக்கு அனுப்பிட்டேன்!" என்றாள் நசீமா.

"சரிமா நீங்க வேலைக்கு வெளிக்கிடுங்க! வேலைக்காரி வருவாதானே!

நான் சமாளிச்சுக் கொள்ளுவேன் மகள்" என்று தாயார் சொன்னதும், நசீமா அவசரமாக ஆயத்தமாகிப் பணிபுரியும் இடத்துக்குக் காற்றாய்ப் பறந்தாள்.

குச்சவெளி எனும் கிராமத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்து, 90களில் புலம்பெயர்ந்து வந்தவர்கள் தான் அலிமா குடும்பத்தினர். அவர்கள் கிண்ணியாவில் குடியேறி மூன்று தசாப்தங்கள் கடந்திருந்தன. அங்கு மூன்று பிள்ளைகளுடன் வந்து குடியமர்ந்தனர்.

அலிமாவின் கணவர் அமீன் மாஸ்டர் ஒரு சிறந்த கணக்கு வாத்தியார். அவர் கிண்ணியாவில் பிரபல பாடசாலையில் சேர்ந்து கடமையாற்றினார். கணித பாடம் டியூஷன் கொடுப்பது மூலமும் அவருக்கு நல்ல வருமானம் கிடைத்தது. கொஞ்சக் காலத்தின் பின்னர், அலிமாவும் ஆசிரியர் பணியில் இணைந்து கொண்டார். அவரும் அறப்பணியாய் ஆசிரியப் பணியை ஆனந்தமாகச் செய்து வந்தார். அமீன் சேர் குச்சவெளியில் இருந்து தனது சொந்தங்களிற் பலரையும் அழைத்து வந்து கல்வி கற்றிட வழிகாட்டி, ஆர்வமூட்டினார். அவர்களின் வழிகாட்டலில் கல்வியி னாலே வென்றவர்கள் இன்று சிறப்பாக வாழ்கின்றனர்.

அலிமா டீச்சரின் இரண்டு மகன்மார்களும் பொறியியலாளர்க ளாகக் கடமைபுரிகின்றனர்! மகள் நசீமாவும் வைத்தியசாலையில் மிகவும் பொறுப்பான பதவியொன்றில் பணியாற்றுகின்றார். குடிவந்த ஊரில் உள்ள மாணவர்களையும் உருவாக்கி விட, ஓடி ஓடி உழைத்த அமீன் வாத்தியாரும் அலிமா டீச்சரும் அகவை அறுபதிலே ஓய்வு பெற்றனர்.

அவர்கள் தங்களின் பெற்றோ ரைப் பேணியும், தான் வாழும் ஊரான கிண்ணியாவில் உள்ளவர்களோடு சமரசமாகவும் வாழ்ந்தனர்.

'குறையொன்றும் எமக்கில்லை' என்றெண்ணினர். சொந்த ஊரிலே கல்யாண வீடு, மற்றும் நோயுற் றவர்களின் வீடு, வசதியற்ற மாணவர்களின் வீடு எனத் தேடித் தேடி பண உதவிகள் செய்தனர்.

சொந்தங்களுடன் ஒற்று மையாக வாழ்வதில் அவர்களை யாரும் மிஞ்ச முடியாது. இன்று எல்லோரையும் தாக்குகின்ற நோய் களான தொற்றா நோய்கள் அறுபது தாண்டிய அவர்களையும் தாக்கின.

"அலிமா எனக்குக் காய்ச்சல் போல இருக்குது. பெனடோல் இருந்தா தாங்களேன்!" என்றார் அமீன் சேர்.

பெனடோல் குடித்ததும் அவர், சிறிது நேரத்தில் நித்திரையாகி விட்டார். தொடர்ந்து காய்ச்சலோடு சிறுநீர் கழிக்கும் போதும் பிரச்சினைகள் உண்டாயின. கணவ னின் சுகவீனம் கண்ட, அலிமா அயர்ந்து போனார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரோ என் புருஷனக் கண்வச்சி போட்டாங்க!" என்று தான் அவர் சொல்லுவார். மௌலவி ஆசிரியரான அவர் கணவனுக்கு ஓதிப் பார்த்து ஊதிவிடுவார்! கைவைத்தியமும் செய்வார்! அவரை அன்பு மழையிலே நனைத்து விடுவார்.

வருத்தம் அவருக்குக் குறைய வில்லை. மகனின் ஆலோசனைப் படி அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு மருந்தெடுத்து வந்தார்கள்.

"இந்தாங்க! மருந்தக் குடியுங்க! நேரத்துக்குக் குடிச்சாத் தான் கெதியா வருத்தம் சுகமாகும்" என்று சொல்லி வேளைக்கு மருந்து கொடுப்பார் அலிமா டீச்சர்.

நாட்கள் நகர்ந்தன. பிள்ளைகளும் தகப்பனின் நோய் நிலைமையை அடிக்கடி விசாரிக்க வந்து போவார்கள். அவருக்கு நோய் குறையவில்லை. காலிலும் புண் வந்துவிட்டது.

அவரின் ஆரோக்கியம் சிறிது சிறிதாகக் குறைவதைக் கண்ட மகன்மார், கொழும்பிலுள்ள வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை அளிக்கக் கொண்டு சென்றனர். அலிமா டீச்சரும் அங்கு நின்று கணவனை மிகவும் கவனமாகக் கவனித்தார். வாத்தியாருக்கு, அந்த நேரம், மனைவி மக்களின் அன்பினால் நோயின் வேதனைகூட விளங்கவில்லை.

"அலிமா என்னால ஒங்களுக்குக் கஷ்டம் தான் என்ன!" என்பார்.

"இல்லையே! இது கஷ்டமா?"

"இது என்ட கடமை தானே! நீங்க சுகமாக வேணும். அது போதுமெனக்கு" என்பார்.

ஓரளவு சுகம் கண்டதும் அவர்கள் வீடு வந்தார்கள்.

மீண்டும் பழையபடி சிரித்துச் சிறகடித்தன அந்தச் சிங்காரப் பறவைகள். மனைவி அலிமாவை அளவு கடந்து நேசித்தார், அமீன் வாத்தியார்.

"அலிமா! அலிமா! நாங்க உங்க தம்பி ஊட்டுக்குக் குச்சவெளிக்குப் போயிட்டு வருவோமே!"என்றதும்,

"இல்லங்க ஒங்களுக்குக் கஷ்டம்! பொறவு பாப்போம்!" என்றார் அலிமா.

"எனக்குக் கஷ்டமில்ல அலிமா! நான் நல்லாயிருக்கிறேன் தானே! காலைல வெயில் ஏற மொதல்ல போவோம்" என்றார் அமீன் வாத்தியார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே உறவுகளைத் தேடிப் பறந்து திரிந்தன அந்த அன்றில் பறவைகள்.

ஒரு நாள் திடீரென நள்ளிரவில் அமீன் வாத்தியார் முனகிக் கொண்டிருந்தார்.

மூச்செடுக்கக் கஷ்டப்பட்டார். அந்தச் சத்தம் கேட்டு விழித்தெழுந்த அலிமா, "ஏங்க என்னங்க செய்யுது? என்ட அல்லாஹ்வே! ஒடம்பு அனலாய்க் கொதிக்குதே!" எனப் பதறி, "வாங்க நம்ம ஆஸ்பத்திரிக்குப் போவோம்" என்று கூறினார். செய்வதறியாமல் தடுமாறினார்.

மகனுக்குக் கோல் எடுத்தார். அந்த நள்ளிரவிலே மகன் தாய்வீடு வந்து சேர்ந்தார். தந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்.

அலீமாவின் அழுதவிழிகள் வீங்கின. அமீன் வாத்தியாருக்குச் சிறுநீரிலும் சுவாசப் பையிலும் கிருமித் தொற்றாம். அவர் திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

அங்கு சென்ற இரண்டு நாட்களில் சிகிச்சைப் பலனின்றி இறையழைப்பை ஏற்றுக் கொண்டார், அமீன் வாத்தியார். இணை பிரியாமல் திரிந்த பறவைகளில்



ஒன்று நிரந்தரமாய்ப் பிரிந்து பறந்து போனது. அதன் இணைப்பறவை சிறகிழந்து வாடியது.

தீராத் துன்பத்தில் ஆழப் புதைந்த அந்தத் தனிப்பறவையான அலிமா டீச்சர், இன்று தன் அன்பு மகளுடன் வாழ்ந்தாலும் கணவனை எண்ணியெண்ணி ஏங்குவார். என்னென்ன செல்வங்கள் கொட்டிக் கிடந்தாலும் ஒன்றுமே இல்லாதது போலவே இருக்கும் அவருக்கு. அழுதழுது கணவரின் மறுமை வாழ்வு சிறக்க "துஆ" செய்வார்.

"எப்பவுமே என்னைச் சந்தோசமா வெச்சிப் பாத்தவர் அவர். என்னைத் தனியாக விட்டுட்டுப் பறந்துட்டாரே!" என்று கூறிக் கண்ணீர் விடுவார்.

ஒருநாள் தடுக்கி விழுந்து, காலில் அடிபட்டு ஏற்பட்ட புண் காரணமாக இன்று படுக்கையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றார். அவருக்குப் புண்ணின் வேதனையைவிட கண்ணான கணவனை இழந்ததால் ஏற்பட்ட மனக்காயமே வலியைக் கொடுத்தது.

பாடித் திரிந்த பறவைகளி லொன்று இன்று கட்டிலிலே வாடிக் கிடக்கின்றது.

"அம்மா! அம்மா! இண்டைக்கு வேலைக்கு வரச் சொணங்கிப் போச்சும்மா. என் வருத்தத்துக்கு நான் போடுற குளிசையெல்லாம் முடிஞ்சு போச்சும்மா. ஆஸ்பத் திரிக்குப் போய் மருந்து எடுத்துக் கிட்டுத்தான் இப்ப வந்தேன். மன்னிச்சுக் கொள்ளுங்கம்மா!" என்று சொல்லிக் கொண்டு வந்த வேலைக்காரியின் சத்தத்தில் சிந்தனை கலைந்த அலிமா டீச்சர், "சரி சரி! பரவாயில்ல வாங்கம்மா." என்றவாறு வேலைக்காரியின் உதவியுடன் மெல்ல எழுந்தார்.

காலச்சக்கரம் சுழன்றது. அவர் பூரண சுகம் பெற்றார். வாழ்க்கையை வாளாவிருந்து கழிப்பதைவிட பலரும் பிரயோசனம் பெறும் வகையில் சிறந்த செயல்களிற் பொழுதைக் கழிக்கலாம் என உறுதி கொண்டார். அந்தச் சூழலில் உள்ள செல்லச் சிட்டுகளுக்கு இறைமறையை மனனம் செய்து கொடுக்கத் தொடங்கினார். இறை தியானத்தில் ஈடுபட்டார். சிறு வயதில் இருந்தே சிறப்பான வாசிப்புப் பழக்கம் கொண்ட



கலாபூஷணம்
கிண்ணியா சபீனா

அலிமா டீச்சர் தன்னம்பிக்கை கொண்ட கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் சஞ்சிகைகளுக்கு எழுதத் தொடங்கினார். இலக்கிய உலகில் அவரது ஆக்கங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றன.

"வெளிக்கிட்டாச்சாம்மா"

"மூணு மணிக்குத் தான் விழா தொடங்குது"

"நம்ம சுணங்காமப் போறது நல்லந் தானேம்மா" என்றார் டீச்சரின் மகள் நசீமா. நூல் வெளியீட்டு விழா ஒன்றுக்கு அலிமா டீச்சர் அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார்! அங்கு செல்வதற்கு அவர்கள் ஆயத்தமானார்கள். அலிமா டீச்சர் இலக்கிய வானில் இன்று சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கிறார். ●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்கரடி



பனிக்கரடி (துருவக் கரடி) (polar bear) நில உருண்டையின் கடும் உறைபனி சூழ்ந்த ஆர்க்டிக் பகுதியில் காணப்படும் வெண்ணிறக் கரடி இனமாகும். ஆர்ட்டிக்கு மாக்கடல் என்று இவ் உறைபனிப் பகுதியைக் கூறுவதால், இக்கரடியை வெண் கடற்கரடி என்றும் கூறுவதுண்டு. இது இறைச்சி உண்ணும் ஊனுண்ணிப் பாலூட்டி. இது நீரிலும் நிலத்திலும் வேட்டையாடவல்லது. இவற்றின் முதன்மையான உணவு சீல் ஆகும். வளர்ந்த ஆண் கரடி 400 முதல் 600 கிலோகிராம் எடையுடையவை. பெண் கரடிகள் 200 முதல் 300 கிலோகிராம் எடையுடையவை. இவை இளவேனிற் (வசந்த) காலத்தில் கருத்தரிக்கின்றன. இவற்றின் கருவுற்றிருக்கும் காலம் 240 நாட்களாகும். பொதுவாக இரண்டு குட்டிகள் பிறக்கின்றன. உலகில் ஏறத்தாழ 20,000 பனிக் கரடிகள் உள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு இயற்கையான வாழிட எதிரிகள் ஏதும் இல்லை, மனிதனைத்தவிர. கடுங் குளிர்ப் பகுதியாகிய ஆர்ட்டிக்கு நிலத்தில் வாழ முற்றிலும் பழக்கப்பட்டது. 70,000 ஆண்டுகளுக்கு முன்னரான பழைய தொல்படிமப் பதிவுகள் அல்லது தொல்லுயிர் எச்சங்கள் (fossil records) ஏதும் இல்லை எனச் சொல்லப்படுகிறது.

இனப்பெருக்கக் காலங்களில் பெண் கரடியுடனும், குட்டிகளுடனும் இருந்தாலும், பனிக்கரடிகள் பொதுவாக தனியாக வாழும் விலங்குகள். பெரும் திமிங்கிலமோ, வால்ரசுகளோ உண்ணக் கிடைக்கும் பொழுது, 20-30 கரடிகள் போல ஒரே இடத்தில் பார்க்கலாம்.

இவை ஏறத்தாழ 20-25 ஆண்டுகள் வாழும். வேட்டையாடும் போது போலார் கரடிகள் தங்கள் உள்ளங்கையால் மூக்கை மூடிக் கொள்ளும். இவற்றின் உடம்பு வெள்ளையாய் இருந்தாலும் மூக்கு கருப்பாய் இருந்து காட்டிக் கொடுத்துவிடும். மூக்கை மறைப்பதன் மூலம் பனிப் படர்ந்த ஆர்டிக் நிலப்பரப்பில் தன்னைத் தெரியாதவாறு வேட்டையாடும்.

புதிதாய் பூமியைப் பார்த்த போலார் கரடிகள் சிறியனவாய் இருக்கும். கடுங்குளிரை தாக்குப் பிடிக்க, அவைகள் மிக விரைவாக குண்டாக கொழுப்பு சத்துடன் இருக்க வேண்டும். இயற்கையிலேயே அவற்றின் தாய்ப்பால் மிக செழுமையாகவும், பாதி பங்கு கொழுப்பு சத்து கொண்டதாகவும் இருக்கிறது.

●●●

(நன்றி: தமிழ் விக்கிபீடியா.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**



# எனது அலமாரி

**- ஏ. ஆர். ஏ. சத்தார் -**

எண்பது வருடங்கள் கழிந்திருக்கும். ஊரின் கிழக்குப் பகுதி. ஆலங்கேணி என்று அடையாளப்படுத்துவர். தற்போதைய விளையாட்டு மைதானத்தின் சரி நேரான மேற்குப் பகுதி. இதுதான் எங்கள் வீடு அமைந்திருக்கும் இடம்.

இரண்டு அறைகளும் ஒரு வராண்டா(ஹோாள்)வும் முன்னால் ஒரு திண்ணைப் பகுதியும் கிடுகினால் வேயப்பட்டது. தென்னை, மா மரங்களினால் வளவு நிறைந்த நிழற்சோலை. தற்கால மூன்று வளவுகள் அளவானது. தென்புறம் கிளிப் பெத்தா, கிழக்கே பிஸ்மில்லா மூத்தம்மா, குருவி மூத்தம்மா, மேற்கே சரியா மூத்தம்மா, பெரிய மூத்தம்மா, வடக்கே எனது தாயாரின் வாப்பா சீனிப் பரிகாரியார், வடகிழக்கில் கிசுமத்து மூத்தம்மா, அஸ்மா மூத்தம்மா என மூத்தம்மாக்கள் நிறைந்த பகுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லா மூத்தம்மாவின் வளவும் குருவி மூத்தம்மாவின் வளவும் மர முந்திரிகைச் செடிகளால் நிறைந்திருக்கும். இதுதான் அந்தப் பகுதியின் அடையாளங்களப்போது.

வாப்பா அக்காலத்தில் ஒரு செல்வாக்கு மிக்கவராகவும் பெரிய பள்ளியின் மரைக்காராகவும் இருந்தவர். குயின் மேரி என்ற இரண்டு கொண்டோடி வலைகளுக்கும் ஒரு ஆழ் கடல் மீன்பிடித் தோணியின் உரிமையாளர். அக்காலத்திலேயே துறை நீலாவணை, சேனைக் குடியிருப்பு, நீலாவணைப் பகுதிகளில் இருந்து அநேக தொழிலாளர்கள் வருவார்கள். அக்காலத்தில் மீன்களும் தாராளமாகவே படுவதனால் அதை நம்பி அதிக குடும்பங்கள் வாழ்ந்தன. மீன்கள் விற்ற காசுகளெல்லாம் எங்கள் வீட்டில் வைத்தே பகிர்ந்தளிக்கப்படும். வீட்டில் வராண்டாப் பகுதியில் கருவாட்டு மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

மேட்டு வட்டை, றாணமடு ஆகிய இரு பகுதிகளிலும் இருபத்து மூன்று ஏக்கர் வேளாண்மை வயல் செய்கைக்காரர்களாக நாலு துறை நீலாவணை ஆட்கள் வேலுப்பிள்ளை, தேவநாயகம், சிவகுரு, பூபாலப்பிள்ளை. இவர்களுக்குதவியாக ஒருவர். மூட்டை மூட்டையாக நெல் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு கருவாட்டு மூடைகளுக்குப் பக்கத்தில் பட்டறை அமைக்கப்பட்டு அதில் சேமிக்கப்படும். சுமார் எட்டடி விட்டம் கொண்ட பட்டறையது.

வீட்டின் வடபுறப் பகுதியில் ஐந்து குழித்தறிகள் உட்பட பத்துக்கும் அதிகமான தறிகளும் நெசவாளர்களும். டாம் சாறன்கள், கம்பாயம், சோமன் சாறிகள் நெய்யப்பட்டு அவை விற்பனைக்காக அனுப்பப்படும். இது தவிர நவகிரியாக் குளத்தில் நன்னீர் மீன் பிடி. இதற்காக அலி முகமது நானா, சாய்வு பெரியப்பா, குடைக்கட்டி அச்சு முகம்மது என மூவர் அங்கிருந்து பெரிய செப்பலி மீன்களும் கொக்கிஸான் மீன்களும் காய வைக்கப்பட்டு சாக்குச் சாக்காக கொண்டுவரப்பட்டு அதுவும் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருக்கும். ஆக எந்தநேரமும் ஆட்கள் நிறைந்த கலகலப்பான ஒரு வீடாகவே எங்கள் வீடு காணப்பட்டது. நெசவாளர்களுக்கு எனது உம்மா சோளன், பனங்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு அவித்தும் வகை வகையான பலகாரங்கள் செய்து கொடுப்பதும் வாடிக்கையான விடயங்கள். நினைத்த நேரம் பிளேன்டி. இப்படி விரிவாக ஏன் சொல்கிறேன் என்று புரியவில்லை அல்லவா? காரணம் இருக்கிறது. இப்படி செல்வச் செழிப்பாகவும் கலகலப்பாகவும் இருக்கும் வீட்டை எல்லோரும் நல்ல எண்ணத்தோடு பார்த்துக் கொண்டிருப்பார்களா? என்ன! தீப் பந்தம் ஒன்றைக் கொழுத்தி வீட்டின் கூரையில் போட்டுவிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிவிட்டார்கள். பிரதேசம் முழுவதும் தீயால் கருகிச் சாம்பலாகிவிட்டது.

வாப்பாவின் அத்தனை சொத்துக்களும் அழிந்துபோயிற்று. வாப்பா சளைக்கவில்லை. மீண்டும் நெசவுத் தொழிலில் அதிக கவனம் செலுத்தி படிப்படியாக அதிக தறிகளைப் போட்டு விரிவுபடுத்தினார்கள். மருதமுனை றகுமானியா நெசவாளர் சங்கம் என்ற ஒன்றை அப்துல் றகுமான் மரைக்கார் அவர்களைத் தலைவராகக் கொண்டு வாப்பா அதன் செயலாளராகவும் இயங்கினார்கள். அப்போது நெசவுக்குத் தேவையான நூல்கள் எகிப்து மற்றும் பாகிஸ்தானிலிருந்தே இறக்குமதி செய்து NTC மூலம் நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்படும். அங்கிருந்து வழங்கப்படும் நூல்கள் எங்கள் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு நெசவாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

ஒரு நாள் மட்டக்களப்பிலிருந்து நூல் ஏற்றிவரும் போது ஒரு பெட்டகம் ஒரு கட்டில் ஒரு அலமாரி இவை மூன்றும் வீட்டிற்கு வந்து சேர்ந்தன. பின்னாட்களில் இவை மூன்றும் 10 ரூபாய் கொடுத்து வாங்கியதாக வாப்பா கூறியது நினைவிருக்கிறது. காலங்கள் வேகமாக ஓடியது. பிரதேசத்தில் பள்ளிக்கூடம், பள்ளிவாசல், விளையாட்டு மைதானங்கள் எனவும் புதிய புதிய குடியேற்றங்கள் எனவும் வளர்ச்சியடைந்து சென்றது. எனக்கும் தம்பிமார் தங்கையென பெரிய குடும்பங்களாகிப் பாடசாலை செல்லும் பிள்ளைகளாக மாறிவிட்டோம். இவ்விடைக்காலமான 59 - 63 வரை மையவாடியின் கிழக்கே படல் ஆலிமின் தலைமையில் கொடியேற்றம் செய்யப்பட்டு பல எதிரிப்புக்கள் மத்தியில் கைவிடப்பட்டது. நானும் நான்காம் தரத்திற்கு வந்துவிட்டேன். அல்மனார் பாடசாலையில் கல்வியை மேற்கொண்டேன். 1963 ஆம் ஆண்டு நான் ஸ்கொலஸிப் சோதனைக்காக அதிகம் படிக்கவேண்டி இருந்தது. ஏகாம்பரநாதன் சேர் மற்றும் நெய்னா முகம்மது சேர் தருகின்ற வீட்டு வேலைகளைச் செய்யாவிட்டால் அடி உதை என்று வாங்கிக் கட்ட வேண்டும். இவ்வாறான நிலைமைகளை அறிந்த எனது வாப்பா ஓர் ஆசிரியரைப் பேசி எனக்கு பாடம் சொல்லித்தர வைத்தார்கள். இச் சந்தர்ப்பம் தான் எனக்காக எங்கள் வராண்டா ஒதுக்கப்பட்டு எனது அலமாரியும் கட்டிலும் ஒரு மேசையும் என்னோடு சங்கமமாகின.

படிப்பு, விளையாட்டு, O/L A/L என பரீட்சைகள், பாடசாலை மாற்றங்கள், சர்வகலாசாலை, திருமணம், உத்தியோகம், பிள்ளைகள் என காலங்கள் விரைவாக ஓடின. இப்போது எனது பிறந்தகம் தங்கையின் இருப்பிடமாகின. ஏற்கனவே மூன்று வளவு என்று சொன்னது நினைவிருக்கிறதா? அவவுக்கும் மூன்று பெண் பிள்ளைகள் ஒரு ஆண் என குடும்பங்கள் வளர்ந்தன. வடபுறம் மூத்த மருமகள், தென்புறம் இரண்டாவது மருமகள், பழைய வீடு மூன்றாவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமகளுக்கென ஒதுக்கப்பட்டு புதிய வீடுகளும் கட்டப்பட்டன. மூன்றாவது வீடு கட்டும் போது பழைய வீடு மட்டுமல்ல அதில் அடைக்கலம் பெற்றிருந்த அலமாரி, பெட்டகம் இரண்டும் தங்களது இருப்பிடங்களை இழந்தன. புதிய புதிய இரும்பிலான அலமாரி களும் கதிரை, சோபாக்கள் என வீடுகளை நிறைத்ததனால் இவை இரண்டும் தங்களது செல்வாக்குகளை இழந்தன. ஒருவாறாக பெட்டகம் உருமாற்றம் செய்யப்பட்டு வெவ் வேறு பெயர்களில் அழைக்கப் பட்டன. பாவம் அலமாரியின் பாடு மிகக் கேவலமான முறையில் வீட்டின் ஒரு மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. கவனிப்பாரற்ற நிலையில் அழுது கொண்டிருந்தது.



பன்னூலாசிரியர் ஏ. ஆர். ஏ. சத்தார்

ஒரு நாள் மருமகளின் வீட்டுக்குச் சென்று திரும்புகையில் ஓர் அழுகைச் சத்தம் கேட்பது போன்ற பிரமை. சுற்று முற்றும் பார்த்தேன். யாரும் இல்லை. மீண்டும் ஒரு முனகல். ஒன்றுமில்லை. "ஏய்! என்னோடு அதிகமாக உறவாடியவன் நீயல்லவா" என்பது போன்ற ஒரு சத்தம். கண்ணீர் விடுவது போன்ற விசும்பல். மூலையில் கவனிப்பாரற்றிருந்த அலமாரியின் முனகல்தான் அது என்பதைப் புரிந்து கொண்டேன்.

மழை சற்று ஓய்ந்தது. அலமாரியின் மேல் தேங்கியிருந்த நீர் துளித் துளிகளாக விழுவது அது கண்ணீர் வடிப்பதாகவே எனக்குப்பட்டது. இன்னும் அதை அங்கு விட்டு வைக்க என் மனம் ஒப்பவில்லை. அன்றே ஒரு குபோட்டா வாகனத்தில் எனது வீட்டுக்கு அழைத்துவந்து என்னோடு வைத்திருக்கிறேன். இன்று வரை எனது முழு உடமைகள் - தங்கமோ, நகை நட்டோ என்று எண்ணிவிடாதீர்கள் - உடுப்புக்கள் யாவற்றையும் அவரே பொறுப்பேற்றுப் பாதுகாத்து வருகிறார்.

**(முற்றும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வாப்பாவின் துஆ

- ஏ.எம்.கஸ்புள்ளா -



**1990** களில் யுத்தத்தின் நெருக்கடிகள் நிறைந்த காலம். சொந்த நிலபுலத்தை விட்டு இடம் பெயர்ந்து வாழுதல் ஒவ்வொருவருக்கும் தவிர்க்க முடியாததாக இருந்தது. காட்டுத் தொழிலான விறகு எடுத்து வாழும் கிராமத்தவர் வாழ்வில் பெரும் சுமையை யுத்தம் ஏற்படுத்தியது. இந்த யுத்த நிலை சாதாரண நிலைக்கு வந்தபோதுதான் மக்கள் தத்தமது இடங்களை தேடிச் சென்றனர். பழைய வாழ்க்கைக்கு மெல்ல மெல்லத் திரும்பினர்.

உம்மா எப்போதும் சொல்லு வாங்க "சரீபு அப்பாவின் காணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கண்டலடியில்' நாலரை ஏக்கர் உள்ளது" என்று. 'கண்டலடி' எங்கம்மா? என்று சின்ன வயதிலே நான் உம்மாவிடம் கேட்டுக் கொண்டிருப்பேன். வயல் பிரதேசம் என்றால் எனக்கு ரொம்ப பிடிக்கும். அதுவும் நமக்கும் காணியுள்ளது என்றதும் இரட்டிப்பு சந்தோஷம்தான்.

வாப்பா சொன்னாங்க "இப்போது சரியான காடு வளர்ந்து போயிக் கிடக்கு. அடையாளமும் விளங்கிதில்லே. நீயும் கொஞ்சம் வளர்ந்த பின் கூட்டிபோறேன்" என்று. "யாரும் அந்தக் காணியை எடுத்திட்டாங்கண்டா" வாப்பாவிடம் திருப்பிக் கேட்டேன்.

அப்படி யாரும் எடுக்க முடியாது. அது உறுதிக் காணி. நாம் பயப் படத்தேவையில்லை.

கண்டல் மரங்கள் சூழ்ந்த அழகிய கிராமம் கண்டலடி. அங்கு நெல்விதை விதைத்து பாத்தி கட்டி நெல்லை அறுவடை செய்து அதில் பாற்சோறு ஆக்கித் திண்ணவேணும் என்ற ஆசை நிறைவேறும் நாட்களுக்காக நானும் காத்திருந்தேன்.

வாப்பாவும் நெல் வியாபாரி என்பதாலே அந்த தொழிலிலே கவனத்தை செலுத்திட்டாங்க. இன்றைக்கு ஸ்கூல் விடுமுறைதானே எப்படிச் சரி வாப்பாவைக் கூட்டிட்டுப்போறோம் என்ற முடிவோடே இருந்தேன். ஆட்டோ ஒன்றை வாடகைக்கு எடுத்து கண்டல் காட்டுக்குப் போயிச்சேர்ந்தோம்.

எங்கட அந்த கண்டலடி காட்டு வயல் வளவுக்குள் வீடொன்னு கட்டப் பட்டிருந்தது. எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. விசாரித்துப் பார்த்தோம். அது சரிபரின் வயல் காணியல்லவா? இதற்குள் ஏன் வீடு கட்டிறீங்க என்று கேட்டபோது, கிண்ணியாவில் உள்ள ஒரு வைத்தியர் சரீபு அப்பாவிடம் வாங்கி விட்டோம் என்று சொல்லி எங்கள் வாயை அடைத்து விட்டதாக அந்த இடத்தில் குடிவாழும் ஒருவர் சொன்னார்.

'சரீபு அப்பா' மரணித்து எழுபது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. எப்படி பொய்யை சொல்லியுள்ளார். அதுவும் ஒரு புனித தொழிலைச் செய்யும் வைத்தியர்.

மகன் இளையவன் அழுது கொண்டே இருந்தான். 'அப்போதே சொன்னேன், வாங்க போயி பார்ப்போம் என்று. நீங்கதான் கேட்கல. இப்போது உறுதி மாத்திரம் தான் இருக்கு, காணியில்லை.

கொஞ்சம் இருப்பா இன்னும் சிலரிடம் விசாரித்துப் பார்ப்போம். யாரோ புதிதாக இஸ்லாத்திற்கு வந்த ஒருவர் பராமரிச்சதாகவும் அவரிடமிருந்து காணியை சேவியர் படம் எடுத்து லோயர் மூலம் காணியை எழுதி எடுத்திருக்கார், வைத்தியர். ஏற்கனவே உறுதிப் பத்திரம் உள்ள காணிக்கு இப்படியெல்லாம் எழுதி எடுக்கலுமா? இல்லாதவன் எடுத்துட்டுபோனாலும் பரவாயில்லை. நல்ல வசதியோடு வாழ்கின்றவர்கள்தான் இப்படி எங்களைப்போல ஏழைகளிடம் உள்ள காணியை இப்படி பிடுங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்திடுறாங்க, என்ற யோசனையுடன் வாப்பாவும் மயக்கமடைய, வந்த ஆட்டோவில் வாப்பாவை மெல்ல ஏற்றிக்கொண்டு வீடு திரும்பினோம்.

அங்கு நடந்த விடயங்களை உறவினர்களிடம் சொன்னோம். அவர்கள் சொன்னார்கள் மத்திய சபையில் காணி சம்மந்தமான பிரச்சினைகளும் விசாரிக்கப்படுகிறது. கடிதம் எழுதிக் கொடுங்க என்று. உறவினர் சொன்னபடி காணியை பராமரித்தவரை விசாரிக்க கடிதம் கொடுத்தோம். முதல் வழக்கில் எதிராளி வரவில்லை. அதனால் அடுத்த வழக்கில் விசாரிக்க அழைப்பு விடுப்போம் என்று திகதியை தந்தனர். அதற்கும் எதிராளி சமூகம் தரவில்லை. நாங்க சொன்னோம் 'பொய் சொல்லி' எழுதிய காணி எப்படி வருவார்கள் என்று. அடுத்த தவணையில் வைத்தியர் வந்தார்.

காணியை எழுதித் தந்தவர் மரணித்து விட்டார். நீங்க வந்து உங்கட காணியை அளந்து எடுங்க என்று வைத்தியர் சொன்னதும் மத்திய சபையினர் சொன்னார்கள் அப்போ நீங்க போயி அளந்து எடுங்க என்று. பிரச்சினை சுமுகமாக முடிந்திட்டது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என சந்தோசத்துடன் வீடு சென்றோம். மறு நாள் காணியை அளப்பதற்கு சதாத் சேவியரை அழைத்திட்டு கண்டலடி வளவை குறுக்கறுக்கும் வீதியின் சுடலைப் பிட்டிக்கு அருகே அமைந்துள்ள வளவுக்குள் காலடி வைக்க, வைத்தியர் சினிமா படம்போல அடியாட்களை அனுப்பியிருந்தார். சேவியர் சொன்னார் இது சரிவராது. நீங்க மத்திய சபையிலே போயி விடயத்தைச் சொல்லுங்க என்று.

மத்திய சபையினருக்கு எழுத்து மூலம் அறிவிக்க 'வைத்தியரா அப்படிச் செய்தார்' என்று அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல எங்களுக்கு கடிதத்தை தந்தார்கள்.

அன்றிலிருந்து வாப்பாவுக்கும் இதயப் பிரச்சினை ஆரம்பமானது. வாப்பாவைப் பார்க்கிறதா? காணிப் பிரச்சினையைப் பார்க்கிறதா? என்ற நிலைவந்திட காணிப்பிரச்சினை விட்டிட்டு வாப்பாவின் உடல் நலத்தையே கவனிக்கத் தொடங் கினோம்.

யோசனை கூட இரத்த அழுத்தம் ஏற்பட்டுள்ளது. வைத்திய சாலையில் மாதாமாதம் கிளினிக் போட்டுத் தந்தார்கள். அதன் படி கிளினிக் திகதிக்கேற்ப மருந்து தொடராக எடுத்துவர வாப்பாவின் உடல் நலம் கொஞ்சம் தேறிவர ஆரம்பித்தது. வாப்பாவின் ஆசைப்படி உம்ராக் கடமையை நிறைவு செய்ய அனுப்புவோம் என்று முடிவெடுத்து அனுப்பி வைத்தோம்.



எழுத்தாளர் ஏ.எம். கஸ்புள்ளா

வாப்பா அங்கு தனது மனம் கலங்கி அல்லாஹ்விடம் கேட்டது.

"யா அல்லாஹ், எங்கட காணியை பொய்சொல்லி அபகரிச்ச வைத்தியர், அதற்கு உடந்தையாக இருந்த லோயர், சேவியர் இவர்களை நீதான் தண்டிக்கனும். இவர்களோடு போராட எனக்கு பணவசதியோ, உடல் ஆரோக்கியமோ கிடையாது. என்னைப்போன்ற எத்தனைபேரின் சொத்துக்களை இவர்கள் சூரையாடினார்களோ தெரியாது."

வாப்பாவின் அழுகையில் வந்த கண்ணீர்த்துளிகள் அந்த புனித மக்காப் பள்ளியின் தலத்தில் படிந்து கொண்டிருந்தன.

(முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சரி கவிதைகள்

கவிதை - வெலிகம ரிம்ஸா முஹம்மத்

## சோக மூட்டைகள்!



என் இறகுகளை எல்லாம்
கத்தரித்துவிட்டார்கள்
ஆனாலுமென்ன
பீனிக்ஸ் பறவையாய்
மீண்டு(ம்) எழுகிறேன்!

நிர்க்கதியாக நின்றிருந்த
தருணங்கள் இப்பொழுதும்
குத்துகின்றன என்னை ஈட்டியாய்!
பிரச்சினைகள்
ஓயாமல் வந்து சேர்கின்றன
நிம்மதிக்குப் போட்டியாய்!

என் தோள்களில்
வலுக்கட்டாயமாக ஏறியமர்ந்த
சோக மூட்டைகளை
இடையே விட்டுவிட்டே
சுமையின்றி சுகமாய்
பயணிக்க ஆசைப்படுகின்றேன்!

தண்ணீரிலிருந்தபடி
கண்ணீர் சிந்தும்
அந்த மீனைப் போன்றே
எனது நிலை!

ஏரிக்கரைப் பூக்களுக்குக் கூட -
என்
கோரிக்கைகள் புரிந்திருக்குமா?
இளந்தென்றல் வந்து
என் இதயத் தணலை
அணைக்குமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தியத்தலாவ எச். எப். ரிஸ்னா



# காலப் பெருவெளி

கடல் போன்ற நெஞ்சுக்குள்
அலையடிக்கும் நினைவுகள்..
நினைவுகளை கறையானாய்
அரிக்கின்ற தலைவிதிகள்!

தலைவிதியின் வழியினிலே
போகின்ற பயணங்கள்..
பயணத்தின் நடுவினிலே
பயம் சூழும் தருணங்கள்!

தருணங்கள் கிடைக்குமென
நம்பியிருக்கும் பொழுதுகள்..
பொழுதுகள் விடியுமென
எதிர்பார்க்கும் நிமிடங்கள்!

நிமிடங்கள் நலன் பெறவே
நிதம் நிகழும் வேண்டுதல்கள்..
வேண்டுதல்கள் பழித்திடலே
வேண்டி நிற்கும் யாசகங்கள்!

யாசகங்கள் தினம் தொடர்ந்தால்
துரத்திவிடும் காலங்கள்..
காலத்தின் பெருவெளியில்
மனம் கொல்லும் வேதனைகள்!

வேதனைகள் இரக்கமின்றி
வாட்டுகின்ற துன்பங்கள்..
துன்பங்கள் தொடர்ந்து வந்து
துளைத்துவிடும் பெரு வலிகள்!!!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணியமாய் கற்றிடு!

உனக்கும் எனக்குமான புரிதல்கள்
உன்னதத்தின் உணர்வுகள்
உத்தமமான நினைவுகள்
உரத்துத்தான் ரீங்காரிக்கின்றன.

பெண்மையின் இதம்புரிந்து
பேருக்காய் வாழாது
பேருண்மை பல மெய்ப்பிக்க
பேரூக்கம் கொண்டவன்.



பிரிவுகள் காணாது
பரிவுகள் பல கொண்டு
பாந்தமாய் நிற்கையில்
பரிதவிக்கவிட்டு பிரிந்தவன்.

நிதம் உன்னை உச்சரிக்கும் உதடுகள்
நித்தம் உன்னை நினைவூட்டும் ஆடைகள்
நிர்க்கதியாய் நிற்கவைக்கும் நினைவுகள்
நிரந்தரமாய் கண்ணீரை சொரிய வைக்கும்.

பசிக்காய் உண்ணும் உணவுகூட
பஞ்சடைக்கும் தினமாய்...
பாரினில் கணமும் வதம் செய்யும்
பாங்குடனே பின்னோக்கும் வழித்தடங்கள்.

கண்ணீரை கசியவிட்டு
கதறி அழும் எந்தனுக்கு
கலாபீடம் சிறக்க வைத்து
கண்ணியமாய் கற்றிடு மகனே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதூகலிக்கின்றோம்

விரைந்து சென்ற இருபத்தேழு வருடங்கள்
வகைதொகையாய் உணர்வலைகள்
பூக்கள் இதழ் அவிழல்
முத்தாய்ப்பாய் குழவிகள் மூன்று...

காலநதியில் சிலிர்த்தெழுந்து
காலாற நடக்கையில்
காவியங்கள் கதையெழுதும்
காட்சிகள் கண்ணெதிரே...



கல்லும் முள்ளும் நிறைந்த
வாழ்க்கைத் தடங்களில்
கால் தடுமாறி வீழ்ந்திடும் கணங்களில்
முயற்சியின் பலிதமாய் தேரோட்டம்...



யௌவனத்தில் விதைதூவி
எழிலாய் நிறம்பூசி
வாழ்வை வலிதாக்கும் கணங்களில்
வாஞ்சையுடன் கடைவிரிக்கும் இதழ்கோடி..

இருவர் இதமாய் முழுமை பெற
இனிதான நினைவலைகள் கடந்துசெல்ல
இதமாய் தலைதடவும்
இன்னமுத குளம் எனதே...



குழவிக்குக் குழவியாய்
குவலயத்தில் ஜனனித்த
குலவழகு அமீட் றைஷனே
குதூகலிக்கிறோம் உன்வரவால்...

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாஹிரா ஹமீட் அஸ்ஹர்
கம்பளை.

# தலையாய கடன்



தேசத்தின் நலனைப் பேணிக் காத்தே
நேசத்தோடு உறவாடி வேசத்தைக் களைந்திடு

உள்ளத்தில் உறுதியும் உடம்பில் திடமும்
எண்ணத்தில் சுமந்து எதிர்நீச்சல் போட்டிடு

நாட்டுக்குத் தொண்டாற்றும் மகத்தான பணியை
மனதில் நிறுத்தி மகிழ்ச்சியாய்த் தொடர்ந்திடு

சுரண்டல் பதுக்கலால் சுகமனுபவிப்பதைத் தொலைத்து
சீரழிக்கும் போதையை வேரறுத்து எறிந்திடு

நாளும் கேள்விக்குறியாகும் பொருளாதாரத்தைச் சீராக்க
அறிவார்ந்த செயற்றிட்டங்களுக்கு ஒத்தாசை நல்கிடு

வெயிலோ கடும்மழையோ எது வந்தபோதிலும்
காலத்தைத் திட்டாது கரிசனையாய் நடந்திடு

தலை விரித்தாடும் லஞ்சம் ஊழல்களை
தடுத்து நிறுத்துவதைச் சவாலாக ஏற்றிடு

அரிவையர் அச்சமின்றி அகிலத்தில் நடமாட
தூய எண்ணத்துடன் பக்குவமாய் வழிகாட்டு

நாளைய விடியல்களை நமக்காக நமதாக்கி
தேசத்தைப் பாதுகாக்க நேசமுடன் உழைக்கலாமே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இமையி
கம்பளை.



கண்ணீர் சிந்திய நாட்கள் எண்ணி
இப்பொழுதெல்லாம் வருந்திக்
கொள்கிறேன்

கண்ணீர் சிந்தியவர்களுக்காய்
வருந்திக்கொள்கிறேன்

ஏனெனில்,
சந்தோஷிக்கவும் கண்ணீர்
சிந்தியிருக்கிறேன்

மனம் நெகிழவும் சிந்தியிருக்கிறேன்
அதே கண்ணீர்

உடைய, சில்லுச் சில்லாய் சிதறிப்
போகவும் சிந்தியிருக்கிறேன்

ஏனோ வீணாய் சிந்தினேன் என
சிந்தச் செய்தவர்களுக்காய்
இன்று எனை
வருத்தியும் கொள்கிறேன்

இருந்தும் என் காலங்களின்
அவர்கள் பங்கீடு
மனிதர்களை அறியச்
செய்வதற்காய் என
எனை இப்பொழுதெல்லாம்
ஆற்றியும் கொள்கிறேன்

இப்படியும் மனிதர்கள்!

இருந்தும் அன்பென்ற
ஒன்றிற்காகவா
இத்தனையும்

இந்த அன்பினால் தானே
அத்தனையும் என

அந்த அன்பிற்காக மட்டுமே
இப்போதும் இந்தக் கண்ணீரை
சிந்திக்கொள்கிறேன்

என் கண்ணீருக்கு நீங்கள்
காரணம் என்றிருக்க
நீங்களோ பாக்கியசாலிகள் தான்
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா ஒரு வெண்பா

வெண்ணிலா யின்று இலக்கிய வீதியில்
வியத்தகு சஞ்சிகையாகி - கண்போல்
விழித்திட வைத்தது துலங்கிடப்பணியதைப்
பழியிலாக் காப்பது மேல்.

கட்டுரை, கவிதை சிறுகதையெனப் பலக்
கொட்டுதே சிறப்புறுவாக்கம் - பட்டென
சிந்தைபதிக்கு மதனழகு தமிழ் நடை
உந்தும் பருகிடுக.

பலவிருதிங்கு வெண்ணிலா சஞ்சிகை
நலமுடன் பெற்றே வரும் - நிலவாக
எழுத்தினை நேசித்தியங்கும் கவிஞர்கள்
பழுதிலாப் பிரகாசிப்பர்.



எழுத்துப் பணியும் அறிவுசா ருழைப்பும்
செழித்தோங்கும் பதிமருதம் - அழியா
நற்பணியதனால் நன்மை பலசேரும்
கற்றதிலுணர்க.

பன்னூலீந்த நந்நூலறிவாளரதன் ஆசிரியர்
இன்னும் பலதரவே - என்றும்
இறை கரமேந்திக் குறைகளுமகல
நிறை பிரார்த்தனைகள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு.

# வடிவம் பெறுமொரு கவிதை

எதை எழுதுவது...
எதை எழுதாமல் விடுவது...
என்பதில் உள்ள குழப்ப நிலை
இன்னமும் முடிந்தபாடாக இல்லை.

தகவலறிந்து...
தரிசனங்களை உள்வாங்கிச் சேமித்த
இதயவறைக்குள்
படர்ந்திருக்கின்றன சுற்றிவர
மனதோடொவ்வா(த) அழுக்குத் தூசிகள்.



சிந்தனையில் எழும் உணர்வலைகளை
தூசிகள்
சிறைப்பிடித்து வைத்திருப்பதால்
வெளிவர மறுக்கின்றன
சொற்கூட்டுகள்.

ஆயினும் -
இச்சிறை நிரந்தரமன்று.

உறையுணர்வில் எழும் சுகம்
உறக்கமற்ற நிலை கொள்ளும்போது...
அவ்வகத்தினுள்
சிலிர்க்கும் புதிய உணர்வுகள்...
சொற்கோர்வைகளாகி
எழுதிச்செல்லும் ஒருநாளில்
ஒருநிகழ்வை
ஓர் அர்த்தம் செறிந்த கவிதையாக!
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிண்ணியா சபீனா.



# வருக்கமோனையில் அமைந்த பாடல்

(ம)கிழ்ச்சி பொங்கும் வாழ்வினைப் பெற்றிட,

(மா)ந்தரின் உணர்வினை மதித்தே நடந்திடு!

(மி)ன்மினி போலவே நாளும் ஒளிர்ந்திட,

(மீ)ட்டிடும் நற்குணங்கள் சக்தியைத் தந்திடும்.

(மு)க்கனி சக்கரை இணைவுடன் அருந்தி,

(மூ)ப்பிலா அழகுடன் வசந்தமாய் வாழ்ந்திடு.

(மெ)ன்மை மிகுந்த மொழியினைப் பகிர்ந்திடு!

(மே)தினி மீதினில் மேன்மை காண்பாய்!

(மை)யல் கொண்டிடு ஆத்மீகச் செயல்களில்,

(மொ)ய்த்திடு முந்தன் மனதினில் நிம்மதியே!

(மோ)ட்சமும் கிடைத்திடும் மறுமை வாழ்வினிலே!

(மௌ)னமும் தியானமும் மனவலியின் மருந்தாமே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை மாற்றும் போதை



நோய்களை உருவாக்கி
உடலைச் சிதைக்கும்,
உழைக்கும் பணத்தை
வீணாய்க் கரைக்கும்,

மன அமைதியை
முற்றாக அழிக்கும்,
தீய விளைவுகளை
அதிகமாக உருவாக்கும்,

இல்லற வாழ்வில்
வெறுப்பை விதைக்கும்,
சண்டைகளில் உறவுகளில்
விரிசல் விளையும்,

கூடாத காரியங்களை
செய்யத் தூண்டும்,
மகிழ்ச்சியான வாழ்வு
இருளாக மாறும்,

கவலையும் கண்ணீரும்
தொடர் கதையாகும்,
பெறுமதியான காலம்
பயனற்றுப் போகும்,

பாதை மாற்றும்
போதை தவிர்ப்போம்,
சீரிய சிநதனைகளை
உள்ளத்தில் பதிப்போம்,

தன்னம்பிக்கையை வளர்த்து
சாதிக்க முயல்வோம்,
வளமான வாழ்க்கை
மலர முயற்சிப்போம்,

நல்ல மனிதனாக
வாழ்ந்து சிறப்போம்,
நன்மைகள் செய்து
சுவனம் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்துவெற்றில் பிடித்தவை

## காதலி...



என் நேசப்பெருங்கடலின்
தேவதை...
தாய்மையின்
இலக்கணம்...
காணும் போதெல்லாம்
புதுப்புன்னகையால்
உள்ளம் கவரும்
அன்புக்கானவர்
கை தொட்டு விரல் வருடி
தன்னோடு சேர்த்து
என்னையும்
இதமாக்கும்
இனிமையானவர்...
ஊருக்கும்
உறவுக்கும்
சுற்றம் சூழல்
அத்தனைக்கும்
பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்
அனைவருக்கும்
இவர் ஒரு
பெருந்தாய்...
கலை இலக்கியம்
விளையாட்டு என்று
பல்துறைச் சான்றோர்களை
சுமந்த கருவறை...
ஊருக்கே
அன்னையாய்
உபசரிக்க நல் உறவாய்
வாழ்வாங்கு வாழ்கின்ற
என் காதலி...
உறவுகள் கொண்டாடும்
நேசகி....

●

– கோபி கோபிகை

(இந்தியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றில் நனைந்த ஆட்டுக்குட்டியாய்!



நினைவுகளாகவே
பத்திரப்படுத்தி வைத்திருக்கும்
உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்
காலங்காலமாக
நீயும் நானும் வாழ்ந்தது போலவே
சட்டென சில ஞாபகங்கள் வந்து போகும்
நாம் பேசி முடித்த சில வினாடிகளில்
விடுமுறையில் சென்று வருவதுபோல்தான்
நமது இரண்டு உரையாடல்களுக்குள் இடைப்பட்ட தூரம்
அந்தி பட்ட காற்றில்
அடைக்காமல் கிடந்த
சாளரத்தின் ஊடே வந்த வாசம்
உன்னுடையதாக இருக்கக்கூடும் என பலமுறை
சுற்றும்முற்றும் பார்த்திருக்கிறேன்
நெஞ்சத்துக்கு
நெருக்கமாக இருப்பதால் என்னவோ
என்னை நெகிழ வைத்திருக்கவும் கூடும்
நியதிகளின் படி
நீண்டுகொண்டே போகும்
இரயில் தண்டவாளங்கள் போன்றே
நாம் தூரயிருப்பதில்
ஆட்சேபனை உனக்கிருக்கிறதா ?
அதையும் சொல்லாமலே
வழிந்தோடும் கண்ணீரில் நனைந்தபடி
வாய்மூடித் தூங்கிக் கிடப்பாய்
ஆற்றில் நனைந்த
ஆட்டுக்குட்டியாய் !

**– எழு கவி**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து...




அன்புத் தம்பி, அஸ்ஸலாமு அலைக்கும்.

வெண்ணிலாவின் முக்கிய பக்கங்களை மருமகன் நியாஸ் அனுப்பி இருந்தார். மிகச் சிரத்தையோடு என்னைப் பற்றிய குறிப்புகளைப் பதிவிட்டுள்ளீர்கள். மிக்க நன்றி. இறையருளால் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் எனது படைப்பு முயல்வுகளுக்காக நான் கண்டுகொள்ளப் பெற்றாலும், அதிக அளவில் இலக்கிய வாதிகளைக் கொண்ட எனது பிறந்த மண் என்னைக் கண்டு கொள்ளவில்லையே என்ற ஆதங்கம் எனக்கிருந்தது. கடந்தமுறை நான் மருதமுனைக்கு வந்தபோது அல்மனார் தந்த வரவேற்பு என்னை மகிழ்வித்தது. தற்போது நீங்கள் உங்கள் சஞ்சிகை மூலம் என்னைக் கௌரவித்துள்ளீர்கள். இது எனது வாழ்வில் மறக்கவொண்ணா நிகழ்வாகும். ஏற்கனவே மல்லிகை, ஞானம், மாருதம், ஜீவநதி, இந்தியாவின் இனியதிசைகள் போன்ற சஞ்சிகைகள் என்னை அட்டைப்பட அதிதியாக் கௌரவித்திருந்தாலும் எனது மண் தந்த கௌரவம் உயர்வானது. நான் உங்களுக்கு நன்றிக்கடன்பட்டுள்ளேன். ஆயிரம்தான் நான் வெளியில் வாழ்ந்தாலும். நானொரு மருதமுனையான் என்பதை மறந்ததில்லை. அதனை நான் எனது வாத்தியார் மாப்பிள்ளை காவியத்தில் பதிவிட்டுள்ளேன். வெண்ணிலாவில் எனக்கான கவிதையை எழுதிய கவிஞர் தம்பி மருதூர் ஹஸன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரித்துவிடுங்கள். தொடர்ந்தும் வெண்ணிலா வெளிவர எனது பிரார்த்தனைகள். வஸ்ஸலாம்.

இவ்வண்ணம்

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்.**

*16-01-2025*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கி**டைக்கப் பெற்றேன்!

மருதமுனையிலிருந்து வெளிவரும் வெண்ணிலா காலாண்டு சஞ்சிகையின் 16 வது இதழ் கிடைக்கப் பெற்றேன்.

84 பக்கங்களுடன் வந்திருக்கும் இந்த இதழில் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் பற்றிய முழுமையான தகவல்கள் அடங்கியிருக்கின்றன.

அண்மையில் மறைந்த வேதாந்தி ஷெய்கு இஸ்ஸதீன், மு.பொன்னம்பலம், காத்தான்குடி பௌஸ் ஆகியோர் பற்றிய இரங்கல் குறிப்புகளும் மருதூர் ஜமால்தீனின் திருப்பம், எம்.ஏ. மாஹிறாவின் மனதின் மாயம், எஸ்.ஏ. கப்பாரின் அப்பாவின் டயரி ஆகிய நூல்கள் பற்றிய நூல் நயக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

எச்.டி.எச். பஹ்தா எழுதிய வலியால் நனைந்த விழி, நயீமா சித்தீக்கின் உம்மா சும்மா இல்லை, கிண்ணியா சபீனாவின் தடம் மாறாப் பயணம் எஸ்.எச்.சித்தி மிஸ்ரியா அமீனின் மறுமணம் ஆகிய சிறுகதைகள் உள்ளடங்கியிருக்கின்றன. அத்துடன் 60 ஆம் பக்கத்திலிருந்து 79 ஆம் பக்கம் வரை கவிதைகள் உள்ளன.

கவிதைக் காலாண்டிதழாக வெளிவரத் தொடங்கிய வெண்ணிலா இடையில் பொதுவான இலக்கிய சஞ்சிகையாகத் தன்னை மாற்றிக் கொண்டது. ஆயினும் அட்டைப் படத்தில் வெண்ணிலா கவிதை மஞ்சரி என்று இடம்பெற்றிருப்பதை நண்பர் கப்பார் அவதானிக்க வேண்டும்.

**- அஷ்ரப் சிஹறாப்தீன்.**
*11-01-2025*

---

**வெ**ண்ணிலா மஞ்சரி 09-01-2025 திகதியன்று என் கையில் கிடைத்தது. மகிழ்ச்சி கொண்டேன். இதழாசிரியர் எஸ் ஏ கப்பார் அவர்களுக்கு மனமுவந்த வாழ்த்துகள்.

இம்முறை அதிக விடயங்களை தாங்கி அதிக பக்கங்களுடன் சிறந்தவொரு இலக்கிய ஆளுமையை முன் அட்டையில் பிரசுரித்து இலக்கிய உள்ளங்களுக்கு இன்பமளித்துள்ளது.

பலரும் போற்றும் ஒருவரை நம் மண்ணில் போற்றுதல் சிறப்பாகும். அதனை செய்துள்ள வெண்ணிலா வளம் பெற வாழ்த்துவோம்.

**- ஏ எம் கஸ்புள்ளா**
*10-01-2025*

---

**அடுத்த இதழ்: 18**
**எதிர்வரும் ஜூலை 2025**
**முதலாவது வாரம்**
**வெளிவரும்.**

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா விபரம்

தனி இதழ்: ரூபா. 150.00
தபாற் செலவு ரூபா. 100.00
மொத்தம் ரூபா. 250.00

## ஆண்டுச் சந்தா ரூபா. 1000

வங்கியில் பணத்தை வைப்பிலிட்ட பின் **0776968671** என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு வைப்புச் சீட்டின் நிழற்பிரதியையும் உங்களது தபால் முகவரியையும் அனுப்பிவைக்கவும்.

தொடர்ந்து நான்கு (4)

**வெண்ணிலா காலாண்டிதழ்கள்**

தபால் மூலம் உங்கள் வீடு வந்து சேரும்.

**வங்கிக் கணக்கு விபரம்:**

எஸ். ஏ. அப்துல் கப்பார்
கணக்கிலக்கம்: **6106068**
இலங்கை வங்கி,
கல்முனை.

S. A. ABDUL GAFFAR
A/C No. **6106068**
Bank of Ceylon,
Kalmunai.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்த வெண்ணிலா இதழ்கள்




































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்.'பர்மேஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் பிரதான வீதி, மருதமுனை Jesa Grafix இல் அச்சிட்டு ஏப்ரல் 2025இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org